Annual Subscription Rs. 6 | 14th March 1937. | Price 2 As.

# சுதேசமித்திரன்

Vol. 8 | வாரப்பதிப்பு | No. 6

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



காளஹஸ்தி ஸ்ரீ காளத்தீஸ்வரர் கோவில்.

எல்லா நோவுகளுக்கும் ஒப்பற்ற சஞ்சீவி.

# பாடால் பாம்

ஏஜெண்டுகள். தஞ்சை மாசார்ஸ் & Co. திருச்சி T. K. அப்துல் சதார் & Co. மதுரை ஜெனரல் வேர்ஹவுஸ் சேலம் P. சோமசுந்தரம் ஈரோடு ராஜா பார்மசி







அடைவதற்கு இயற்கையான

விருப்பம்

வுட்வர்ட்ஸ்

கிரைப்வாடர்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

# WOODWARD'S
## GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND




மெல்போர்ன் படகு ஓட்டப் பந்தயம்

நமது சிறுகதை

# தர்ம சங்கடம்

(ஸ்ரீமான் கி. ராமநாதன்)

1

பத்மனுபன் ஸ்டார் பாங்கின் ரங்கூன் கிளையில் மானேஜர் பதவியேற்று ஆறு மாதங்கூட ஆகவில்லை. அதற்குள் அவனுக்கு வேலையின்மேல் வெறுப்புத் தட்டவாரம்பித்தது; இரவு 8½ மணியிருக்கும். தனதறையில் ஒரு பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவன் முன்னுல் ஒரு வட்ட மேஜை; அதன் மேல் ஒரு சிறு புகைப்படம் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழிநீர்வார அதனை அணைத்து முத்தமிட்டான். பெருமூச்செறிந்தான். அதுவே அவனது ஆருயிர் மனைவி கோமதியின் புகைப்படம். கோமதி யிறந்து அன்று மூன்று வருஷங்களாகின்றது. முதல் முதலாக அவளை நேருக்குநேர் கண்டபொழுது அவள் வெட்கத்தினுல் கன்னங்கள் சிவக்க புடவைக் கொசுவத்துடன் சேஷ்டை செய்துகொண்டிருந்த காக்ஷி அவன் மனக்கண்ணே நிலவியது.

அவளோடு இன்ப வாழ்க்கை நடத்தவேண்டும் என்று அவன் போட்ட திட்டங்களெல்லாம் ஒரு மெல்லிய மலர் மாலையைக் கொடிய கரங்கள் அறுத்தெறிவது போலத் தகர்க்கப்பட்டன. அவள் தான் இறந்தாள். அவர்கள் அன்பை இணைக்கப் பிறந்த குழந்தையையாவது காலன் விட்டுவைத்திருக்கக் கூடாதா? அவளது பிரதிபிம்பம் போன்ற அப்பெண் சிசுவையும் உண்டுவிட்டான் பாவி. அவளது மகிழ்ச்சியின் ஒளியைத் தரும் மலர் முகம் மறைந்துவிட்டது. அவனது வாழ்க்கை வேப்பங்காய்க்குச் சமானம்தான். காதலின் செடி முறிந்துவிட்டது. பாலை வனத்தில் பட்டுப்போன மரம் போன்றது அவன் வாழ்க்கை. உயிரற்ற சடலம்போல அவன் உலகத்திடை உலவுகின்றுன். பிதற்றிக்கொண்டே உறங்கிவிட்டான்.

காலையில் உடைதரித்துக் கொண்டு ஆபீசுக்குள் நுழைந்தான். அவன் முதல் முதலில் கண்டது லோலாவைத்தான். லோலா ஒரு பர்மியப் பெண் டைபிஸ்ட். அவளது பொன் போன்ற மேனியும் கருத்து நெய்த்துச் சுருண்ட குழலும் கயல் விழிகளும் அழகை வாரிச் சொரிந்தன. அவளது அழகு அவனது கனவுலகிலுள்ளது போன்றிருந்தது. தனிமை வேண்டியே வந்தான் பத்மனுபன். ஆனுல் மண வாழ்க்கையில் இன்பமிழந்த அவன் லோலாவின் புதுமையான இளமையின் எழில் கண்டு மயங்கிவிட்டான். அவளது மருண்ட கண்களைப் பார்க்கும்போதே அவன் மனம் கலக்கமடையும். கோமதியை இழந்த மூன்று வருஷங்களில் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிருன். ஆனுல் லோலாவின் பேரில் மட்டும் ஒரு விவரிக்க முடியாத பாசம் ஏற்பட்டது.

லோலா 18 வயது யுவதி. கந்தர்வன் போன்ற பத்மனுபனைக் கண்டு பிரமைகொண்டாள். அவனது கண்களின் பிரகாசமும், முகத்தில் தாண்டவமாடும் சாந்தமும் அவளைக் கவர்ந்தன. ஒரு ஆண்மகனின் வாழ்க்கை நலத்தில் பங்கெடுத்துக்கொள்ளத் தனக்கும் உரிமையுண்டு என்பதையுணர்ந்தாள். அவனிடத்தே காதல் அரும்பத் தொடங்கியது. கொந்தளிக்கும் கடலில் சந்திரன் சோபை போலவும் கருமுகிலால் மப்பியிருக்கும் ஆகாயத்தில் வானவில் போலவும் கடுஞ்சுரத்திடை ஒருபசும் பொழில் போலவும் அவனது சாரமற்ற தனிமை வாழ்க்கையை இனிமையாக்கத் தோன்றினுள் லோலா. காதலுக்குக் கண்ணில்லை. ஒருவரையொருவர் தம்முள்ளமீர்த்தலால் காதல் கொண்டனர். ஆனுல் இது அவர்களை மிருக இச்சையில் தள்ளிவிடவில்லை.

2

ஆறு மாதம் கடிது பறந்தது. இப்பொழுது பத்மநாபன் பாங்கி அறையைக் காலி செய்துவிட்டான். பெய்கான் என்னும் கிராமத்தில் தனிபங்களாவில் இருக்கிருன். லோலாவைத் தனது சொந்தக் காரியதரிசியாகவும் வைத்துக்கொண்டான். காதல் என்னும் மாணிக்கத்தால் அவனை விலைக்கு வாங்கிவிட்டாள் அந்நங்கை. அவளது திவ்யரூபத்தின் ஆகர்ஷணத்தில் அகப்பட்டுக்கொண்டான் பத்து. கோமதியின் நினைவு சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. கோமதி இறந்தவுடன் அவனது இருதயம் நீலபுஷ்பமாகிவிட்டது. லோலாவுடன் காணும் இன்பக்கனவுகள் அப்புஷ்பத்தின் மத்தியில் வெண்மைப் புள்ளிகள் போன்று படிந்திருந்தன.

பௌர்ணமி இரவு. வெண்ணிலவு பால்போல் காய்ந்துகொண்டிருந்தது. இருவர் மனமும் தீயினுல் தகிக்கப்பட்டது போல உணர்ச்சி வேகத்தால் கொதித்துக் கொண்டிருந்தன. தோட்டத்தில் ஒரு பளிங்கு மேடைமேல் இருவரும் அமர்ந்திருந்தனர். அவன் அவளது சண்பக அரும்புகளன்ன நீண்ட விரல்களைப்பற்றி அவளது முகமண்டலத்தையே நோக்கிக்கொண்டிருந்தான். ஆனந்தத்தால் பொலிவுற்று விளங்கும் அவளது கஞ்சனக் கதுப்புகளை விளையாட்டாகக் கிள்ளினுன். காற்றினுல் அலைக்கப்படும் மயிர் சுருளைகளை அடக்கும் பாவனையாக அவள் தலையை வருடினுன்.

“லோலா! என் கண்மணி! நீயே எனக்குப் புனர் ஜன்மமளித்தாய். துவண்டு கிடக்கும் என் வாழ்க்கை மலர் உன்னுல்தான் மறுமலர்ச்சியடையும்.”

“பான்” என்ருள் லோலா. அவள் பர்மா மோஸ்தரில் பான் என்றுதான் அழைப்பது. அவளது இமைகளில் ஒரு இனிய கூச்சம் நிலவியது. “துருவத்தினிடத்துக் காந்தம் கொண்டுள்ளதுபோன்று உன்னைக் காதலிக்கிறேன்” என்ருள்.

அவள் வார்த்தையில் இனிமை மிளிர்ந்தது. என்ன உவமை? அவனையறியாமலேயே அவன் கரங்கள் அவளை யணைத்துக் கொண்டன. ஐந்து நிமிஷம் தன்மயமற்றிருந்தார்கள். ஒரு கொடிய காற்று ஒரு சிறு பனித் திவலையை அவள் மார்பின்மீது மோதியது. திடுக்கிட்டு எழுந்தாள்.

“ஊரார் பலவாறு குசுகுசுவென்று பேசிக்கொள்கிருர்களே” என்ருள் கவலை தேங்கிய முகத்துடன்.

“போடி அசடு! என் இதய நாடி ஒடுங்கும்வரை உன்னைக் கைவிடமாட்டேன்.”

என்ன? காதல் தெய்வத்தின் சக்திதான் என்னே? சற்றுமுன் “உன்னையன்றி என் இருதயத்தில் குடியிருக்கத் தகுதியுள்ளவர் யார்?” எனக் கோமதியின் படத்தின்முன் கதறிய பத்து, லோலாவுக்கு அடிமையாகிவிட்டான்.

லோலாவின் காதல் சாதாரணமல்ல. மானேஜர் என்ரு காதலித்தாள்? பர்மாக் கள்ளிகள்போல் மயக்கிப் பணம் பறிக்கவா? அவளுடைய மதத்தில் சேர்க்கவா? இல்லை! அவளது காதல் தெய்வீகமானது. பளிங்குக் கல்போன்ற உறுதியுள்ளது. பனிதோய்ந்த பத்ம மலர்போன்றது அவள் குழந்தை மனம்.

3

இவ்வித வாழ்க்கை ஒரு மாதமாகக் கழிந்தது. ஒரு நாள் லோலா வந்திருந்தாள்.



பம்பாய், மாடுங்காவில் ஸ்ரீ தியாகராஜ உத்ஸவம் சமீபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டவர்கள் படத்தில் காணப்படுகின்றனர்.

கோமதியின் படத்தைக் கண்டாள். அவள் மூளையில் ஒரு வெறுப்பும் கர்வமும் ஏற்பட்டது.

"பான்! இந்தப் பட்டிக்காட்டு பியூட்டிக்கா இத்தனை அழுகை?" எனத் திடீரெனக் கூறினுள். அவள் வார்த்தைகளில் குறும்பு தொனித்தது. அவள் இதைச் சாதாரணமாகத்தான் சொன்னுள். விளையாட்டாகத்தான் சொன்னுள். உண்மையைத்தான் சொன்னுள். ஆனல் ஒரு கூரிய ஈட்டியை எடுத்து அவனது மர்மத்தில் எறிகிறேமென்று அவளுக்குத் தெரியாது. இந்தச் சொல் அவனது பழைய புண்களைக் கிளறிவிட்டது. அவனது மனத்தில் ஒரு பெரிய வருத்தம் உண்டாக்கியது. சே! கேவலம் ஒரு பர்மியப் பெண்! டைப்பிஸ்ட், தனது காதலின் கனியைக் குறை கூறுவதா? தொண்டை யடைத்துக் கொண்டது. ஒரு பெரிய வெறுப்பு முகத்தில் தாண்டவமாடியது. அவன் பேசவேயில்லை. லோலாவுக்கு ஒன்றும் புரியவில்லை. பிரமை பிடித்தவள்போல் நின்றிருந்தாள். பின் மௌனமாக அவரவர் வேலையைக் கவனித்தனர்.

4

மறுநாட் காலை பத்மனுபன் ஆபீஸ் அறைக்குச் சென்றான். பியூன் இரண்டு கடிதங்களைக் கொடுத்துச் சென்றான். இரண்டும் சென்னையிலிருந்து வந்திருந்தன. முதற் கடிதம் தாயினிடமிருந்து. அது கீழ்வருமாறு:—

"அன்பார்ந்த பத்துவுக்கு ஆசிர்வாதம். நீ எத்தனை நாளைக்குத்தான் எங்களை விட்டுட்டுக் கண்காணு தேசத்திலே இருக்கிறது. கோமதிதான் போயிட்டா. அவளை நெனைச்சு நெனைச்சு என்ன பிரயோஜனம்? போனவ திரும்பி வருவாளா?"

"எனக்கோ வயசாயிடுத்து. நான் செத்தா பில்லுப் பிடுச்சுத் தெவசம் சேய ஒருகால் கட்டைக் கட்டிப் பாத்துட்டுச் சாகணும் இன்னு கிழட்டு மனசு அடிச்சுக்கறது. வயசாயும் பாசம் விடலே. தஞ்சாவூரி லேந்து சாமிநாதய்யனும். பெண் மூக்கும் முழியுமா கிளியாட்டமிருக்கு. வரதக்ஷிணை 2000 தரேன்னுன். உடனே லீவு எடுத்தூண்டு புறப்பட்டுவா. மஞ்ச சோமனைக் கண்டால் தான் என் நெஞ்சு வேகும். என் அப்பன் என் வார்த்தையைத் தள்ளாதே"

இப்படிக்கு
கல்யாணி.

மற்றொன்று தலைமையாபீசிலிருந்து,

"தங்கள் உதவி இன்றியமையாதிருப்பதால் உடன் புறப்பட்டு வரவும்" இது தந்தி.

அவன் மனத்தே ஒரு பெரும் போராட்டம் ஆரம்பமாயிற்று. உரக்கச் சிரித்தான். அது மனோவிகாரத்தின் வெளித் தோற்றம். எதிரெதிராக வரும் இரு நீரோட்டங்கள் ஒன்றையொன்று தாக்கும் பொழுது பெரு வெள்ளமாக மாறுகின்றன. அதுபோலவே அவன் மனமும் தாயின் கடிதம், கோமதியின் நினைவுகள், லோலாவின் காதல் முதலிய வெவ்வேறு உணர்ச்சிகளால் அலைக்கப்பட்டது. லோலா மெதுவாக உள்ளே நுழைந்தாள். இரு கடிதங்களையும் அவளிடம் வீசியெறிந்தான். படித்துப் பார்த்தாள். கண்களில் நீர் மல்கியது பேரிடி போன்ற இச் செய்தி.

"பான்! நம் காதல் சாதல் யாவும் கனவுதானு?" அவள் மனம் சுக்கு நூருகப் பிய்ப்பது போல வருந்தினுள். முன்தினமே அவன் பேசாதது அவள் மனத்தைக் கோல்கொண்டு குத்திக்கொண்டிருந்தது.

"லோலா, என்ன சொல்கிருய்?" என்ருன் வெறித்த கண்களுடன்.

காற்றிலலைபட்ட இளந்துளிரைப் போன்று அவள் நடுங்கினுள். சிவந்த கண்களோடு கொஞ்சும் பாவனையாக:

"பான்! உன் பாதங்களுக்கு என் தூய்மையையே என் என் உயிரையே அர்ப்பணம் செய்யத்தயார். நானும்வருகிறேன்."

"ஓ உன் ஜாதி! மதம்!"

"பான்! காதலுக்காக உனக்கு வேலைக்காரியாகவும் இருக்கத் தயார். ஜாதி மதம் யாவையும் துறப்பேன்" என அடக்க முடியாத துக்கத்தால் குளறினுள். அவளது இதயத் துடிப்பைக் காண்பதற்கு அவனது ஸ்தூலக் கண்களுக்கோ மூளைக்கோ சக்தி போதாது.

அறைபட்டுக் குற்றுயிராய்க் கிடக்கும் பெண்மானை வேங்கை உணர்ச்சியற்றுப் பார்ப்பதுபோல அவளை நோக்கினுன். அவன் மனத்தே பெரும் யுத்தம். அவன் இதயமென்னும் நிலத்தில் முதலில் தளிர்த்த காதற் செடி முறிந்து போயிற்று. ஆனல் மற்றொரு செடி உயிர் பெற உரமில்லையா? இதயத்தில் கோமதியின் பிம்பம் குடிகொண்டுள்ளது. ஆனல் அங்கே வேருெருவளுக் கிடமில்லையா? கோமதியின் ஆத்மா ஒரு சக்களத்தியை விரும்பாது போலும்! கல்லெனச் சமைந்துவிட்டான்.

குளத்தில் கல்லெறிந்தால் தோன்றும் அலைகள்போல அவள் கண்களில் எழுந்தன. துக்கத்தினுல் இதயம் நிரப்பப்பட்டிருக்கும்போது வார்த்தைகள் எங்ஙனம் வரும்? அவளது இன்பம் மாலைக் காற்றில் எடுத்துச் செல்லப்படும் விளக்குப் போன்றது. ஜோதி சிறிது மின்னியது, உடன் அவிந்தது. கால்கள் தேகத்தின் பளுவைத் தாங்காது ஊசலாடின. திடீரென்று விழுந்து விட்டாள். பத்மனுபனின் பிரமை கலைந்தது. அவளை எடுத்துக் கட்டிலின் மேற் கிடத்தினுன்.


இந்தியா கவர்ன்மெண்டு வைத்திய பட்டதாரியும், கவர்ன்மெண்ட் இந்தியன் மெடிகல் ஸ்கூல் ஹாஸ்பிடல் இவைகளின் நிர்வாஹ கவர்னிங்பாடி, மெடிகல் அட்வைஸரி கமிட்டி, & ஸெண்ட்ரல் போர்டு இவைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்திய கலாசாலையின் மெடிகல் டிப்ளோமா பட்ட பரிக்ஷைகளுக்கு பரிக்ஷாதிகாரியுமான,

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய


(Sastriar in Govt. Medical dress)

## மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத்துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

## ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

## ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியே பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1-க்கு 0-8-0. வி. பி. வேறு. எங்கும் கிடைக்கும்.

**மஹா பில்வாதி தைலம்:**—நேத்திர ஸம்பந்தமான எல்லா ரோகங்களையும் கண்டித்து, கண்களுக்கு நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய அப்பியங்கன தைலம். 6 அவு. கொண்ட சீசா 1-க்கு ரூ. 2. வி பி. வேறு.

**ஆனந்த படை நிவாரணி:**— இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பி வாராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணு 12. வி. பி. வேறு.

**பிரமதாரோக பஞ்ஜனி:**—மூத்திர நாளத்தின் எரிச்சல், வெள்ளை முதலிய வெட்டை ஸம்பந்தமான துஷ்டரோகங்களைக்கட்டாயம் தீர்க்கும். சீசா 1-க்கு ரூ. 3. வி. பி. வேறு.

**ஆனந்தாஞ்சனம்:**—ஸகலவிதமான வலிகளுக்கும், கீல்பிடிப்புகளுக்கும், தேவாமிருதம் போன்றது. சீசா 1-க்கு அணு 8. வி. பி. வேறு.

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனும்.

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,**

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.


அவள் முகத்தை நோக்கினுன். பால் சொட்டும் அவள் முகம் மாசற்றிருந்தது. தன் தாயின் பரிவுள்ள முகமும் தன் இன்பவல்லி கோமதியின் சூக்ஷ்மரூபமும் ஒரு பக்கம் இழுக்கின்றன. பேதை லோலாவின் ஒப்பற்ற காதல் என்னும் பாசம் மற்றொரு பக்கம் இழுக்கிறது. அவன் பெருத்த தர்மசங்கடத்தில் அகப்பட்டு விழிக்கிறுன்.

"லோலாவின் புனிதக் காதல்! மதம் சே! என்ன மதம்? மனிதன் செய்ததுதானே? இங்கேயே இருந்து விடலாம். ஆனல் வயோதிகத் தாயின் பரிதாபகரமான முகம்! விதவைத் தமக்கையின் ஆதரவற்ற நிலமை! மேலும் என் இன்பவல்லியைக் குறை கூறினுளல்லவா? சே! ஊர் சென்று விடுவோம்! ஓ! பேதை லோலா என்னையே தஞ்சமாகக்கொண்டவளல்லவா? ஏதோ விளையாட்டாகத் தானே கூறினுள்! அவளது பரிசுத்தமான காதலுக்கு என் உயிரையும் கொடுக்கலாம்." மனம் குழம்பிப் போய்மூர்ச்சையாய்விட்டான்.

5

மனித சஞ்சாரமற்றுப் பாழ் நிலைபோலத் தோற்றுகிறது நடுப்பகல். அது போன்று அனுதையாக விடப்பட்ட நங்கை லோலா, அவளது விழிக் கடையில் நீர் மணிகள் துடிக்கின்றன. தலை மயிர் கண்டபடி காற்றில் அலைகிறது. ஒரு காலில் செருப்பைக் காணேம். உலகம் உறங்கும். யாவும் உறங்கும். நான் என்றும் உறங்கேன் என்று ஐராவதி ஓடிக்கொண்டிருக்கிருள்.

"பான் ஒரு முத்தம்! எங்கே ஓடிவிட்டாய்! பர்மாக்காரி மாயக்காரியல்ல!" எனப் பிதற்றிக்கொண்டே ஒரு பைத்தியக்காரி அலைகிருள். எதிரொலி எச்சுக்காட்டுவது போலத் தொனித்துக் கொண்டிருந்தது? அவளுக்கு யார் பதிலுரைப்பது?

சென்னைச் சிந்தாதிரிப் பேட்டையில் தள்ளாக் கிழவியொருத்தியும் விதவை நங்கையொருத்தியும் இன்று வருவான் நாளை வருவான் என்று எதிர்பார்த்து ஏமாந்து விட்டார்கள். கிழவி மனமுடைந்து விட்டாள். விதவை மகளின் உழைப்பால் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறுர்கள். ரங்கூனில் பாங்கின் கிளையில் புதியமானேஜர் வந்து விட்டார். காசிக்குச் சென்றிருந்த சில யாத்ரீகர்கள் பத்துவின் சாயலாக ஒரு யதியைக் கண்டதாகப் பேசிக்கொண்டார்கள். யாரறிவார் உண்மையை?

நமது தொடர் கதை.



# ராதா

(திருமலை ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளை)

## முன் கதைச் சுருக்கம்

பாற்கடல் நந்தகோப முதலியார் மகேந்திரத்தில் காட்டு இலாகாவில் உத்தியோகத்திலிருந்தார். அவருடைய குமாரி ராதாவிற்கு அமரேசன் படிப்புச் சொல்லிக்கொடுத்து வந்தார். நச்சுமுதலி நந்தகோபருக்கு மைத்துனன் முறை. தண்டபாணியின் சிற்றப்பன் நச்சுமுதலி.

நந்தகோபர் மனைவி அனந்த கல்யாணியின் பேச்சுக்குப் புறம்பாக நச்சுமுதலியின் சூது காரணமாக ராதாவிற்கும் தண்டபாணிக்கும் விவாகம் நடைபெறுகிறது. அனந்த கல்யாணி ஒரு பிள்ளையைப் (மாதவன்) பெற்று இறந்துபோகிறாள். நச்சுமுதலி தன் குமாரியான காளத்தியை நந்தகோபருக்கு விவாகம் செய்து வைக்கிறார்.

நச்சுமுதலியின் துஷ்கிருத்தியங்களுக்காக அவர் சிறைத் தண்டனையடைகிறார். சிறையிலிருந்து வெளிவந்தபின் தனக்குக் கீழ்ப்படியாத தண்டபாணியைச் சதிசெய்து கொன்றுவிட ஏற்பாடு செய்தார். காளத்தி நந்தகோபருடன் சண்டையிட்டுப் பிறந்தகம் சென்றாள்.

டாக்டர் நாயனார் சென்னைப் பத்திரிகையொன்றின் ஆசிரியர். அவர் தமது சுற்றுப்பிரயாணத்தில் கொத்துவால் தோப்பிற்கு வந்தார். அங்குதான் தற்சமயம் நந்தகோபர் தமது வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுக் குடும்பத்துடன் வசித்து வந்தார். நந்தகோபர் வீட்டிலில்லாத சமயம் மாதவனுக்கு நோய் உண்டாயிருந்தது. அதை நாயனார் குணப்படுத்தினார். பின்னிட்டு அவர் அவ்வீட்டு ரகசியங்களை அறிகிறார்.

காணாமற் போயிருந்த நந்தகோபரின் சகோதரி கற்பகமும், அந்தமான் சென்றிருந்த அவளது கணவர் கார்த்திகேயரும் வீடுதிரும்புகின்றனர். ராதாவின் மூலம் டாக்டர் நாயனார், அமரேசன் என்பதை அறிந்த கற்பகமும் கார்த்திகேயரும் நாயனாருக்கு ஒரு கடிதம் எழுதி நந்தகோபரிடம் கொடுத்தனுப்புகின்றனர். நாயனார் அதைப் படிக்கிறார்.

கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

"கொத்துவால் தோப்பு

சனிக்கிழமை, மாலை 9 மணி,

எனது அருமைக் கண்மணி அமரேசனுக்கு, அன்னைமலை அம்மையார் அன்பாய் ஆசிர்வதித்து எழுதிக்கொண்ட அந்தரங்கக் கடிதம்.

நேற்று காலையில் நீ மருந்து கொடுத்துக் காப்பாற்றிய மாதவனுடைய தகப்பனார்தான் இந்தக் கடிதம் கொண்டு வரும் நந்தகோப முதலியார். அவருடைய தாயாரும் மாதவன் பாட்டியுமான பூசையாச்சியிடம் நீ நேற்று மாலையில் பேசிக்கொண்டிருந்த பொழுது அவள் தன் மகள் காணாமற்போன கற்பகம் என்னும் ஒருத்தியைப்பற்றி உன்னிடம் பிரஸ்தாபித்தாளல்லவா? அந்தக் கற்பகம் நான்தான்; அன்னைமலை அம்மையாரும் நான்தான்; உன்னைப் பெற்ற தாயும் நான்தான்.

என் செல்வக் குழந்தாய், உன் பிதா கார்த்திகேயபிள்ளை பேரில் வந்த கொலைக்கேஸ் சேலத்தில் விசாரணையான பொழுது நீ என் வயிற்றில் ஜனித்தாய். உன்பிதாவை நான் ஆயுள்பரியந்தம் பிரியும்படி நேர்ந்த கொடிய துக்கத்தையும், கருப்பத்திலிருந்த உன் பொருட்டாய்ச் சகித்து உலகில் உயிர் வைத்து வாழ்ந்தேன். உன்னுடைய பிதாவும் அப்படியே உத்தரவு செய்து விட்டு அண்டமானுக்குப் போனார்கள்.

அதன்பின், நான் உன் பிதாவைச் சென்னையில் வழியனுப்பிவிட்டு, மைலாப்பூரில் உன்னை வளர்த்த வேலைக்காரியாகிய பண்டாரத்தி பூனைக்கண்ணி வீட்டில் உன்னைப் பெற்றெடுத்தேன். நீ ஒரு வயதாகும்வரை உன் கூடவேயிருந்து உன்னை வளர்த்துவிட்டு, அதன்பின் நீயும் நானும் ஒன்றாயிருப்பது எப்படியாவது நமது விரோதி நச்சுமுதலிக்குத் தெரிந்தால், அவனால் உனக்கு மோசம் நேரிடுமென்று பயந்து, உன் பிதா ஆதியில் என்னிடம் சொல்லிவிட்டுப்போன உத்தரவின்படியே, உன் பிதாவைக்காணும்வரை நான் உன்னுடன் ஒன்றாய் வாழ நாணி, உன்னைப் பூனைக்கண்ணியிடம் ஒப்புவித்துவிட்டு, அன்னைமலை மடத்தில் பரதேசி வேடத்தோடு வேலை செய்து பிழைத்தேன். அது முதல் நீ ஒற்றைப்புளி சித்தாந்தம் செட்டியார் வீட்டில் வளர்ந்தாய்.

நீ பத்து வயதுக் குழந்தையாகும்வரை நான் அடிக்கடி மைலாப்பூருக்கு வந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போனதும் உனக்குத் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்ததும் உனக்கே இதுவரை ஞாபகமிருக்கும். அப்பொழுதெல்லாம் செட்டியாரும் அவர் மனைவியுமே உன்னுடைய பெற்றோரென்று நீ நினைத்திருந்தபடியாலும், உன்னுடைய சிசுப்பருவத்தில் எங்கள் நிலைமையை நீ அறிந்தால் கவலையால் மெலிந்துவிடுவாயென்றஞ்சியும், உன் தாய் நான்தானென்ற ரகஸ்யத்தை வெளியிடாதபடிப் பூனைக்கண்ணியிடம் சொல்லி வைத்திருந்தேன்.

இதற்கிடையில், நான் காசி யாத்திரை போய்விட்டு மறு வருஷம் திரும்பிவந்து உன்னைத் தேடியதில் பண்டாரத்தி பூனைக்கண்ணியே இறந்து போய்விட்டாள். உன்னை வளர்த்த சித்தாந்தம் செட்டியாரையும் காணவில்லை. அவர் இன்னார் இன்ன ஊர் என்பதையும் பெண்பிள்ளையாகிய என்னால் துலக்க முடியவில்லை. இவ்வாறாக, சென்ற பதினைந்து வருஷகாலமாய் நீயிருக்குமிடம் தெரியாமலும் உன் பிதாவின் வரவையெதிர்பார்த்தும் என் காலத்தைத் தள்ளிவந்தேன்.

முடிவில், இரண்டு வாரத்துக்கு முன் உன் பிதா அண்டமானிலிருந்து திரும்பி வந்து, நாங்களிருவரும் சந்தித்துக்கொண்டபின், உன்னைப்பற்றியும் சித்தாந்தம் செட்டியாரைப்பற்றியும் விசாரித்ததில் அவர் ஒற்றைப்புளியிலுள்ளவரென்று தெரிந்து, அங்கேபோய் உன்னைத் தேடினோம். செட்டியார், உன் விரோதியாகிய அவ்வூர் அரசன் நரபதிக்குப் பயந்து ஒன்றுமே தனக்குத் தெரியாதென்று விழுங்கிவிட்டார். அமரேசனென்ற உன் பெயரையே அந்த ராஜ்யத்தில் உச்சரித்தால் உயிர்மோசம் வருமென்று பயமுறுத்திவிட்டார். ஆனால், விசாரித்ததில் நீ ஏழு வருஷத்திற்கு முன்னமே போய்விட்டதாயும் அதன்பின் நீ அமெரிக்காவுக்குப் போய்விட்டதாயும் தெரிந்தது.

அமெரிக்காவில் உன் விலாசத்தை எப்படிக் கண்டுபிடிப்பதென்ற கவலையுடன் சென்னைக்குத் திரும்பியபின், உன் மாமன் நந்தகோபன் எங்களைக் கண்டு இன்று காலை இவ்வூருக்கழைத்துக் கொண்டு வந்தான். உன் முகத்தைக் காணும்வரை நான் உன்னைப் பெற்ற ரகஸ்யத்தை ஒருவரிடமும் சொல்வதில்லையென்ற பிரதிக்ஞையுடன் இருக்கின்றோம். இக்கடிதத்தில் கண்ட விஷயங்களொன்றையும் உன் மாமனிடம்கூட நாங்கள் வெளியிடாதிருந்தோம்.

இன்று மாலையில், உன்னை இன்னாரென அறியாமலே, உன்னுடைய அருமையான பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கும்பொழுது, உன் கொழுந்தி ராதாவும் உன் பாட்டியும் சொன்னதுப்பின் பேரில் நீதான் எங்கள் பிள்ளை அமரேசனென்று நிச்சயித்து, இந்தக் கடிதமெழுதியனுப்பியிருக்கின்றேன்.

உனது அருமைத் திருமுகத்தைக் கண்டு ஆனந்திப்பதற்கு அளவற்ற ஆவல்கொண்டிருக்கும்

உனது அன்புள்ள மாதா
கற்பகம்

அநுமதியின்படி
உன் பிதா
கார்த்திகேய பிள்ளை.

என்றிவ்வாறு எழுதப்பட்டிருந்த கடிதத்தை நின்ற நிலையிலேயே வாசித்தார் நாயனார். திடுக்கென்ற ஆச்சரியத்துடன் நாற்காலியில் உட்கார்ந்து அங்குமிங்கும் பார்த்தார். மடக்கிய கடிதத்தை, மறுபடியும் எழுந்து நின்று இரண்டு முறை வாசித்தார். தம் மனதில் அடக்க முடியாத இவ்வளவு பெரிய ஆச்சரியகரமான ஆனந்தத்தினால் தான் அடைந்த பூரிப்பை, பக்கத்தில் பேசிக்கொண்டிருக்கும் நாயுடு, நாவலர், நந்தகோபர் முதலியவர்களறியாதவாறு சமர்த்தாய் அடக்கிக்கொண்டு ஒரு நிமிஷநேரம் கவிழ்ந்த தலையுடன் ஆலோசனை செய்தார்.

**மனோரஞ்சனி**

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. 1937 ஜனவரி முதல் சம்சார சன்னியாசி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவரும். இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.



ராதா, "அப்பா, இதோ வந்துவிட்டேன்" என்று வந்து எல்லார்க்கும் அன்னம் படைத்தாள்.

கடிதத்தைச் சட்டைக்குள் வைப்பார்; பின்னுமெடுப்பார். சாதாரணமாய், எப்பொழுதும் நீங்காத புன்னகையுடன் விளங்கும் நாயனுருடைய நகைமுகம் அப்பொழுது ஏதோ ஒரு பிரமிப்பான தோற்றத்தைக் காட்டிற்று; கண்களிரண்டும் ஒரு வஸ்துவையேனும் ஒரு ஆளையேனும் குறிப்பிட்டுப் பாராமல், நானுவிதமாய்ச் சுற்றிச் சுற்றி, கிழக்கு மேற்கும் தெற்கும் வடக்கும் கீழுமேலுமாய் மாறிமாறிச் சென்று கொண்டிருந்தன. இதற்குள்,

சுலோ:—மிஸ்டர் நாயனுர், பங்களாவுக்குப் புறப்படுவோமா?

நாய:—(நந்தகோபரை நோக்கி) நமஸ்காரம்; முதலில், அடியேன் தங்களைக்கண்ட ஞாபகமில்லையென்று சொன்ன குற்றத்தை மன்னிக்கவேண்டுகிறேன் (என்று எழுந்து நின்றுகொண்டு) மிஸ்டர் நாயுடுகாரு ஐயா, நாவலர்வாள், தாங்கள் எனக்காகக் காத்திருக்கவேண்டாம். நான் இன்றிரவு முதலியாரவர்கள் வீட்டில் தாமஸிக்கப்போகிறேன். எல்லார்க்கும் நமஸ்காரம்.

என்று சகல நண்பர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு நந்தகோபர் முகத்தைப் பார்க்கவும், அவரும் புறப்படத்தயாராய் எழுந்து நின்றுர். உடனே இருவரும், ஒன்றும் பேசிக்கொள்ளாமல், மடமடவென்று மண்டபத்தை விட்டிறங்கி, நந்தகோபர் பங்களாவை நோக்கி வடக்கு முகமாய் நடந்தார்கள். இதற்குள் ஜனக்கூட்டங்களெல்லாம் முற்றும் கலைந்துவிட்டபடியால், இவர்கள் இருவரும் மின்சார விளக்கு வரிசைகளினூடாய் விரைவாய் வருவதை நந்தகோபர் வீட்டு முற்றத்தில் நின்ற கார்த்திகேயர் கற்பகம் இருவரும் நன்ருய்க் கண்டுகொண்டு "வந்து விட்டான் அமரேசன்! இவன்தான் அமரேசன்! வந்து விட்டான்!" என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டே, ஆனந்த பரவசர்களாய், தலைவாயிலில் வந்து நின்றுர்கள். இதற்கிடையில், நாயனுர் இன்னுரென்ற ரகஸ்யத்தை அறியாமலே, ராதா, பூசையாச்சி, அன்னபூரணி மூவரும் வேடிக்கையாய் வந்து முற்றத்தில் நின்று, டாக்டர் நாயனுர் வரவை யெதிர்பார்த்துக்கொண்டு நின்றுர்கள். ஆனுல், அமரேசன், தாய் தகப்பனற்ற குழந்தையென்பதை ஏழு வருஷங்களுக்கு முன்னமேதெரிந்தவளாகிய ராதாமட்டும், பலவிதமான ஆனந்தசந்தேகத்துடன்—அதாவது நாயனுருக்கும் தன் மாமன் மாமியர்க்குமிடையில் ஏதோ ஒருவிதப் பலமான த்வந்த்வமிருக்க வேண்டுமெனவும்—அநேகமாய், "நாயனுர் எனது அத்தை மகனுயிருந்துவிடமாட்டாரா?" என ஆவ


# உடம்புக்கு எப்போதும் சுகம் வேண்டும்.




குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் சாதாரணமான தூள் அல்ல. அது உல்லாசமும், ஆரோக்கியமும் ஆசரிக்கச்செய்யும், ஏனென்றல் அது ஒரு விசேடமான முறையாக மருந்தூட்டிச் செய்யப்பட்டது. குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் அதிக சுத்தமும் நேர்த்தியுமானது; அதற்கு ஈடானதூள் ஒன்றும் கிடையாது. அது பக்கு வந்த இடங்களைத் தேற்றி உடனே சுகமுண்டாக்கிறது. வேர்வை விடுவதை இந்தத்தூள் தணிக்கிறது. திரேக முழுதற்கும் அது உல்லாச சுகத்தைக் கொடுக்கிறது. வைத்தியர்கள் குழந்தைகளுக்கு உபயோகப் படுத்தும்படியாக சிபார்சு செய்திருக்கிறுர்கள்; நோயாளிகளுக்கும், சுமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் உபயோகப்படுத்தும் படியாக சொல்லியிருக்கிறுர்கள்; ஏனென்றல் இந்த தூள், அதிக சுத்தமானது மல்லாமல் மகா சவுக்கியத்தைக் கொடுக்கும்.

குடிகூரா டால்கம்(Cuticura Talcum) தூளின் வாசனை ஒப்பில்லாதது. அது இனிப்பான பரிமள வாசனையோ டிருப்பதுமல்லாமல், தோலை அதிக அழகாக்கி சந்தோஷத்தை உண்டுபண்ணும். அது உடம்புக்கு வாசனையும் கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

## குடிகூரா டால்கம்
## CUTICURA TALCUM

இன்றைக்கு ஒரு டப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் வாங்கு.





# இருமடங்கு அழகு...

—தலைமயிரை வாரி விட்டிருப்பதால்

வாசனைத் தேங்காய் எண்ணெய்



உங்கள் தலைமயிர் அழகுடனில்லையா? அப்படியாயின் வாசனைத் தேங்காய் எண்ணெயைக்கொண்டு நன்கு தேயுங்கள்; மயிர்க்கால்களில் இரத்த ஓட்டம் பெருகும். தலை மயிர் புதிய அழகுடன் விளங்கும்—ஆரோக்கியமாகவும் வளரும்.

கேட்டியர்ன பிரிலியண்டைன்.



உங்கள் தலையும், மயிரும் மிகவும் வறண்டு கிடந்தால் 'டாம்கோ' கெட்டி பிரிலியண்டைனை உபயோகியுங்கள்; மினுமினுப்பு ஏற்படும். தலை "பிசுக்"காகாது

டாம்கோ விற்பனை இலாகா
19, A வாணியர் தெரு
மதராஸ்.

இதர டாம்கோ கூந்தல் தயாரிப்புகள்: ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை மிகுந்த மருந்து பூர்வமான கூந்தல் டானிக், லைம்ஸ் & கிளிஸரின் முதலியன.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்., பம்பாய்.

(T H 409)

னும் கவலையும் ஐயமுங் கலந்த மனதினளாய்—தன் அத்தையிடம் மாறிமாறி விசாரித்தும் உண்மையைக் கிரகிக்க முடியாமல்—கற்பகத்தின் பின்புறமாய் ஒண்டி நின்றாள். இதற்குள் நந்தகோபரும் நாயனரும் கிட்ட நெருங்கவே, கார்த்திகேயரும் கற்பகமும்—வானத்திலெறிந்த பூம்பந்து கீழே விழுந்து கசங்கிவிடாமல் அண்ணுந்து பிடிப்பவர்கள்போல்—ஆவென்று கைகளை விரித்து நீட்டிக்கொண்டு, தங்களை நோக்கி ஆவலாய் விரைந்து வரும் செல்வக் குமாரனை—பதினுன்கு வருஷமாய் மாதாவைப் பிரிந்து வாடிய மைந்தனை—பிதாவின் உருவத்தைக் கனவிலும் கண்டறியாத காணுப்புதல்வனை—கல்விக் கடலையனைய தங்கள் கண்மணியை—அமரேசச் செல்வனை—அமரேச நாயனரை நோக்கி, "என் அரசே வருக! எங்கள் அமரேசா வருக! நாங்கள் பெற்றெடுத்த செல்வமே வா! திரவியமே வா! அப்பா வா! ஐயா, வா!" வென்று தங்கள் கண்களிலிருந்து மளமளவென்று ஆனந்தபாஷ்பம் சொரிய ஆனந்தக் கூச்சலிட்டுக்கொண்டிருக்கும்பொழுதே. நாயனர், "என் அம்மா வந்தனம்! என் அப்பா வந்தனம்! என் பாட்டி எல்லார்க்கும் வந்தனம்!" என்று கூவிக்கொண்டும், தன் மேலே போட்டிருந்த யோக வேஷ்டியை எடுத்து அரையிற் கட்டிக்கொண்டும், கார்த்திகேயர் கற்பகம் இருவர் பாதங்களையும் தன் கையால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார்.

இதற்குள் கார்த்திகேயரும் கற்பகமும், "போதும் போதும்! எங்கள் அமரேசா, உன் திருமுகத்தைக் கண்ணுற்கண்டதே போதும்" என்று நாயனருடைய குனிந்த தலையை அன்பாய்த் தாங்கி நிமிர்த்தி, அவருடைய இரண்டு கரங்களையும் ஆளுக்கொன்ருய்ப் பிடித்து ஆவலுடன் முத்தமிட்டுத் தங்கள் கண்களில் ஒற்றிக்கொண்டு, அவருடைய கரங்களைப் பிடித்தபடியே, "அப்பா, உள்ளே வா, அமரேசா உள்ளே வா, உள்ளேவா, வீட்டிற்குள்ளே வா" வென்று அழைத்துக்கொண்டு போய், பட்டகசாலையில் எரிந்துகொண்டிருந்த பெரிய நிலை விளக்கின் முன்பு உட்கார்ந்துகொண்டு, "அமரேசாஉட்காரு; உட்காரு" என்று உபசரித்தார்கள். உடனே நாயனர், தன் மாதாபிதா இருவருடைய திவ்விய பாதங்களிலும், அரசர்க்கும் தாழாத தன் வணங்காமுடி தோயுமாறு, அடியற்ற மரம்போல் கீழே வீழ்ந்து, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தன் இரு விழிகளினின்றும் தன்னையறியாது ஆறுபோல் வடியும் விலைபெற்ற தூய பனிநீரால் பெற்றோர் பாதங்களை அபிஷேகம் செய்து, தன் கண்களென்னும் தாமரை மலர்களால் மாறிமாறி அர்ச்சித்துக்கொண்டு, குப்புற வீழ்ந்தபடியே கிடந்தார். இத்தனை அன்புப் ஆவலும் பணிவும் மகிழ்ச்சியும் கலந்த தம் செல்வப் புதல்வனுடைய வணக்கத்தைக் கண்டு, கார்த்திகேயர், "எங்கள் செல்வமே எழுந்திரு; செல்வச் சிரஞ்சிவியே எழுந்திரு; எழுந்திரு! ராதா விபூதி கொண்டுவா; தாயே திருநீறு கொண்டுவா" என்று சொல்லவும், நாயனர் எழுந்து, தன்னை ஆசிர்வதிக்கும் பெற்ரேர் முன் ஆடையொதுக்கி வாய் பொத்தி நின்று, அவர்களால் தன் நெற்றியில் பூசப்பட்ட வெண்ணீறை யணிந்துகொண்டு, அவர்கள் பக்கத்தில் ஆவென்று வாயைத் திறந்த வண்ணமே பிரமித்து நிற்கும் பாட்டிமார்களையும் மாமனர் நந்தகோபரையும் அவ்வாறே நமஸ்கரித்து, அவர்கள் அள்ளியள்ளிப் பூசிய வெண்ணீற்றையும் நெற்றி நிறையப் பெற்றுக்கொண்டு கார்த்திகேயர் முன்பு உட்கார்ந்தார். நெற்றி நிறையப் பூசப்பட்ட வெண்ணீற்றையும் அதற்கிசைந்த நீண்ட தாடியையும் தீபவெளிச்சத்திற் பார்த்தபொழுது, சாக்ஷாத் சிவபெருமான்போலும், மேலே யணிந்திருந்த பெரிய கறுப்புச் சொக்காயை நோக்கினல், நீலமேகவர்ணனுகிய மகாவிஷ்ணுவைப்போலும் பிரகாசித்த டாக்டர் நாயனர் கீழே உட்காரவும்,—அவரும் கற்பகமும் கார்த்திகேயரும் ஆகிய மூவரும் ஒருவர்க்கொருவர் செய்துகொண்ட உபசார மரியாதைகளைப் பார்த்தும், அவர்கள் தமக்குள் "அப்பா" வென்றும், "அம்மா" வென்றும் "மகனே" யென்றும் ஒருவரையொருவரழைத்துக்கொண்ட முறைப்பேச்சுகளைக் கேட்டும், திகில் கலந்த ஆச்சரியத்துடன், சுவரோடு சுவராய் ஒண்டிக்கொண்டு கையும் கன்னமுமாய்ப் பிரமித்து நிற்கும் பாட்டிமாரையும் நந்தகோபரையும் பார்த்து, கார்த்திகேயர், "எல்லாரும் உட்காருங்கள்; அத்தை உட்காருங்கள்; நந்தகோபா உட்காரு" என்று அனைவரையும் உட்காருவித்து, சற்றே மறைவாய் நின்ற ராதாவை யழைத்து, "ராதா, நீயும் மாதவனும் உன் அத்தானை நமஸ்காரம் செய்து விபூதி வாங்கிப் பூசிக்கொள்ளுங்கள்" என்ருர்.

உடனே, ராதா—ஆச்சரியமென்னும் அழகிய பூஞ்சோலையில் ஆனந்தமென்னும் இளந்தென்றற்காற்ருல் இனிதே யசைக்கப்பட்ட மெல்லிய வெற்றிலைக்கொடிபோலு[illegible]—பயம், பக்தி, அன்பு முத[illegible] பன்னிறப் புள்ளிகளல் அலங்கரிக்கப்பட்ட நாணம் என்னும் நளினப்

(35-ம் பக்கம் பார்க்க)





## இந்தியா பூராவும் புகழ் பெற்றது

மைசூர் பட்டுகள் இணையற்ற அழகிற்கும். அழுத்தத்திற்கும் பெயர் பெற்றவை

ஆடம்பரமானஸாடின்கள ஜார்ஜெட்டுகள், க்ரேபபுகள. டபீடாக்கள், கைக்குட்டைகள் கழுத்துப் பட்டைகள் யாவும் நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு விசேஷ அனுகூலமாகத் தயாரிக்கப்படுகின்றன!

**கவர்ன்மெண்ட் பட்டு நெசவுத் தொழிற்சாலை,**
**மைசூர்**

ஸ்டாக்கிஸ்டுகள் :

1. மதராஸ் ஸ்வதேசி எம்போரியம் லிமிடெட். 1/17 A, மவுண்ட் ரோட், மதராஸ்.
2. மேஸர்ஸ் ஜயந்மல் மிஸ்ரிலால் & கம்பெனி. கம்மர்ஷியல் ரோட, உதகமண்டலம
3. மைசூர் ஆர்ட்ஸ் & க்ராப்ட்ஸ் இலாகா 4. சவுத்பரேட். பெங்களூர்



குணமுற்றது மலிவுற்றது தீங்கற்றது

**நஞ்சன்கூடு பல்பொடி**

ஹைகோர்ட் உரிமைதீர்ப்பு பெற்றது

சாதாரணம் புதுபாக்கெட் 10டபி, பெடியேட்

பாலக்ஸ் ஜிஞ்சிப் கூலாயில ஜ்வரேக் 101 மகாதவஜ

சோல ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 50, பந்தர் தெரு, மதராஸ். (டிப்போ: கொழும்பு மதுரை பம்பாய், ரங்கூன்)

டிப்போ : 42, செட்டி தெரு, கொழும்பு.
201, மொகல் வீதி, ரங்கூன்.



# நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

## மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

**ஸ்கந்தாசிரமம்**

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.




மானேஜர்:—உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன். நீ இனிமேல் வேலைக்கு வரவேண்டாம்.

பையன்:—நான் ஒன்றும் செய்யவில்லையே.

"அதற்காகத்தான் வேலையிலிருந்து நீக்கிவிட்டேன்"

* * * *

அன்று சனிக்கிழமை. கர்ண கும்பன் பின்வருமாறு யோசனை செய்தான்—"நாளை ஞாயிற்றுக்கிழமை. மற்ற நாட்களில்தான் காலை 8 மணிக்கு வேலைக்குப் போகவேண்டுமென்று சீக்கிரமாக எழுந்திருக்க வேண்டியிருக்கிறது. நாளையாவது நன்றாகத் தூங்க வேண்டும்."

அதன்படியே கதவுகளையெல்லாம் சாத்திவிட்டுப் படுத்துத் தூங்கினான். எழுந்து பார்த்த போது 8-30 ஆகிவிட்டது. அவசர அவசரமாகத் தன் வேலைகளை முடித்துக்கொண்டு வேலைக்குப் போனான். மானேஜர் அவனை வெறிக்கப் பார்த்தார்.

கர்ண கும்பன்,—அதிக நா மதடாகிவிடவில்லை. ஒரு மணி நான் நேரமாகிவிட்டது.

மானேஜர்:—நேற்று நீ எங்குபோயிருந்தாய்?

* * * *

மனைவி:—உங்களிடத்தில் ஒரு விசேஷமிருந்தது. அதை நான் விரும்பி உங்களை நேசித்ததுண்டு.

கணவன்:—உன்னை விவாகம் செய்துகொண்டதிலிருந்து அது முழுவதும் தொலைந்து விட்டது.

* * * *

சித்திரமெழுதுபவர்:—இந்தச் சித்திரத்தில் ஒரு மாடு புல் மேய்ந்துகொண்டிருக்கிறது.

சித்திரம் வாங்கவந்தவர்:—டல் எங்கு இருக்கிறது?

"மாடு தின்று விட்டது."

"மாடு எங்கே?"

"புல்லைத் தின்றுவிட்டு மாடு அங்கேயே நின்றுகொண்டிருக்குமா என்ன?"

* * *

கணவன்:—இது என்ன ரிகார்டு, பெரிய தலைவேதனையாகவிருக்கிறதே?

மனைவி:—இதைத்தானே பிரதிதினமும் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

"ஏன்!"

"இராத்திரியில் நீங்கள் குரட்டை விடுவதைத்தான் ரிகார்டு செய்து வைத்திருக்கிறேன்".

* * * *

ஒருவர் கடைக்காரனிடம் பிஸ்கோத்து, பப்பர்மெண்ட் முதலியவை வாங்கிக்கொண்டிருந்தார். திடீரென்று ஒருவர் ஓடிவந்து கடைக்காரனிடம் "ஒரு ரோல் நாய் பிஸ்கோத்துகள் கொடு. அவசரம். அவசரம்" என்று கூறி சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தவரிடம் "அவசரம். மன்னியுங்கள்" என்றார். அதற்கு அவர் "உங்களுக்கு அவ்வளவு பசியாயிருந்தால் பரவாயில்லை!" என்று பதிலளித்தார்.

* * * *

ஒருவன்மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு மாஜிஸ்திரேட் முன் அழைத்துச் செல்லப்பட்டான்.

மாஜிஸ்திரேட்:—நீ குற்றவாளியா, இல்லையா?

கைதி:—நான் குற்றவாளி தான். மேற்கொண்டு விசாரணையே வேண்டாம்.

மாஜிஸ்:—ஏன்?

கைதி:—நான் திருடின வழிகளெல்லாம் இங்கு பகிரங்கமாக வெளிப்பட வேண்டாம்.

* * * *

முதல் ஸ்திரீ:—உன் கணவர் எப்படி?

இரண்டாவது ஸ்திரீ:—உயரமாகவிருப்பார். எப்பொழுதும் வலது கைப்பக்கத்துள் ஜேபியில் பணத்தை வைத்திருப்பார்.

* * * *




பம்பாய் மாடுங்கா தேகப்பயிற்சி சங்க அங்கத்தினர்கள்

## வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3 வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5-அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா

Tele—":IMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

ESTD. 1893.



சவரன்மாத்து தங்கநகைகளும் முதல் தரமான வைரங்களும் அசல்வெள்ளி சாமான்களும்
உத்திரவாதத்துடன் கிடைக்குமிடம் எங்கே?

வீகம்ஸி சபில்தாஸ் & சன்ஸ்.
50 வருஷங்களாய் பிரக்யாதிபெற்றவர்கள்
112, சைனாபஜார் ரோட்டு மதராஸ்




## த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

தரிதாபுலேக வேடிதே-தயராதேமோ ஸ்ரீ நாத (தரி)

அநுபல்லவி

கரிதன முலுகல்கிதே-கருணிம்சி ப்ரோதுவேமோ (தரி)

சரணம்

அல நாடு நிர்ஜரவைரிபாலுநி ஜூசிதிவிகா நி
வலசி பதமுல நம்மிதே-வரமீய தோசுநா த்யாகராஜு (தரி)

II

| | |
|---|---|
| ஸ்ரீநாத | —லக்ஷ்மீ நாயகரே! |
| த்யாகராஜு | —த்யாகராஜன் |
| தரி தாபு லேக வேடிதே | —வேறுவழி யடுத்துக் காணுமல் முறையிட்டுக்கொண்டாலும் |
| தயராது ஏமோ | —உம் கிருபை உண்டாகாததேனே? |
| கரி, தனமுலு கல்கிதே | —எனக்கு யானை முதலிய ஐச்வர்யங்கள் பொருந்தியிருந்தால் |
| கருணிம்சி | —கிருபை புரிந்து |
| ப்ரோதுவு ஏமோ | —காப்பாற்றுவீரோ, என்னவோ? |
| அலநாடு | —அன்றொருநாள் |
| நிர்ஜரவைரி பாலுனி | —தேவர்களுடைய விரோதியான ஹிரணியகசிபுவின் புத்திரனை ப்ரஹ்லாதனை |
| ஜூசி | —தயையுடன் பார்த்து |
| ப்ரோசிதிவிகானி | —ரக்ஷித்தீரேயன்றி, |
| வலசி | —உம்மிடம் அதிக ப்ரேமை வைத்து |
| பதமுல நம்மிதே | —உம் திருவடிகளை நம்பினல், |
| வரமீய தோசுநா | —எனக்கு வரமளிக்க உமக்குத் தோன்றுமா? |

III

இந்தக் கீர்த்தனம் ஸ்ரீ நரஸிம்ஹமூர்த்தியைப் பற்றியது. நரஸிம்ஹாவதாரத்தைப் பற்றித் தனியாகச் செய்யப்பட்டுள்ள வேறு இரு கீர்த்தனங்களும் உண்டு. அவை, "ஸ்ரீ நரஸிம்ஹ," "நரஸிம்ஹா" என்பவைகளாம். இவை தவிர, வேறு அநேகக் கீர்த்தனைகளில் ப்ரஹ்லாதாழ்வானுக்குக் கிருபை செய்த வ்ருத்தாந்தம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பல்லவியில் "ஸ்ரீநாத" என்பதற்கு "ஸ்ரீராம" என்றும் சரணத்தின் முடிவில் "த்யாகராஜநுத" என்றும் பாடாந்தரங்கள் வழங்கிவருகின்றன வென்பது நோக்கற் பாலது.

"நான் ஏழையானபடியால் எனக்குத்தேவரீர் க்ருபை புரிய மனங்கொள்ளவில்லை போலிருக்கிறது. ப்ரஹ்லாதாழ்வான் அஸுரகுலத்தவனுயிருந்தும், ஒரு பெரிய சக்கரவர்த்தி குமாரனுயிருந்ததால் அவனுக்கு அநுக்ரஹம் செய்ததாகத் தோன்றுகிறது" என்று வ்யாஜநிந்தையாடுகிறர். இது நிந்தாஸ்துதி யென்றும் கூறப்படும். பகவானிடத்தில் பக்தி செய்யும் பெரியார்கள் இப்படி அன்பினுல் சலுகை பாராட்டிக் கூறுவது சம்பிரதாயம்.

பட்டணம் சுப்பிரமணிய ஐயரென்ற மஹாவித்வான் செய்த 'பரிதான மிச்சிதே' என்ற கீர்த்தனையின் கருத்தும் ஸ்வாமிகள், 'நாமொரலனுவனி' என்பது முதலான கீர்த்தனைகளின் கருத்தும் இதனேடு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கவை.

தயராதேமோ:—தக்க காரணங்களை எடுத்துரைத்து ஸ்வாமிகள் தம்மீது என் பகவான் தயை காட்டவில்லை என்று கோரியிருப்பதனுல், மர்க்கட கிசோர ந்யாய முறையில் (அதாவது குட்டிக் குரங்கு தாய்க் குரங்கை இறுகப்பற்றிக் கொள்வதைப் போன்ற பக்தி) பற்றுள்ளவரென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஸஹேதுக ஜாயமான கடாக்ஷமென்ற கொள்கையே ஸ்வாமிகளுடைய மதம்.

(10-ம் பக்கம் பார்க்க)




கீழ்க்கண்ட இடங்களில் பிராஞ்சுகள்:

பம்பாய் — ரங்கூன் — ஆண்ட்வர்ப்

கரிதனமுலு:—இதில் ஸ்வாமிகள் நியாய நிஷ்டூரமாடுவதைப் பாருங்கள்!

நிர்ஜரவைரிபாலுனி:—'எந்து தாகினோ' என்ற கீர்த்தனத்தில் ஸ்வாமிகள், 'அலநாடு கநக கசிபு......கம்பமுலோபல னுண்ட லேதா' என்ற சரணத்தில், பகவான் ப்ரஹ்லாதனுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளை அவன் பொருட்படுத்தாமலிருந்தும் தாம் ஸஹிக்கமுடியாமல் ரக்ஷிக்க விரைந்ததாகத் தெரிவித்திருக்கிறார். 'உம்பர்க்கு முனக்கும் ஒத்திவ்வுலகெங்கும் பரந்துளானைக் கம்பத்தின் வழியே காணக் காட்டுக் காட்டிடாயேல்,........(உன்) செம்பொத்த குருதி தேக்கி யுடலையுந்தின்பேன்' என்று அதிகப் பரிஹாஸத்துடன் ஹிரண்யகசிபு பிரஹ்லாதனைப் பார்த்துச் சொல்லி அச்சுறுத்தினான். ப்ரஹ்லாதனுக்கு எவ்வளவோ துன்பங்கள் இழைக்கப்பட்டபோதெல்லாம் அவனைக் காப்பாற்றிய பகவான், 'இத்தூணிலுமுளன்' என்று அவன் கூறிய வார்த்தையை அஸத்தியமானதென்று லோகத்தார் கருதிவிடக்கூடாதென்று அந்த மஹா ஸத்யவந்தனைக் காப்பாற்றும் பொருட்டுக் கம்பத்தை வெடிக்கச் செய்தார்; உடனே 'திசை திறந்தண்டங்கீறிச் சிரித்தது செங்கட்சீயம்.' அந்தப் பக்தனுக்காக அவ்வளவு செய்த தேவரீர் அடியேனுக்கு ஏன் க்ருபை செய்யவில்லை?

வலசிபதமுல நம்மிதே:—'நாஹம் வேதைர் நதபஸா நதானேன நசேஜ்யயா- பாக்ய ஏவம்விதோ த்ருஷ்டும் த்ருஷ்டவானஸீ மாம்யதா'- [வேத (அத்யயன)த்தினாலாவது, தவத்தினாலாவது, தானத்தினாலாவது, யஜ்ஞத்தினாலாவது என்னை நீ (இப்போது) எவ்விதமாய்ப் பார்க்கிறாயோ இப்படி (ஒருவராலும்) பார்க்கச் சாத்தியமானதல்ல) என்றும், 'மத்கர்ம க்ருந்மத்பரமோ மத்பக்தஸ் ஸங்க வர்ஜித:—நிர்வைரஸ் ஸர்வ பூதேஷு யஸ்மாமேதி...' [ஸகல கர்மாக்களையும் என்னுடைய ஆராதன ரூபமாகச் செய்கிறவனும், ஸகல காரியங்களுக்கும் என்னையே உத்தேசித்தவனும் என்னிடத்திலேயே திட பக்தியுடையவனும், என்னைத் தவிர வேறு விஷயங்களில் பிரவிருத்தியற்றவனும், ஸகல ப்ராணிகளிடத்திலேயும் த்வேஷமற்றவனும் எவனோ அவனே என்னையடைகிறான்] என்றும் கீதையில் கூறியுள்ளபடி, பரம பக்தியுடன் நான் உன் திருவடிகளை யாச்ரயித்தேன். அல்லாமலும், அநந்யா: சிந்தயந்தோமாம் யேஜனா: பர்யுபாஸதே-தேஷாம் நித்யாபியுக்தானாம் யோக க்ஷேமம் வஹாம்யஹம்' [எந்த ஜனங்கள் வேறு சிந்தையில்லாமல் என்னைப்பற்றியே பக்தி செய்து உபாஸிக்கிறார்களோ, எப்போதும் என்னையடைய வேண்டுமென்ற கருத்துடைய அவர்களுடைய யோக க்ஷேமத்தை [illegible] நானே வஹித்துக்கொள்ளுகிறேன்] என்றும், அபயம் ஸர்வ பூதேப்யோததாம் யேதத் வ்ரதம்மம' [ஸகல [illegible]னவர்களுக்கும் நான் அபய மளிக்கிறேன்; இதே என் வ்ரதம்] என்றும் வாக்களித்திருக்கிறீர். இப்போது அதற்கு விரோதமான வ்யவஹாரம் காணப்படுகிறது. இதனால், நான் ஏழையாயிருப்பதனால் பாராமுகமாயிருக்கிறீர்போலும் என்கிறார்.

வரமு ஈயதோசுனா:—ஸ்வாமிகள் கேட்கும் வரமென்ன? இஹ ஸௌக்யங்களா, என்னில், இல்லை! 'ஹரி ஹரி நீ யொக்க திவ்ய பாதாரவிந்தமு ஈயவே, தானுகலுக போக பாக்ய மெல்லனு தத்யமு காது ஸாமீ'—[பகவானே, உம்முடைய திவ்யமான பாதகமலங்களை அடியேனுக்குத் தந்தருளும்! உலகிலுள்ள போக பாக்யங்களெல்லாம் நித்தியமானவைகளல்ல, ஐயனே!] என்று ப்ரார்த்திப்பதே அவர் கோரும் வரம். பகவானுக்கே கைங்கர்யம் செய்யும்படியான பாக்யமே அவர் கோருவது. இதைப் பல கீர்த்தனங்களில் தெரிவிக்கிறார்.

IV

**ஸாவேரி** **ஆதி தாளம்**

(ஸாவேரி ராக லக்ஷணத்திற்குச் சென்ற வார இதழைப் பார்க்க ]

### பல்லவி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ; ; | * தா ரீ ஸ்நிதா | பம | கரிரீ ; | ஸா | ரீஸ-நிதா | ஸா. |
| ; ; ; | * த ரி தா... | பு | லே... ; | க | ...-வே... | டி |
| மபதா ; | * த்ரிஸ்ா | நிதநிதபம | கரிரீ ; | ஸா | ரீ-ஸநிதா | ஸரி |
| தே... ; | * த ரி | தா......பு | லே... ; | க | ...-வே... | டி |
| மபதபாத | * த்ரிஸ்ா | நிதநிதபம | கரிரீ ; | ஸரி | கரி-ஸநிதா | ஸரி |
| தே...... | * த ரி | தா......பு | லே... ; | க | ...-வே... | டி |
| மபதபாத | * தரிஸ்ா | நிதநிதபம | கரிரீ ; | ஸநி | தா | ஸரிமபதநி |
| தே...... | * த ரி | தா......பு | லே... ; | க | ... | வே...டி |
| தா ; ; | * தா தா | பதநிதபம | கரிரீ ; | ஸரி | பமதா ; | ஸ்நி |
| ; ; | * த பு | ரா...... | தே... ; | மே | ...ஸ்ரீ ; | நா |
| ரிஸ்நிதபம | * | | | | | |
| ....தா.... | * (தரிதாபு) | | | | | |

### அனுபல்லவி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| : ; ; | * பா தா | ஸ்ா ; ஸ்ா | ஸ்ா ; ; | தா | ; ரீ ; | ஸ்ா |
| ; ; ; | * க ரி | த ; ன | மு ; ; | லு | ; கல் ; | கி |
| தா ; ; | * பா தா | ஸ்ா ; ஸ்ா | ஸ்ா ; ; | ஸ்நி | தா | ரீரீஸ்ா |
| தே ; ; | * க ரி | த ; ன | மு ; ; | லு | ... | கல் கி |
| நிதநிதபம | * பா தா | ஸ்ா ; ஸ்ா | ஸ்ா ; ; | ஸ்நி | தா | ஸரிகாரீ |
| தே...... | * க ரி | த ; ன | மு ; ; | லு | ... | க ல் கி |
| ஸ்ரிக்ரீ, | * ஸ்நிதா | ஸ்ா ; ஸ்ா | ஸ்ா ; ; | ஸ்நி | தா | ஸ்ரிகாரீ |
| தே...., | * க ரி | த ; ன | மு ; ; | லு | ... | க ல் கி |
| ஸ்ரிக்ரீ, | * ஸ்ரிக்ாரீ | ஸ்ா ஸ்ா | ஸ்நிதா ; | பம | பதஸ்ா ; | ஸ்ரி |
| தே...., | * க ரு | ணிம் சி | ப்ரோ... ; | து | வே ; | மோ |
| க்ரிரீ ; | * (ஸாரீ ஸநிதாபா) | | | | | |
| ....; | * (தரி தா......பு) | | | | | |

### சரணம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ; ; | * ரீ மா, | பா, தா | பா ; ; | பத | பமகா ; | ரீ |
| ; ; ; | * அ வ, | நா, டு | நிர் ; ; | ஜ | ர வை ; | ரீ |
| பமகரிஸநி | * ஸரிகா-ஸாரீ | ஸ்நி | தா ; ; | ஸா | ரீ, மா, | பா |
| பா...... | * லு னி-ஜூசி | ப்ரோ | ; ; | சி | தி, வி, | |
| தா, பா, | * ரீமா, | பா, தா | பா ; ; | பத | நிதபமகரி | ஸரி |
| சா, நி, | * அ வ, | நா, டு | நிர் ; ; | ஜ | ர வை... | ரி |
| பமகரிஸநி | * ஸரிகா-ஸாரீ | ஸ்நி | தா ; ; | ஸா | ரீ, மா, | பா |
| பா......... | * லு னி-ஜூசி | ப்ரோ | ; ; | சி | தி, வி, | |
| தா, தா, | * ரீ மா, | பா, தா | பா ; ; | பத | பதஸ்ா ; | ஸ்நி |
| கா, ணி, | * அ வ, | நா, டு | நிர் ; ; | ஜ | ர வை ; | ரீ |
| தபமகரிஸ | * ஸரிகா-ஸாரீ | ஸ்நி | தா ; ; | ஸா | ரீ, மா, | பா |
| பா......... | * லு னி-ஜூசி | ப்ரோ | ; ; | சி | தி, தி, | வி |
| தா, பா, | * | | | | | |
| கா, நி, | * | | | | | |

'வலசிபதமுல..........................த்யாகராஜு' அனுபல்லவிபோல் பாடப்படவேண்டும்.

# கண்ணோட்டம் பிரமுகர்கள்



சென்னை ரோட்டரி கிளப் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டாக்டர் பி. வி. செரியன்.



ஸ்ரீமான் டி. எம். பி. மஹா தேவன். இவருக்குச் சென்னை சர்வகலாசாலை டாக்டர் பட்டமளிக்க முடிவு செய்திருக்கிறது.



பாசியன் (பர்மா) பாரதி சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் சி. ராம. ப. ராம. பழனியப்ப செட்டியார் உடற் பயிற்சியில் பரிசுகள் பெற்றிருக்கிறார்.



கல்கத்தாவில் நடைபெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட ஸ்வாமி பரமானந்தாவும் ஸர் பிரான்ஸிஸ் யங் ஹஸ்பண்டும். இவர்கள் ஐரோப்பாவிலிருந்து வந்தனர்.



ஏடன் இந்தியாவிலிருந்து ஏப்ரல் முதல் தேதி பிரிக்கப்படும் ஏடன் காலனி கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர் பர்னார்ட் ரெய்லி.



மைசூர் நர்ஸ் ஸ்ரீமதி ஞானம்மா. இவர் தமது ஆயுள் சம்பாத்தியமான ரூ. 3,000யும் பிரஸவ ஆஸ்பத்திரியின் நிமித்தம் கொடுத்துவிட்டார். இதன் அஸ்திவாரக்கல் ஸர் சார்லஸ் டாட்ஹண்டரால் சமீபத்தில் நாட்டுவிக்கப்பட்டது.



பம்பாயில் உயர் குடும்ப விவாகம். இந்தியா சட்டசபை மாஜி தலைவர் ஸர் இப்ராஹீம் ரஹீம்துல்லாவின் குமாரி மிஸ். ஜரினா ரஹீம்துல்லாவுக்கும் பிரபல மோட்டார் வியாபாரி ஜனாப் நூர்மகமத் ஷினையின் குமாரன் யூஸப் நூர்மகமத் ஷினைக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.



மஹாமஹோபாத்யாய

# என். வைத்யநாத சாஸ்திரிகள்

(கே. எஸ். ஆர்.)

### மீமாம்ஸா அப்பியாஸம்

பல வருஷங்களுக்கு முன்பு ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரவர்கள், திருப்பணித்துறை ஸர் ராம வர்மா சம்ஸ்கிருத கலாசாலை வார்ஷிக மஹோத்ஸவ சமயத்தில் அக்ராஸனம் வஹித்தபோது, சம்ஸ்கிருதக் கலையின் அபிவிருத்திக்கான பல முறைகளை எடுத்துக் கூறினர். அவை யாவும் நன்கு அனுஷ்டிக்கப்பட்டால் இத்தேசத்தில் அந்த பாஷை எளிதில் மேன்மையுறக்கூடும்; தவிர பண்டிதர்களுக்கும் ஞானம் மேலும் மேலும் வளரக்கூடும். அச்சமயம் ஸர் சிவஸ்வாமி அய்யர் இத்தேசத்து சம்ஸ்கிருத பண்டிதர்கள், சாஹித்யம், தர்க்கம், வேதாந்தம் முதலிய பாடங்களையே வெகுவாகக் கற்று வருகின்றனர் என்பதை எடுத்துச் சொல்லி சம்ஸ்கிருதக் கலையின் இதர பகுதிகளும் இவ்வாறே விஸ்தரித்து வியாபிக்குமாறு செய்யப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னர். அவர் இங்கு மீமாம்ஸா பாடம் அதிகமாகப் பிரவசனம் செய்யப்படுவதில்லை என்பதை எடுத்துரைத்தார்; இதே சமயம் அவர் அந்தக் கலாசாலையில் இப்பகுதியை நன்கு போதிப்பதற்காக எல்லா முயற்சிகளும் அநுசரிக்கப்படவேண்டும் என்று பேசியது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். பல வருஷங்களுக்கு முன்பு வியாகரண பாடம் இத்தென்பகுதியில் பிரபலமாக வில்லாத சமயத்தில் அப்பகுதியை நன்கு அப்யஸித்து அந்தத்தீபம்எங்கும் வியாபித்துப் பிரகாசிக்குமாறு செய்தவர் காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய வியாகரணம் ஸ்ரீ முஷ்ணம் சுப்பராயாச்சார்யர் ஆவார். மீமாம்ஸா பகுதியில் நன்கு தேர்ச்சி பெற்றவர் இக்காலத்திலும் வெகு சொற்ப நபர்கள்தான். மீமாம்ஸா அப்பியாஸமானது பொதுவாக வேதார்த்தங்களையும் சாஸ்திரார்த்தங்களையும் நன்கு விசாரிப்பதற்கு இன்றியமையாத பகுதியாகும். அத்வைதிகளுள் காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய மன்னார்குடி தியாகஅஸஹாயசூரராக விருந்து, தமக்குப் பின் அந்தப் பாடத்தைத் தமது சிஷ்யர்களுள் பிரதானமானவர்களுக்குப் போதித்துவைத்தார். அப்பெரியாரிடம் காலஞ் சென்ற பழமார்னேரி ராமா சாஸ்திரிகளும் மஹா மஹோபாத்யாய சுந்தர சாஸ்திரிகளும் இப்பகுதியை ஊக்கத்துடன் அப்யஸித்து, தாங்களும் இப்பகுதியை வளர்ப்பதில் ஒருவாறு பங்கு எடுத்துக் கொண்டவர்கள். இவ்விருவர்களுடைய சிஷ்யர்களுள் முக்கியஸ்தர்களாக நாம் காலஞ் சென்ற மஹா மஹோபாத்யாய பி. வி. பஞ்சாபகேச சாஸ்திரிகளையும், இப்போது நம்மிடை ஜீவித்து வரும்மஹாமஹோபாத்தியாய என். வைத்தியநாத சாஸ்திரிகளையும் அவசியம் குறிப்பிட வேண்டும். ப்ரும்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரியார் அவர்களுக்கு மீமாம்ஸா பாடத்தில் வாய்த்த அநிதா சாதாரண ஞானம் பற்றி அநேக விடங்களில் சிறப்பும் கௌரவமும் மரியாதைகளும் கிடைத்தன.

மஹாமஹோபாத்யாய மீமாம்ஸா ரத்ன மீமாம்ஸா வைத்தியநாத சாஸ்திரிகள் பவ வருஷம் மாசி மாதம் முதல் தேதியன்று (அதாவது 1875-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 11-ம்தேதியன்று,) தஞ்சை ஜில்லாவைச் சார்ந்த நேமம் கிராமத்தில் ராமு சாஸ்திரிகள் என்பாரின் புத்திரராகப் பிறந்தார். ஒரு பிரபல வைதீகக் குடும்பத்தில் தோன்றிய இவருக்கு சாஸ்திரீகமான முறையில் வித்யாப்யாஸம் ஆரம்பிக்கப்பட்டு : நடத்தப்பட்டது. சம்ஸ்கிருத பாஷையின் ஆரம்பப்பகுதிகளை நன்கு தெரிந்துகொண்ட பின்பு இவர் நேமம் ஸ்வாமிநாத சாஸ்திரிகளிடம் சிஷ்யனுகப் போய் அவரிடம் தர்க்க சாஸ்திரத்தை அப்யஸித்தார். தர்க்க பாடத்தில் போதுமான தேர்ச்சியை சம்பாதித்துக் கொண்ட பின்னர் இவருக்கு பூர்வ மீமாம்ஸ சாஸ்திரத்தையும் அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் அதிகமாகியது. ஆகவே தமது நேமம் கிராமத்திற்குக்கிழக்கு திக்கில் இரண்டுமைல் தூரத்திலிருப்பதும், வெகு காலமாக

(29-ம் பக்கம் பார்க்க)



X-LX 547/1-50
LEVER BROTHERS (INDIA) LIMITED
TAMIL

# ஜோதிர் மண்டலம்

## தாது வருஷம் - பங்குனி மாதம்

(ஸ்ரீமான் பி. ஸ்ரீநிவாஸவரதன் எழுதியது.)

இப்பக்கத்திலுள்ள நக்ஷத்திர மண்டலம், இம்மாதம் இராக்காலத்தில் சென்னையில் நமக்குத் தென்படும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகிறது. படத்திலுள்ளபடியே முதல்::தேதியன்று (14-3-37) இரவு 10-34-மணிக்கும், 15-ம் தேதியன்று (28-3-37) இரவு 9-39-மணிக்கும், 30-ம் தேதியன்று (12-4-37) இரவு 8-36-மணிக்கும் இக்கூட்டங்களை நாம் காணலாம். சென்னை தவிற மற்ற இடங்களுக்கும் இதை உபயோகப்படுத்தலாம். சென்னைக்கு வடக்கே இருக்கும் ஊர்களுக்கு இப்படத்தை உபயோகப்படுத்த வேண்டுமானல், வடக்கே அடிவானத்தருகே சில நக்ஷத்திரங்கள் அதிகமாகவும், தெற்கடிவானில் சில நக்ஷத்திரங்கள் மறைந்தும் இருக்கும். நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரவும், முன்னிரவைவிட நான்கு நிமிடங்கள் சீக்கிரமாகவே உதயமாகின்றன. ஆதலால் இன்று இப்படத்திலுள்ளபடி நக்ஷத்திரங்கள் இரவு 10-34-மணிக்குத் தென்பட்டால் நாளைக்கு 10-30-க்கு அப்படியே தெரியும். இம்மாதிரியே நாம் எந்தத் தேதிக்குப் படம் எத்தனை மணிக்கு உபயோகப்படும் என்பதைத் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

படத்தை உபயோகிக்க நாம் எத்திசையை நோக்கி நிற்கிறோமோ, அத்திசை அடி பாகமாக வரும்படிப் படத்தைத் திருப்பி வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்கு எதிரில் தெரியும் முக்கிய நக்ஷத்திரங்களைப் படத்தில் அடிக்கோடு முதல் நடுவரையில் காணலாம். படத்தின் நடுவே மத்திய ஆகாயம். நமக்கு வல இடப்புறம் இருக்கும் கூட்டங்களை முறையே வல இடப்புறங்களில் படத்தில் காணலாம்.

இம்மாதத்தில் குறிப்பிட்டுள்ள நேரங்களில், பால்வழி என வழங்கப்படும் ஆகாய கங்கையின் பிரவாகம் வானில் வடமேற்கு முதல் தென் கிழக்குவரை வியாபித்திருக்கிறது. அது பர்ஸியூஸ், ஆரிகே, ஓரியன், பானுசரஸு, ம்ருகவியாதா, ஆர்கோநேவிஸ், தென் சிலுவை, சென்டாரஸ் முதலிய கூட்டங்களினிடையே ஊடுருவிச் செல்கின்றது. தென் சிலுவைக் கூட்டத்தை அணுகும்பொழுது அதன் அகலம் மிகவும் குறைந்துவிடுகிறது. அதைத் தாண்டிக் கிழக்கே செல்லுகையில் இரு பிரிவாகப் பிரிகிறது.

### நக்ஷத்திரக் கூட்டங்கள்

இராசிக் கூட்டங்களில் ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம் முதலியவை மேற்கு முதல் கிழக்கு வரையில் வரிசைக் கிரமமாக அமைந்திருக்கின்றன. சிம்மக் கூட்டம் நம் தலைக்கு நேரே காணப்படுகின்றது. அதன் அழகும் ஒழுங்கும் அதிசயிக்கத்தக்கவை. அதன் முக்கிய நக்ஷத்திரமாகிய 'மகம்' நடுவானிற்கருகில் அதிப்பிரகாசமாக ஜ்வலிக்கின்றது. இம்மகம் எவ்வளவு சிறியதாகக் காணப்படுகிறது. ஆனல் நம் சூர்யனைவிட 1000 மடங்கு பிரகாசத்தில் அதிகம் அதனிடமிருந்து நமக்கு ஒளிவந்துசேர சுமார் 153 வருடங்கள் ஆகின்றன. ஆகையால், மகம் நம் சூர்யனிருக்குமிடத்தில் ஆகாயத்தில் அமைந்திருந்தால் நம் உலகம் ஜீவராசிகளுடன் செழித்தோங்கியிராமல், அக்னி ஜ்வாலையில் அகப்பட்டு கல்லும் கரைந்து ஆவியாகவும் மாறி உருக்குலைந்து, 'உயிர்' என்பதே காணமுடியாத ஆவிக் கோளமாக மாறிவிடும். கிழக்கே துலாக்கூட்டம் வெளிவருகிறது. சற்று உயரமான இடத்தில் கன்னியின் சித்திரை நக்ஷத்திரம் ஒளி வீசுகிறது.

இதரக் கூட்டங்களில், வடக்கே அடிவானத்தருகே காணப்படுகிறது. நேர்வடக்கே மிகவும் அழகுடன் ஸப்த ரிஷிகளும் வீற்றிருக்கின்றனர். இவர்களின் தோற்றம் மற்ற எல்லாக் காட்சிகளையும் தோற்கடிக்கின்றது. துருவனைக் காக்கும் அசுரன் இப்பொழுது வடகிழக்கே வெளி வருகிறான். பூட்ஸ் கூட்டமும், மிக அழகிய கிரீடமும் வடகிழக்கே உதயமாகின்றன.





### ஓர் ஆச்சரிய சோதிடம்!

ஆண் பெண் சகல மதஸ்தர்களுக்கும் இல்வாழ்க்கைத் திறவுகோல் இதுவே. தங்கள் எண்ணத்தை எனக்குத்தெரிவிக்காமலே திரிகால பலனை தங்களுக்கு அறிவிக்க ரூ. 2. தங்கள் எண்ணத்தை தெரிவித்து 1 முதல் 5 கேள்விக்கு ரூ. 1. ராசி முதல் டிக்ரிவரை கணித்து ஒரு வருட பலன் எழுத ரூ. 5. ஜனன காலம் தேவை அல்லது எனக்குக் கடிதம் எழுதும் நேரம் எழுதவும். இஷ்டார்த்த சித்தி ரக்ஷையும், மூலிகையுடன் தயார் செய்து அனுப்ப ரூ. 10. வி. பி. பிரத்தியேகம்.

ரா. முத்துவேல் முதலியார்,
கலைமகள் ஜோதிடம்,
48, தேர்முட்டி வீதி,
திருப்பாபுலியூர்,
தென்னாற்காடு ஜில்லா.

"ZANDU"
KESARI JIVAN
THE IDEAL TONIC FOOD
SOLE AGENTS DAMODER & Co.
78. CHINA BAZAAR ROAD MADRAS.




வேண்டா ரோமத்தை உடனே நீக்கி சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கின்றது. பெரிய குடும்பங்களால் உபயோகிக்கப்படுகின்றது.
பெரியடியூப் அணா 12 சிறிய டியூப் அணா 6
பெரிய பாட்டில் அணா 14
சிறிய பாட்டில் அணா 10
வி பி. வேறு. எங்கும் விற்கப்படுகின்றது
Agents: Shivlal & Co., Bombay, 2.

ஆரிகே வடமேற்கே அடிவானத்தருகே சென்றுவிட்டது. பர்ஸியூஸ், தன் மங்கையைத் தேடிக்கொண்டு தொடுவானத்தைக் கடந்துவிட்டான்.

மேற்கே புலப்படும் காக்ஷிகளில் சிறந்து விளங்குவது ஓரியனே. ம்ருகவியாதா தென்மேற்கே ஜவலிக்கிறது. ஜேசனின் கப்பலாகிய ஆர்கோநேவிஸ் தென்மேற்கிலும், ஸென்டாரஸ் தென்கிழக்கிலும் அமைந்திருக்கின்றன. இவைகளினிடையே ஒரு சிறு கூட்டம் நம் மனதைக் கவர்கிறது. இதுவே தென் சிலுவைக் கூட்டம். இதை 'விஸ்வாமித்ரா' கூட்டம் என்றும் சொல்லுவர். ஹைட்ரா இப்பொழுது கடக-சிம்ம- கன்னிக் கூட்டங்களுக்குத் தெற்கே வியாபித்திருக்கின்றது. மொத்தத்தில் இம்மாதம் சுமார் 10 முதல்தர நக்ஷத்திரங்களுடன், முன்னிரவின் வானம் ஜவலிக்கிறது.

பங்குனிமீ—கிரஹங்களின் நிலை

புதன்:—இம்மாத முதலில் புதன் கும்பத்திலிருக்கிறது. பிறகு 7-ம் தேதியன்று (20-3-37) மீனத்திற்கும், மீனத்திலிருந்து 24-ம் தேதியன்று (6-4-37) மேஷத்திற்கும் மாறுகிறது. இம்மாதம் 12-ம் தேதியன்று சூரியன் உதய, அஸ்தமன சமயத்திற்கே புதனும் உதயமாகி மறைகிறபடியால், இதை மாதக் கடைசி வாரம் வரையில் காண்பது கடினம். மாதக்கடைசியில் இரவு 7-30 மணிக்கு இது அஸ்தமிக்கிறது. எப்ரல் 7-ம் தேதியன்று புதன் சுக்கிரனிற்குத் தெற்கே சுமார் 7 டிக்ரி தூரத்திலிருக்கிறது. அன்று சுக்கிரனின் உதவியைக்கொண்டு இதைக் கண்டு பிடிக்க முயலலாம்.

சுக்கிரன்:—சென்ற மாதக் கடைசியில் அதிகப் பிரகாசமடைந்த சுக்கிரன் அப்பிரகாசத்துடனேயே இம்மாத முதலில் விளங்குகிறது. அப்புறம் நாள் செல்லச் செல்ல சிறிது சிறிதாக ஒளி குறைகிறது. என்ன ஒளி மழுங்கிய போதிலும் மற்ற நக்ஷத்திர க்ரஹங்களனைத்தையும் காட்டிலும் பன்மடங்கு அதிக ஒளியுடனேயேதான் பிரகாசிக்கிறது. சில மாதங்களாக மேற்கு வானில் திலகம்போல் விளங்கிய சுக்கிரன் இன்னும் இரண்டொரு மாதத்தில் மேற்கைவிட்டகன்று கிழக்கே சூரியனுக்கு முன்னால் உதயமாகி பிரகாசிக்கும். இம்மாதம் முதலில் முதல் தேதியன்று இரவு 8-50 மணிக்கும், மாதக்கடைசியில் இரவு 7 மணிக்கும் சுக்கிரன் அஸ்தமிக்கும். அது அடிவானத்திற்கு மேலே இருக்கும்வரையில் தன் உன்னதத் தோற்றத்தால் எல்லா நக்ஷத்திரங்களின் பிரகாசத்தையும் மழுங்கச் செய்கின்றது. இக்கிரஹம் மார்ச் 28-ம் தேதியன்று வக்ரிக்க ஆரம்பிக்கிறது. இம்மாதமெல்லாம் மேஷத்திலேயே முன்னும் பின்னுமாக ஊர்ந்து செல்கிறது.

குஜன்:—இம்மாத முதல் தேதி (14-3-37) குஜன் விருச்சிகக் கூட்டத்திற்கு மாறுகிறது. இம்மாதமெல்லாம் விருச்சிகத்திலேயே யிருக்கிறது. இது மாத நடுவில் இரவு 10 மணிக்கு உதயமாகிறது. இதை விருச்சிகத்தின் தலைபாகத்தில் காணலாம்.

குரு:—தனுசிலேயே இம்மாதமெல்லாம் கழிக்கின்றது. இது இரவு 2 மணிக்கு (15-ம் தேதியன்று) உதயமாவதால் விடியற்காலையில் உச்சிக்கருகே பிரகாசிப்பதைக் காணலாம்.

சனி:—இம்மாதமும் கும்பத்திலிருக்கிறது. மாதக் கடைசி வாரத்தில் விடியற்காலையில் சனியைக் கிழக்கே நாம் சுலபமாகக் கண்டுகொள்ளலாம்.

உரானஸும் நெப்டியூனும்

முறையே மேஷத்திலும், சிம்மத்திலும் ஊர்ந்து செல்கின்றன.

நக்ஷத்திரங்களினிடையே சந்திரன் உலவி வருகையில், கீழ்க்கண்ட தேதிகளில் க்ரஹங்களினருகில் காணப்படும்.

மார்ச்சுமீ
15உ—சுக்கிரனருகில்
25உ—நெப்டியூனருகில்
எப்ரல்மீ
1உ—குஜனருகில்
5உ—குருவினருகில்
10உ—சனியருகில்

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு, இம்மாதத்திய இராசி சக்கரத்தைக் கீழே கொடுத்திருக்கிறோம்.

தாது வருஷம் பங்குனிமீ-15-ம் தேதி-சூரிய உதயம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் சனி புதன் | சுக்கிரன் | கேது | |
| | 6உ—மீன—புதன் 8உ—மகர—குரு 21உ—மேஷ—புதன் | | |
| குரு | | | |
| | குஜன் ராகு | | |


# சிறந்த கூந்தல் ஆகாரம்



உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப் புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; தல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

## ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும். ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

வருங்கால பலன்



புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில் அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.



பண்டிட் M. R. K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்
பண்டிட் E. S. K. சுவாமி. ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன் ரூ. 2. ஆயுள்வரை பொதுப்பலன ரூ. 10. ஜாதகமாவது பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
"ஜோதிட கழகம்" 38, தேவராஜமுதலி தெரு, பி.டி. மதராஸ்.

ஸ்ரீமத் பகவத் கீதை
விலை ரூபா 3.
மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.



# நவ நாகரீகம்

### பூக்கசை

(காமினி எழுதியது.)

நேற்று நான் ஒரு பாட்டுக் கச்சேரிக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு பெண் வெள்ளையும், பச்சையும் கலந்த அலங்காரம் செய்து கொண்டு வந்திருந்தாள். அதாவது, வெண்பட்டுப் புடவை உடுத்தி இருந்தாள். இதற்கு 'ஆழ்ந்த' சற்றே கறுப்பு என்றுகூடச் சொல்லக் கூடிய சங்கையில், நான்கு விரல் அகலத்துக்குச் செட்டிநாட்டுக் கரை போட்டிருந்தது. பச்சை பைபிங் வைத்த வெள்ளைச் சட்டை போட்டிருந்தாள். வைரத் தோட்டில் நடுவில் பச்சைக் கல் வைத்திருந்தது. ஒரு கையில் கைகெடிகாரமும், மற்றொரு கையில், வைரமும், பச்சையும் பதிக்கப்பட்ட ஒத்தை வளையும் போட்டிருந்தாள். விரலில், மிகச் சிறிய பச்சைகளும், வைரங்களும் வைத்துச் செய்யப்பட்ட நாசூக்கான ஒரு மோதிரம். பச்சை வெல்வெட்டில், வெள்ளை சரிகை வேலை செய்யப்பட்டிருந்த சடாக்களைக் காலில் போட்டிருந்தாள்; இதற்கு இசைந்தாற்போல் கையில் ஒரு கைப் பை வைத்திருந்தாள். எல்லாவற்றையும் விட அவள் தலையில் வைத்திருந்த பூக்கசைதான் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

கசை என்றால் உனக்குத் தெரியும் என்றே எண்ணுகிறேன். லேடி. சின்னையாவின் மகள், நான் கசை என்று சொன்னதும், தனக்கு அது இன்னது என்பது அர்த்தம் தெரியாவிட்டாலும், 'கசை' என்றால் கொச கொசா என்பதுபோல் தொனி நன்றாக இல்லை' என்றாள் 'தலை முடிக்கும் காதுப்பக்கத்து மயிருக்குமாக மாட்டிக் காதுக்குப் பின்புறமாகத் தொங்க விட்டுக் கொள்ளும் நகைக்குக் கசை என்று பெயர்' என்று நான் சொன்னதுக்கு, 'அப்படியும் ஒரு நகை உண்டா? நான் மாட்டலைத்தான் பார்த்திருக்கிறேன்' என்றாள்.' 'மாட்டல் மாதிரியில் சற்றே அகலமாக இருப்பதில், கொத்துக் கொத்தாகக் கீழ்ப்பக்கத்தில் முத்துக்கள் தொங்கவிட்டிருக்குமில்லையா? நான் பார்த்திருக்கிறேன்' என்றாள் அவளுடைய மன்னி. நாட்டுப்புறத்தில் வசிக்கும் உனக்குக் கசையைப்பற்றி எழுதுவது அனாவசியமே.

இந்தப் பெண், நீண்டு, அடர்ந்த தன் கூந்தலை, ஒரு முறுக்கு முறுக்கிக் கொண்டை போட்டிருந்தாள். மிகவும் வெளுப்பான மரமல்லிகைப் பூக்களாலும், சிறிய இலைகளாலும், நீளமாகப் பின்னி, இதைக் கசை மாதிரியில், கொண்டையின் ஒரு ஓரத்திலும், காதின் பின்பக்கத்து மயிரிலுமாகச் சொருகி இருந்தாள். ஆனால் ஒரு பக்கத்திற்கு மட்டுமே வைத்திருந்தாள். கொண்டையில் வேறு பூக்கள் வைக்கவில்லை. இவ்விதம் பூ வைப்பதும் பார்வைக்கு நன்றாகத்தான் இருக்கிறது.

* * * *

### போட்டு இடத் தட்டு

போன வாரம் லேடி சுந்திராசாரியும், நானுமாக 'ஷாபிங்' போயிருந்தோம். 'வெள்ளிக்கு வரி போடப்போகிறார்களாமே? வெள்ளி விலை ஏறுவதற்கு முன் சில பாத்திரங்கள் பண்ணவேண்டும். ஆத்திலும், ஜதை இல்லாமல் சின்னதும் பெரிதுமாகச் சில வெள்ளிப்பாத்திரங்கள் இருக்கிறது. என் பெண் கலியாணத்துக்குப் பிரஸண்டாக இந்தப் பாத்திரங்கள் வந்தது. இதையெல்லாம் போட்டுவிட்டுப் போராததற்குக் கூடக் கொஞ்சம் வெள்ளியும் வாங்கி, ஒரு செட் டம்ளர், கிண்ணி, எல்லாம் பண்ணலாம் என்று உத்தேசிக்கிறேன். நீயும் கூட வருகிறாயா?' என்று கேட்டாள். எனக்கும் சில பாத்திரங்களைப் போட்டுப் புதிதாக வாங்கவேண்டி இருந்ததினால் நானும் கூடச்சென்றேன். முதலில் வெள்ளியை நிறுத்து, எடை போட்டு, வேண்டிய சாமான்களைச் செய்யச் சொன்னோம். பிறகு கடையில் வைத்திருந்த பல சாமான்களைப் பார்வையிட்டோம்.

அங்கு ஒரு தட்டில், கிட்டத் தட்டக் காலணா அளவு பெரியதான, பல தட்டுக்கள் வைத்திருந்தது. இவைகள் மிகவும் மெல்லியதாகவும், பல வடிவங்களிலும் பண்ணி இருந்தது; வட்டமாக சதுரமாக, 'டைமண்ட்' வடிவமாக, முக்கோணமாகப் பல தினுசுகளில் பண்ணியிருந்தது. ஒவ்வொரு தட்டின் நடுவிலும், ஒரு வட்டமான தொண்டிவிட்டிருந்தது. மிகவும் சிறியதாகவும், சற்றுப் பெரியதாகவும் இது பல அளவுகளில் இருந்தது,



ஸ்ரீமான் எம். என். ராயும் அவரது (அமெரிக்க) காதலியும்.




எனது சருமத்தின்

மிருதுத்தன்மையை

யாவரும்போற்றுகின்றனர்

ரகஸியம்

சிறந்த சரும டானிக்தான்

சிறந்த சரும டானிக் சரும அழகை எவ்வளவு தூரம் பெருக்குகிறதென்பதை ஸ்திரீகளில் வெகு சிலரே உணர்கின்றனர். உணருபவர்கள் மேலான சரும டானிக்கைத்தான் உபயோகிக்கிறார்கள். டாகெட் & ராம்ஸ்டெல்ஸ் சிறந்த கோல்ட் க்ரீமை உபயோகித்தால் சருமத்துவாரங்கள் சுத்தமடைந்து, இரத்த ஓட்டம் பெருகி, உங்களுக்கு வாலிபமும், புத்துயிரும் உண்டாகும். யாவரும் போற்றும் வசீகரம் ஏற்படும். வியர்வையால் ஏற்படக்கூடிய அசுத்தத்தையும் அகற்றும். இன்றே ஒரு புட்டி வாங்கி, புதிய சரும உல்லாசத்தை அனுபவியுங்கள்.



Daggett & Ramsdell

'இந்தத் தட்டுக்கள் எதற்கு?' என்று லேடி சுந்திராசாரி கேட்டாள். 'குங்குமப்பொட்டு இட்டுக்கொள்ளும தட்டு' என்றான் கடைக்காரன். பொட்டு இட்டுக்கொள்ளத் தட்டா? இதை எப்படி உபயோகிப்பது?' என்று நாங்கள் கேட்டோம். 'நெற்றியில் இடது கையினால் இந்தத் தட்டை வைத்துப் பிடித்துக்கொள்ள வேண்டியது. நடுவில் இருக்கும் தொண்டியில் பசையைத் தடவிக் குங்குமத்தை, அதன்மேல் சிராகத் தடவ வேண்டியது. பிறகு, தட்டை எடுத்துவிட்டால், பொட்டு சீரான வட்டமாக, அழகாக விழுந்திருக்கும். சிலருக்குப் பெரிய பொட்டுப் பிடிக்கிறது; சிலருக்குச் சிறிய பொட்டுப் பிடிக்கிறது. இன்னும் பலருக்கு நடுநிதானமாக வேண்டி இருக்கிறது, அதனால் பல அளவுகளில் தொண்டிகளைப் பண்ணி விற்கிறோம். இதன் உதவியினால் பொட்டு இட்டுக்கொண்டு பாருங்கள், மிகவும் நேர்த்தியாக இருக்கும்,'' என்றான். மெல்லிய தட்டுக்கள்தான் விலை மிகவும் சரசமாக இருக்கும் என்றே எண்ணுகிறேன். லேடி சுந்திராசாரி இந்தத் தட்டுக்களில் இரண்டு வாங்கி, எனக்கு ஒன்று கொடுத்தாள். அவள் கடைசியில் தனக்குச் சாமான்கள் செய்த கணக்குடன் இதன் விலையையும் போட்டுவிடச் சொன்னதினால்தான் எனக்குத் தட்டுக்களின் விலை தெரியவில்லை.

வீட்டில் இதைக் கொண்டு வந்து காட்டினதும், என்னுடைய அத்தை, ''நவநாகரீகமே! கலியுக மகிமையே? எங்கள் நாட்களில் நாங்கள் வட்டாட்டமப் பொட்டு இட்டுக் கொள்ளவில்லையோ? பொட்டு இட்டுக் கொள்ளத் தட்டாம். இம்; இனிமேல் வாயில் போட்டுக் கொண்ட சாதத்தை விழுங்க ஒரு கருவி கண்டு பிடித்து வைத்துக் கொள்ளுவீர்கள்! கையிலாகாததுகள்,'' என்றாள் அத்தை. என்ன சொன்னபொழுதிலும், இந்தத் தட்டின் உதவியினால், சுலபமாக, அழகாகப் பொட்டு இட்டுக்கொள்ள முடிகிறது. உனக்கு வேண்டுமானால், பொட்டின் அளவைச் சுமாருக்கு எழுது? வாங்கி அனுப்புகிறேன்.

* * * *

## பட்டுப்புடவை

சில நாட்களுக்கு முன் லேடி சின்னையா தன் பேத்திக்கு ஒரு வெள்ளைப் பட்டுப் புடவை வாங்கினாள். பட்டுச் சுதேசிப் பட்டு; நல்ல உறுதியாக இருந்தது. இதில் சிகப்புக் கோடுகளில், சிறிய கட்டங்கள் போட்டிருந்தது. ஒவ்வொரு கட்டங்களிலும் நிறைய சிறிய கறுப்புப் புள்ளிகள் வைத்திருந்தது. இதன் கரை மிகவும் அழகாக இருந்தது. நாலைந்து விரல் அகலத்திற்குக் கறுப்புக்கரை; இதில் சிகப்பு நிறத்தில் உத்திராக்ஷப் பேட்டுப் போட்டிருந்தது. இந்த உத்திராக்ஷப் பேட்டு மிகவும் நேர்த்தியாக இருந்தது. உத்திராக்ஷங்கள், சிறியதாகவும், நாஜூக்காகவும் இருந்தது. தலைப்புக்கு ஒரு சாண் அகலத்திற்குக் கறுப்புப் பட்டை போட்டிருந்தது. இதில் மெல்லிய சிகப்புக் கோடுகள் விழுந்திருந்தது. புடவை ஆறுகஜம் புடவை. விலை பதினேழு ரூபாய்கள் ஆச்சுது. மிகவும் நேர்த்தியாக இருந்தது.

* * * *

## முருங்கை இலை அடை

இதற்குக் காலையிலேயே கொழுந்தான முருங்கை இலைகளைப் பறித்து ஒரு ஈரத் துணியில் சுற்றிவைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதினால், மத்தியானமாக இலைகளை ஆய்வது சுலபமாக இருக்கும். அடைக்குச் சாதாரணமாக நனைப்பது போலவே நனைக்கலாம். இஷ்டமானால், துவரம் பருப்பைக் கொஞ்சம் அதிகமாகவே சேர்த்துக் கொள்ளலாம். சில பேர்கள் இதில் கொஞ்சம் கடலைப் பருப்பையும் சேர்த்து நனைக்கிறார்கள். அரிசி, பருப்பு, எல்லாவற்றையும், நாம் சாதாரணமாக அடைக்கு அரைப்பது போலவே அரைத்துக் கொள்ள வேண்டும். சற்று தளர்த்தியாக அரைத்துக கொள்ளலாம். ஈரத் துணியில் சுற்றி வைத்திருக்கும் முருங்கை இலைகளைக் குச்சி, பழுப்பு, முதலியவைகள் இல்லாமல் சுத்தமாக ஆய்ந்து வைத்துக் கொள்ள வேண்டும். தேங்காயை மெல்லியதாகத் துருவி எடுத்துக் கொள்ள வேண்டும். அடைக்கு உப்புக் காரம் கொஞ்சம் கூடவே போட வேண்டும். இதில் முருங்க இலை, தேங்காய்த் துறுவல் இரண்டையும் போட்டு, நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும். அடைக் கல்லில் எண்ணெயும், நெய்யுமாகக் கலந்துவிட்டு, அடைகளை மெல்லியதாகத் தட்டி, முரு முரு என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இஷ்டமானால் முருங்கை இலைகளை நிறையப் போடலாம். குறைத்துப் போட்டால் இலேசான கசப்பு இல்லாமல் இருக்கும். இந்த அடை வாய்க்கு ருசியாகவும், மணமாகவும் இருப்பதுடன், உடம்புக்குப் புஷ்டியையும் அளிக்குமாம். மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

* * * *


### பட்டுப் புடவைகள்

நித்திய உபயோகத்திற்கேற்ற புத்த புதுமாதிரி பருத்தி-பட்டு பட்டாடைகள் நவநவமான ரகங்களில்-உடலிலும் கரையிலும் கோடுகள் போட்டதும்-கோடுகள் இல்லாமல் சாதா உடல் கரை உள்ளதுமான புடவைகள்-தினம் தினம் வந்து கொண்டிருக்கின்றன.

கண்ணைக் கவரும் அழகும் மனதைக் கவரும் உயர்வும் கொண்ட புத்த புதுமாதிரி புடவைகளை **வைட் ஷாபில்** வாங்கி ஆனந்தமடையுங்கள்.

இன்னும் நவநாகரீகத்தில் மிகுந்து பிரகாசிக்கும் உயர்தா ஜவுளிகளும் ஏராளமாயிருக்கின்றன.

விலைகளோ மிகவும் மலிவு.

**கேவல்ராம்ஸ்**

வைட் ஷாப், மதராஸ்.







வியாதியாலோ, பிரஸவத்தாலோ வேறு எந்தக்காரணத்தாலோ உதிர ஆரம்பித்த கூந்தலை, உதிராமல் தடுப்பது

**கேசவர்த்தினி**

ஒன்றே

மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி விலை அணா 12;

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்!— தென் இந்திய ரஸாயன சாலை

மயிலாப்பூர், சென்னை.



**துளி இரத்தம் சிந்தவில்லை!**

வாளால் வெட்டினபோது கூட

காரணம் ரத்தமேயில்லை!

இரத்தமின்மையும், ஜீவசக்திக் குறைவும் மறைந்தொழியும்; உங்கள் தேகத்தில் 100-க்கு 100 இரத்தம் நிறைந்து நிற்கும். வலுவான தசைகளும், ஆரோக்கிய வாழ்வும் ஏற்படும். எப்பொழுது—

**அமிர்தா அருந்தினால்**

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.



நாகை ஸதிரீகள் 'சங்க' அங்கத்தினர்கள் அவ்வூரை விட்டுச்செல்லும் மிஸஸ் உன்னித்தனுக்கு ஒரு உபசரிப்பு நடத்தினர்.


மற்ற பக்கங்களில்

தர்ம சங்கடம் (சிறு கதை) 2
ராதா (தொடர்கதை) 4
விநோதக்கொத்து 7
ஸங்கீதப்பகுதி 8
கண்ணோட்டம்-பிரமுகர்கள் 11
தென்னிந்தியப் பிரமுகர்கள் 12
ஜோதிர்மண்டலம் 13
நவநாகரீகம் 15
பிரபஞ்ச வர்த்தமானம் 23
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி 25
"வினையோ விதியோ" (சிறுவர் பகுதி) 27
அதிசயம் ஆனல் உண்மை 28
பத்ராவதி இரும்பு ஸ்டீல் தொழிற்சாலை 30
நரலோக வீரன் (சரித்திரப்பகுதி) 33
சட்ட ஆலோசனை (ஹாஸ்யப்பகுதி) 35


# இந்திய வர்த்தமானம்

## கிராம ஜனங்களின் உண்ணா விரதம்

நிலச்சுவான் தாருக்குக் கொடுக்க வேண்டிய வாரம் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறின் பயனாக கபுர்பூர் பாரியா (பாட்னா) என்ற கிராமத்தைச் சேர்ந்த 100 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதனால் பல கிராமத்தினர் உண்ணாவிரத மனுஷ்டித்து வருகின்றனர். ஸ்திரீ புருஷர்கள், பலர் குழந்தைகள், மாடு கன்றுகளுடன் ஊரைக் காலி செய்து விட்டு மாங்கிர் ஜில்லாவிற்குச் செல்லுகின்றனர்.

* * * *

## மகாத்மா காந்தி-ராஜப்பிரதிநிதி சந்திப்பு

மகாத்மா காந்தி காங்கிரஸ் காரியக் கமிட்டி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் சட்ட சபை மெம்பர்கள் மகாநாடு இவற்றிற்கு யோசனை கூறுவதற்காக இம்மாதம் 15-ந்தேதி டில்லிக்குச் செல்லுவார். அவரது விஜய சம்பந்தமாகப் பலவித ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன. கவர்னர்கள் தங்களது விசேஷ அதிகாரங்களை உபயோகிக்கமாட்டார்களென்ற உறுதிமொழியைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடமிருந்து வாங்க வேண்டுமென்று காரியக் கமிட்டிக்கு காந்திஜி யோசனை கூறியிருக்கிறார். இதனால் அவர் டில்லியில் தங்கியிருக்கும்போது ராஜப்பிரதிநிதியைக் கண்டு காங்கிரஸ் சார்பாக இவ்விஷயபற்றிப்பேசநேரலாமென்று தெரியவருகிறது. இவ்வழி கவர்ன்மெண்டிற்கும் காங்கிரஸுக்குமிடையிலுள்ள பிளவைப்போக்க உதவுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். புதிய அரசியல் சுமுகமாக அமுல் நடைபெறுவதற்கான வழியை இது உண்டாக்கும்.

இது சம்பந்தமாக மத்திய மாகாண கவர்னர் பேரில் தமக்களிக்கப்பட்ட ஒரு உபசாரப் பத்திரத்திற்குப் பதிலளிக்கையில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் கூறியிருப்பதாவது:—புதிய அரசியல் இன்னும் ஒரு மாதத்திற்குள் அமுலுக்கு வரும். அது மாகாணப் பொது ஜனங்களது நன்மைக்கேற்ற முறையில் அமுல் நடத்தப்படும். இனி ஜனங்களை அவர்களது பிரதிநிதிகளே ஆளுவார்கள். சட்டத்தில் கண்ட பாதுகாப்புகளுக்குட்பட்டு இந்த ஆட்சி நடைபெறும். இப்பாதுகாப்புகள் சொற்ப விஷயங்களுக்கே ஏற்பட்டிருக்கும். பெரும் அவசியம் ஏற்பட்டால் தான் கவர்னரது விசேஷ அதிகாரங்கள் உபயோகிக்கப்படுமென நான் உறுதி கூறுகின்றேன். எனது மந்திரிகள் எந்த ராஜீயக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் சரி; அவர்களும் என் மாதிரி இம்மாகாணத்தின் நல்ல ஆட்சிக்கும் செழிப்புக்கும் ஜனங்களது முன்னேற்றத்திற்கும் பாடுபடும் நோக்கமுடையவர்களாக விருந்தால் எனது ஊக்கமும் ஆலோசனையும் உதவியும் அவர்களுக்கு எப்போதும் கிடைக்கும்.

* * * *

## குற்றபரம்பரைச் சட்ட அமுல்

பீகார் அபேதவாதக் கட்சி உதவிக் காரியதரிசியான ஸ்ரீமான் பஸ்வான்சிங் குற்றபரம்பரைச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறார். பாட்னாவில் குற்றபரம்பரை வகுப்பின் மெம்பராக அவர் பதிவு செய்யப்பட்டிருப்பதாயும் இரவு 9 மணியிலிருந்து சூரியோதயம்வரை தமது விடுதியை விட்டுப் போகக் கூடாதென்று கவர்ன்மெண்டார் போட்டிருக்கும் உத்திரவை அவர் மீறினாரென்றும் சொல்லப்படுகிறது.

* * * *

## இந்தியாவிலுள்ள அந்நியர்

இந்திய சட்டசபையில் பாய் பரமானந்தரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் ஸர் கிரிஜா சங்கர வாஜபேயர் இந்தியாவிலுள்ள அந்நியரின் தொகையைப் பற்றிய விவரங்களைக் கூறினார். 1931-ம் வருஷத்து ஜனக்கணிதிப்படி இந்தியாவில் வசித்தோ அல்லது வியாபாரம் செய்தோ வரும் அந்நியர்கள் தொகை வருமாறு:—ஆஸ்திரேலியர் 569; நியூஜீலந்துக்காரர்கள் 160; தென்னாப்பிரிக்கர் 153. தென்னாப்பிரிக்கர்களில் பெரும்பாலோர் தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர்கள். இந்தியரல்லாத தென்னாப்பிரிக்கரின் தொகை மிகச் சொற்பமாகும்.

* * * *

## சென்னை ஹைகோர்ட் புதிய சீப் ஜஸ்டிஸ்

சென்னை ஹைகோர்ட் புதிய சிப் ஜஸ்டிஸ் ஸர் ஓவன் பீஸ்லி ஜூலை மாதம் 2-ந்தேதி வேலையிலிருந்து விலகுவதால், அவருடைய ஸ்தானத்தில் ரங்கூன் ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் ஆல்பிரட் ஹென்றி லயனல் லீச் நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்னை ஹைக்கோர்ட் மற்றொரு ஜட்ஜ் மிஸ்டர் கார்னிஷ் ஆகஸ்டு 7-ந்தேதி வேலையிலிருந்து விலகுவதால், அவருடைய ஸ்தானத்தில் பஞ்சாப் அட்வகேட் கான்பகதூர் ஸர் மகமது அப்துர் ரஹிமான் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * * *

## கல்யாணக் குடிவெறி

ஒரு விவாகத்தில் பரிதாபகரமான சம்பவமேற்பட்டதாக, ராஞ்சியிலிருந்து 30 மைலுக்கப்பாலுள்ள ஷிலாவிகன் என்னுமிடத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. விவாக ஏற்பாட்டைச் செய்கிறவர்களான 16 அஹீராக்கள் (பால்காரர்கள்) அடங்கிய கோஷ்டியொன்று கிராமத்திற்குச் சென்று ஒரு விவாக சம்பந்தமான 'தாலா' (பூர்வாங்க சீர்) வை முடிவு செய்தனர். அவ்வூர் வழக்கப்படி 'தாலா'த் தொகை தீர்மானமாகும் வரை அவர்கள் ஆகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாது. பேரத்தில் பகல் எல்லாம் செலவாகிவிட்டது. மாலையில் அது சம்பந்தமாக ஒரு முடிவேற்பட்டுவிட்டதால், அதைக் கொண்டாடுவதற்கு 32 சாராய புட்டிகள் வாங்கப்பட்டன. மிதமிஞ்சி அவர்கள் குடித்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றனர். காலையில் இருவர் இறந்து கிடந்தனர். மற்றவர்



சென்னபட்டணத்தில் ஸ்ரீ மைசூர் மஹாராஜா மைசூர் ஸ்பின் விலக் ஆலேயின் அஸ்திவாரக்கல்லை நாட்டுவித்தார்.

கள் எல்லோரும் பிரக்ஞையற்றுக் கிடந்தனர்.

* * * *

## இந்தியா சட்டசபை ஆயுள் நீடிப்பு

சாதாரணமாக 1938-ம் வருஷ ஆரம்பத்தில் இந்தியா சட்டசபையின் ஆயுள் முடிவடைய வேண்டும். இதன் ஆயுட் காலம் 1938-ம் வருஷம் அக்டோபர் வரை நீடிக்கப் படலாமென்று தெரிகிறது. அப்போது சமஷ்டி சட்ட சபைத் தேர்தலுக்கு ஏற்பாடாகுமென நம்பப்படுகிறது.

* * * *

## கார்ப்போரேஷன் உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 500 சம்பளம்

சென்னைக் கார்ப்போரேஷன் தலைமை உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை 500 ரூபாயாகக் குறைக்கக் கார்ப்பொரேஷன் கவுன்ஸில் தீர்மானம் செய்தது சம்பந்தமாகக் கவர்ன்மெண்டார் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர்.

புதிய கார்ப்பொரேஷன் சட்டம் அமுலுக்கு வந்ததும் தலைமை உத்தியோகங்கள் காலியாகவிருப்பதாயும், புதிதாக நியமனம் செய்யவேண்டியிருப்பதாயும் கருதி, 500 ரூபாய்க்கு மேற்படாத சம்பளத்தில் புதிதாக நியமனம் செய்வதெனக் கார்ப்பரேஷன்கௌன்ஸில் தீர்மானித்தது. ஆனல் கவர்ன்மெண்டார் இப்போது செய்துள்ள முடிவென்னவென்றுல் அந்த ஸ்தானங்கள் காலியில்லை; ஆகவே பழய உத்தியோகஸ்தர்களே அவற்றை நீடித்து வகித்து வருவார்கள்; ஆனல் கார்ப்பொரேஷன் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தைக் குறைக்க விரும்பினுல், இப்போது பதவி வகிப்பவர்களைச் சட்டப்படியான முறையில் வேலையிலிருந்து விலகுமாறு செய்துவிட்டுச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள எல்லைகளுக்குள் புதிதாக நியமனம் செய்யலாம் என்பதே.

* * * *

## பொப்பிலி ராஜா உத்தேசம்

கனம் பொப்பிலி ராஜா ஸ்ரீமான் வி.வி.கிரியால்சென்னை ஜனப்பிரதிநிதி சபைத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுவிட்டதால் அவர் அச்சபைக்குத் தேர்தெடுக்கப்படுமாறு சில நண்பர்கள் ராஜிநாமாச் செய்து தமக்கு இடம் கொடுக்கத் தயாராக விருப்பதாயும், தமக்கு விசேஷத் தொகுதிகள் மூலம் சட்டசபையில் பிரவேசிக்க இஷ்டமில்லையென்றும் பொதுத் தொகுதியில் நிற்க அவகாசம் கிடைக்கும் வரை தாம் காத்திருக்கப் போவதாயும் பொப்பிலி ராஜா தெரிவித்திருக்கிறுர்.

* * * *

## காந்திஜீயின் கேள்வி

கல்கத்தாவில் நடைபெற்ற சர்வ மதங்கள் பார்லிமெண்டுக்குக் காந்திஜி ஒரு செய்தியனுப்பியிருந்தார். அச் செய்தியை அவர் ஒரு கேள்வியாகக் கேட்டிருந்தார். அக்கேள்விக்கு மகாநாட்டில் கலந்துகொண்ட ஸர் பிரான்ஸிஸ் யங்ஹஸ்பண்டு பதிலளித்தார். விவரம் வருமாறு:—

கேள்வி: "நாம் வைத்துக் கொண்டிருக்கிறபடி எல்லா மதங்களும் சமமா? அல்லது ஒரே ஒரு மதம் மட்டும் சத்தியம் என்னும்விஷயத்தைத் தன்னிடம் பூராவும் வைத்துக் கொண்டிருக்கிறதா? இதர மதங்கள் உண்மையற்றவையா அல்லது அநேகர் நினைக்கும்படி உண்மையும் தவறும் கலந்துள்ளவையா?"

பதில்: "ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய தாயார் தான் உலகத்திலேயே நல்லவளென்று நினைப்பதுபோல், நாமும் ஒவ்வொருவரும் நம்முடைய மதம் தான் எல்லாவற்றையும்விட மேலானதென்று நினைக்கிறேம். ஆனல் அதே சமயத்தில் எல்லா மதங்களுக்குள்ளும் ஒரு மூலாதாரமான ஒற்றுமை இருக்கிறதென்றே நாம் உணருகிறேம். இந்த மூலாதாரமான ஒற்றுமையைத்தான் இந்த பார்லிமெண்டில் நாம் மெய்ப்பிக்க விரும்புகிறேம். இந்த மனேபாவம் நன்றுகப் பதியவேண்டுமென்பதே எங்கள் விருப்பம். நம்முடைய மனதில் அது நிரந்தரமாக இருக்கவேண்டும்."

* * * *

## தமிழ்நாட்டுக்கு ஜவஹர் வாழ்த்து

தமிழ் நாட்டுக்குத் தேர்தல் வெற்றியைப்பற்றிப் பண்டித ஜவஹர்லால் நேரு பின்கண்ட வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறுர்:— பிற்போக்காளரையும் சுயநலவாதிகளையும் காங்கிரஸ் ஒழித்துத் துடைத்துவிட்டது. நாடு முழுவதிலு மேற்பட்ட காங்கிரஸ் வெற்றிக்குத் தமிழ்நாடு ஆந்திரா வெற்றிகள் சிகரம்போலாகும்.

* * * *

## பெரிய துறைமுகங்களை மத்திய சர்க்கார் நிர்வகிப்பார்கள்

பெரிய துறைமுகங்களாகிய கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய துறைமுகங்களை ஏப்ரல் 1-ந் தேதி முதல் இந்தியா கவர்ன்மெண்டாரே நேரில் நிர்வகிப்பார்கள். இதுவரை மாகாண கவர்ன்மெண்டுகள் மத்திய கவர்ன்மெண்டின் ஏஜண்டுகளாக அவற்றை நிர்வகித்து வந்தனர். அதனுல் விதிப்படியுள்ள துறைமுக அதிகாரிகளின் (போர்ட் டிரஸ்டுகள் அல்லது போர்ட் கமிஷனர்கள்) அலுவலில் ஒருவித மாறுதலும் ஏற்படாது.

## பர்மா தபால கட்டண உயர்வு

இதுபற்றி சர்க்கார் அறிக்கையொன்று கூறுவதாவது:—

1-4-37 முதல் பர்மாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் தபால், தந்திக் கட்டணங்கள் பின்வருமாறு இருக்கும்:— தபால் கார்டு 2 அணு. தபால் கவர்களுக்கு முதல் அவுன்ஸுக்கு $2\frac{1}{2}$ அணு. அதற்குமேல் ஒவ்வொரு அதிகப்படி அவுன்ஸுக்கும் 2 அணுவுக்கு அதிகமாகத் தலைகள் ஒட்ட வேண்டும். தற்போது கொடுப்பதைப் போன்று 2 மடங்குள்ள கட்டணத்தை சாதாரணத் தந்திகளுக்கும் அவசரத் தந்திகளுக்கும் கொடுக்கவேண்டும். பத்திரிகைத் தந்திகளுக்குத் தற்போதுள்ள உள் நாட்டுப் பத்திரிகைத் தந்திக் கட்டணத்தைப்போல இரண்டு மடங்குள்ள கட்டணத்தைக் கொடுக்கவேண்டும். 8 வார்த்தை தந்திக்கு ரூ. 1-2-0 கட்டணமாகக் கொடுக்கவேண்டும்.

* * * *

## பந்தோபஸ்துக் கைதிகளுக்கு விடுதலை

வங்காள கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டப்படி பந்தோபஸ்துக் கைதிகளாகவிருக்கும் 230 வங்காளிகளை விடுதலை செய்து விடுவதென வங்காள கவர்ன்மெண்டார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. விடுதலை செய்யப்படுபவர்களுக்குச் சில சாதாரணக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படும்.

* * * *



பீஹார் மாகாண கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள ஸர் எம். ஜீ. ஹாலட்டு தமது மனைவியுடன் சமீபத்தில் இந்தியா வந்து சேர்ந்தார்.




இனும்!
378 டிசயின்கள்
64 பக்கங்களடங்கிய நகை கேட்லாக்
தேவையுள்ளவர்கள் போஸ்டேஜுக்காக 2 அணு ஸ்டாம்பனுப்பிஞல் அனுப்பப்படும்.

பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P. O (சென்னை)

SAVE YOUR EYE



From ALL TROUBLES, even Cataract
Try 'SELLER'S LOTUS HONEY'
—The nature's own remedy. Absolutely safe. Sure, world-wide reputed and Tested. At all Chemists. Literature Free.
'L. H. Seller, Samta, Bengal'
Beware of Imitation—Insist on SELLER'S.





சேலம் மாடர்ன் தியேட்டர்ஸின்

## "சதி அஹல்யா"

என்ற தமிழ்ப் பேசும் படத்திலிருந்து இரு காட்சிகள்.

# மகுடாபிஷேக இராஜ சின்னங்கள்



மன்னர்பிரான் மகுடாபிஷேகத்தின்மீது அணிந்துகொள்ளும் குதிமுட்களும் (குதிரை ஓட்டுவதில் உபயோகிப்பவை) கால்களுக்கு அணிந்துகொள்ளும் தண்டையும்.



மன்னர்பிரானின் செங்கோல். உலகிலேயே மிகப் பெரியதான வைரம் இதில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இது 516 காரட் இருக்கிறது.



மகுடாபிஷேக காலத்தில் மன்னர்பிரானும் ராணியும் கையில் வைத்துக்கொள்ளும் கோளங்கள்.




இங்கிலாந்து அரசர்களும் அரசிகளும் மகுடாபிஷேகத்தின்போது அணிந்துகொண்ட மோதிரங்கள். இவை பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



மன்னர்பிரான் அணிந்துகொள்ளும் மூன்று வித கட்கங்கள்.



கழுகுத்தலை முகப்புடன் கூடிய இப் பொன் பாத்திரத்தில் ஒருவிதப் பரிசுத்த எண்ணெய் வைக்கப்பட்டிருக்கிறது. இதை இந்த ஸ்பூனுல் எடுத்து காண்டர்பரி ஆர்ச்பிஷப் மகுடாபிஷேகத்தின்போது சிலுவைக் குறிபோல் மன்னரின் நெற்றியில் தடவுவார். இது ஒரு பழைய கால அனுஷ்டானம்.



இங்கிலாந்தின் கிரீடம். மகுடாபிஷேகத்தின்போது மன்னர் இதை அணிவார்.



...ர்லிமெண்ட் திறப்பு முதலிய ராஜகாரியங்களின்போது மன்னர் அணியும் கிரீடம். இதில் சுமார் 2,783 வைரங்களும், சிகப்பு, பச்சை முதலிய இதர கற்களும் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.



காலஞ் சென்ற மன்னர்பிரான் 5-ம் ஜார்ஜ் இந்தியாவில் மகுடாபிஷேகம் நடத்த முடிவு செய்தபோது இங்கிலாந்திலுள்ள எந்த க்ரீடத்தையும் நாட்டை விட்டு வெளியே எடுத்துச் செல்லச் சட்டம் அனுமதி கொடுக்கவில்லை. ஆகையால் அப்பொழுது புதியதொரு கிரீடம் செய்யப்பட்டது. அது மேலே காணப்படுகிறது. இதில் 6,170 வைரங்களிருக்கின்றன.



ஸ்பெயின் கலகக்காரர் துருப்புகள் மலாகாவிற்குள் பிரவேசித்த காட்சி.



திருவாங்கூர் மஹாராணி சென்னை ஔவை அனாதை ஆச்ரமத்திற்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்.



பாலக்காடு முனிஸிபல் ஹைஸ்கூல் மாணவர்கள் ஓட்டம் துலால் என்ற நாட்டியத்தை ஆடிக்காட்டியபோது எடுத்த படம்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

### ஜேர்மனியின் துன்பம்

பிரிட்டனிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர் ஹெர்வான் ரிப்பன்ட்ராப் பர்லின் லீப்ஸிக் பொருட் காட்சியில் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

சில தேசங்களில் பாலும் தேனும் வழிந்தோடுகையில் ஜெர்மனிபோன்ற நாடுகளிலோ மக்கள் உயிர்வாழப் போதிய உணவுகூட இன்றித் திண்டாடுவது சகிக்க முடியாத நிலைமையாகும்.

ஆங்கிலோ — ஜெர்மன் ஒப்பந்தப்படி நாம் காலனிகளை ராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப் போவதில்லையென உறுதி கூறியிருக்கிறோம். பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இத்தாலி, ஹாலந்து, பெல்ஜியம், ஸ்பெயின் போர்ச்சுகல் இந்நாடுகளுக்கு அவைகளைவிடப் பெரிதான குடியேற்ற சாம்ராஜ்யங்கள் இருந்து வருகின்றன. ஆனால், ஜெர்மனியரோ தங்குவதற்குப் போதிய இடமின்றித் துன்புற்று வருகிறார்கள். மற்ற நாடுகள் நல்லறிவு கொள்வதன் மூலமும் பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டும் இப்பிரச்னை நியாயமாகத் தீர்த்து வைக்கப்படுமென நான் நம்புகிறேன்.

ஜெர்மன் காலனிகள் பிரச்னை சம்பந்தமாக மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் பேசுகையில் ஜெர்மனிக்கு அதன் பழைய காலனிகளைத் திரும்பக் கொடுப்பதுபற்றிச் சர்க்கார் இதற்குமுன் யோசித்ததுமில்லையென்றும் இப்பொழுது யோசிக்கவுமில்லையென்றும் சொன்னார்.

* * * *

### ஆகாகான் துலாபாரம்

நெய்ரோபியிலுள்ள இஸ்மேலிய பிரிவைச் சேர்ந்த முஸ்லீம்கள் ஆகாகானின் நிறைக்குச் சமமான பொன்னை அவருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர். இப்பொன்னின் மதிப்பு 23,000 பவுன் ஸ்டர்லிங். ஆகாகான் அப்பொன் முழுவதையும் சமூக முன்னேற்றிற்கு உபயோகிக்குமாறு கூறி அதை நன்கொடையாளர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

* * * *

### இத்தாலியப்படைப் பெருக்கம்

பாஸிஸ்ட் பிரதம சபைக் கூட்டத்தில் ஆயுதப் பெருக்கத்தைப் பற்றி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆயுதந் தாங்கிய படைகளைப் பெருக்க ஒரு திட்டம் அமைப்பதென்றும், யுத்த தளவாட உற்பத்திக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள இலாகா மேலும் ஐந்து வருஷ காலம் இருந்து வருவதென்றும், 18 லிருந்து 55 வயதுக்குட்பட்ட யாவரையும் ராணுவ சேவைக்குத் தயாராக்குவதுடன், விசேஷ ராணுவப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு அவ்வப்பொழுது படை திரட்டுவதென்றும், ராணுவத்திற்குத் தேவையான சாதனங்களைப் பெறும் விஷயத்தில் பிறர் தயவை எதிர்பார்க்க வேண்டிய அவசியத்தைக் கூடிய வரை குறைப்பதுடன், பொது நலங்கள் முழுதையும் தியாகம் செய்தேனும் ராணுவத்தை பலப்படுத்துவதென்றும், தேவையான ராணுவ சாதனங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் பொருட்டு இத்தாலிய விஞ்ஞான சாஸ்திரிகள் முதலிய நிபுணர்களின் ஒத்துழைப்பை நாடுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

* * * *

### வாரத்துக்கு 40 மணி நேரம் வேலை

"தொழிலாளரிடம் வாரமொன்றுக்கு 40 மணி நேரம் வேலை வாங்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் தினசரி குறைந்தது ஐந்து டாலர் கூலி கொடுக்க வேண்டும்" ஆகிய இரண்டு முக்கியமான கோரிக்கைகளையும் அமெரிக்காவிலுள்ள ஐந்து பெரிய எஃகுத் தொழிற்சாலையின் முதலாளிகள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். இதன் பலனாக அத்தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் 5,50,000 தொழிலாளர்களுக்கு வருஷமொன்றுக்கு பத்து கோடி டாலர் அதிகக் கூலி கொடுக்க நேரும்.

* * * *

### இரும்புத்தீர்வை ரத்து

இங்கிலாந்தில் இறக்குமதியாகும் இரும்புப்பாளத்தின் மீது இதுவரை 33 சதவிகிதம் தீர்வை விதிக்கப்பட்டுவந்தது. இப்பொழுது சர்க்கார் அத்தீர்வையை ரத்து செய்துவிட்டதுடன் இரும்பு, எஃகு சாமான்கள் மீது விதிக்கப்பட்டுவந்த இறக்குமதித் தீர்வையை 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாகக் குறைத்துவிட்டனர். பிரிட்டிஷ் எஃகுத் தொழிற்சாலைகள் இங்கிலாந்தின் தேவைகளைப் பூர்த்திசெய்வதிலுள்ள சங்கடங்களை நீக்குவதே இதன் நோக்கம்.

* * * *

### ரஷ்யப் பொதுவுடமைக் கட்சி

ரஷ்யப் பொது உடமைக் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதில் அக்கட்சியின் அமைப்பை ஜனநாயகமுறைக் கொத்தவாறு செய்யத்தக்க தீர்மானமொன்று நிறைவேறியது. புதிய அரசியலின்படி ஸோ. ரஷ்ய சோவியத் யூனியன்களுக்கும் நடைபெறும் தேர்தல்களில் அக்கட்சியினர் முக்கியப் பங்கெடுத்துக் கொள்வதுடன், எல்லா அம்சங்களிலும் ஒரு ஜனநாயகக் கட்சியைப்போல செயல்புரிய வேண்டுமென அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன் பலனாகக் குணதோஷங்கள் கூறத் தங்களுக்குள்ள உரிமையை அதிகமாகப் பிரயோகிக்குமாறு தனிப்பட்ட அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

* * * *

### அபிஸீனியாவில் இத்தாலியர் அட்டூழியம்

அடிஸ் அபாபாவில் இத்தாலியர் செய்யும் அட்டூழியங்களைப்பற்றிப் பின்கண்ட செய்தி கிடைத்திருக்கிறது:— இத்தாலியர் வேலைசெய்யும் வீடுகளில் எதியோபியர் வேலை செய்யக்கூடாது. இத்தாலியர் உணவருந்தும் ஹோட்டல்களில் எதியோபியர் உணவருந்தக்கூடாது. இத்தாலியர் நடக்கும் ரஸ்தாக்களில் எதியோபியர் நடக்கக்கூடாதென இத்தாலிய அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். ஒரு எதியோபியர் தெரியாத்தனமாக ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தாலும் அவருக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அவருக்கு ஏதாவது உணவு கொடுக்கும் ஹோட்டல்காரர்களும் தண்டிக்கப்படுகின்றனர்.

* * * *

### பாலஸ்தீனத்தில் மீண்டும் கலகம்

பாலஸ்தீனத்தில் மீண்டும் அராபியர்-யூதர் கலகம் ஆரம்பமாகியிருக்கிறது. ஜெருஸலத்தில் அவ்விருதரப்பினரும் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கினர். ஒரு அராபியர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் பல யூதர்களும் அராபியரும் பலத்த காயமடைந்தார்கள். பிரிட்டிஷ் போலீஸார் தெருக்களில் காவல் புரிந்து வருகின்றனர். இரவு 9 மணி முதல் காலை 5 மணிவரையில் தெருக்களில் யாரும் நடமாடக்கூடாதெனத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

### ஹிட்லருக்கு அவமதிப்பு

நியூயார்க் மேயரான மிஸ்டர் லாகுவார்டியா வாஷிங்டனில் ஒரு பிரசங்கம் செய்கையில் 'ஹிட்லர் உலக சமாதானத்தைக் குலைக்க முன் வந்திருக்கும் பழுப்புச் சட்டை தரித்த ஒரு வெறியன்' எனக் குறிப்பிட்டார். அதுபற்றி ஜெர்மன் சர்க்கார் தங்களது கண்டனத்தை வெளியிட்டனர். பிறகு அமெரிக்க சர்க்கார் மேற்படி பிரசங்கம் சர்க்காரின் மனோபாவத்தைக் காட்டுவதல்லவென்றும், தாங்கள் அதை வெறுப்பதாகவும் தெரிவித்தனர்.

12-3-37 வெள்ளிக்கிழமை முதல்

# கெயிட்டி டாக்கிஸில்

விசேஷ விமரிசையுடன் நடைபெற்று வரும்

கே. அஸ்வத்தம்மா - எம். கே. தியாகராஜ பாகவதர்

நடித்த

# சிந்தாமணி

அல்லது

# பில்வமங்கள்

(தமிழ் பேசும் படம்)

தினசரி இரண்டு காட்சிகள் :: சனி ஞாயிறுகளில் மாடினி உண்டு

டைரக்ஷன்: Y. V. ராவ்

பாடல்கள்: பாபநாசம் சிவன்

ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ்,

மதுரை.

'சிந்தாமணி'யில் பாடப்படும் சிறந்த பாடல்கள் பிளேட்டுகளாக எல்லா ஓடியன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.





மாட்ரிட் நகரவாஸிகள் ஒரு வெடிகுண்டு வீச்சின்போது சாமான்களை எடுத்துக்கொண்டு பத்திரமான இடங்களுக்கு ஓடும் காட்சி. (வலது பக்கம்) ஜப்பானின் புதிய மந்திரி சபை அங்கத்தினர்கள்.

# நாட்டு நடப்பு சித்திரக் கண்ணாடி



சென்னை சட்ட சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற ஸ்ரீமான் எச். பி. ஆரி கௌடருக்கு அவர் நண்பர்கள் கூனூரில் ஒரு உபசரிப்பு நடத்திவைத்தபோது எடுத்த படம்.





அண்ணாமலை சர்வகலாசாலை ஸ்திரீகள் ஹாஸ்டலில் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார், மகாகனம் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் ஆகியோரின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டபோது எடுத்த படம். (வலதுபக்கம்) ராஜப்பிரதிநிதி சமீபத்தில் சுதேச சமஸ்தானாதிபதிகளுக்கு விருந்து நடத்தினர். அப்பொழுது ராஜப்பிரதிநிதியின் மனைவி ராம்பூர் நவாபுடன் பேசிக்கொண்டிருக்கையில் எடுத்த படம்.

## ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1. ஒரு தசைக்கு புக்தி பலன ரூ. 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன ரூபா 7. ஜாதகக் குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொ. ஸர். ஏ. சுப்பிரமணியம்,
நெ. 2, (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், . . சென்னை

---

**சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்**

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பெல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட் விலை ரூ. 1-4 கேட்லாக் இனம்

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்

---




## மாதவிடாய் கோளாறுகள்

அவைகளே டெண்மலட்டிற்கும் காரணம்

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரியைவிட சிறந்த ஔஷதம் வேறில்லை. இது மாதவிடாயைச் சிரமப்படுத்தி, அதிகமாகப் போவதைத் தடுத்து, சூதக பந்தத்தை உடைத்து மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்கி, மலட்டுப்பூச்சிகளைக் கொன்று சந்தான பாக்யத்தை யளிக்கிறது. டாக்டர்களும் இதையே சிபார்சு செய்கின்றனர். பத்தியமல்லை. விலை ரூ. 5. பாக்கிங் தபால் செலவு வேறு.

**வேலன்ஸ் மெடிகல் ஹால்,**
காரணீஸ்வரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்

---




போலிகளைக் கண்டு உஷார் !!!

## அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும் இந்திய திவ்யாமிர்தம்

**அமிர்தாஞ்சனம் லிமிடெட்.**

பம்பாய் மதராஸ், கல்கத்தா,

---

## கெற்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதகக் கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திராக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலத்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம் பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெர்ப்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெர்ப்ப உத்பத்தியை உண்டு பண்ணும். 6-வித மலடு தீரும். கெர்ப்பம் தரிக்க விடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1-புட்டி ரூ 2. 3-புட்டி ரூ 5. செலவு வேறு

**குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்**

பழனி வைத்திய ஆசிரியர்

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**
சித்த வைத்தியசாலை,
146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை
**தலைமை ஆபீஸ், பழனி**

---

உத்தரவாதமான
**பொன், வெள்ளி நகைகளுக்கும், பலவேர் பட்டு ஜவுளி தினுசுகளுக்கும்**

## ஸ்ரீ ஆண்டாள் ஜுவெல்லரிஸ் லிமிடெட்.

**109, சைனா பஜார் ரோட், மதராஸ்.**

---

## "குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு) "பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிரபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
**இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.**
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்

Manager Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

---

## MUCH PLEASED

சென்னை (சாம்பியன் ரீப்ஸ்) மிவிருந்து மிஸ்டர்......24—9—36ல் எழுதியனுப்பிட்டு எழுதுவதாவது:—"வசீகரன் மூலிகை" ரொம்ப திருப்தியளித்தது; விசேஷ பலன் கிடைத்தது. இரண்டாவது நல்ல........ "திடேந்த் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.



**வசீகரன்,** ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்ப மயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0. 2. **வியாபாரமும், தொழிலும்:**—நிச்சயமான தொழில் விருத்தியும், இலாபமும் சித்திக்கும். விலை ரூ. 3-8-0 3. **வியாஜ்யங்கள்:**—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்வித வியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0 4. **வியாதிகள்:**— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. **உத்தியோகம்:**—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0. 6. **பரீக்ஷைகள்:**-எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. **சத்ருக்களை ஜெயித்தல்:**—எவ்வளவு அடாய மான விரோதிகளும் இதை அணிடவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர் விலை ரூபா 3-8-0 8. **கிரஹ தோஷம்:**-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0. 9. **ஆரோக்யமும், செல்வமும்:**—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்து சாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜ் வேறு ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

**BIJOYA LODGE, (S.M.W.)**
P. O. SALKIA HOWRAH

---

## ரூ. 500 இனாம்!

**திமிர்குஷ்டமும், வெண்குஷ்டமும்.**

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதனால்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிருபிப்பவருக்கு ரூ 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co.
(34) Panchpota, Bengal

சிறுவர் பகுதி

# “வினையோ - விதியோ!”

(பி. எஸ். சிவராம்)



பம்பாய் மாதுங்காவில் நடைபெற்ற தியாகராஜ உத்ஸவத்தில் கலந்து கொண்ட ஸ்திரீகள்.

முன்னொரு காலத்தில் ஒரு பிராமணன் மிகவும் ஏழையாகவிருந்தான். வறுமைப் பிணியின் கொடுமையைச் சகிக்கமாட்டாமல் அவன் மனைவி எங்காவது சென்று பணம் சம்பாதித்து வரும்படிக் கடிந்து கூறினாள். மனையாளின் கடுஞ் சொல்லைச் சகியாமல் அப்பிராமணன் வீட்டைவிட்டு வெளிக் கிளம்பினான். அதிக தூரம் நடந்து சென்ற களைப்பினால் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். களைப்பும் பசியும் மிகவும் அவனை வாட்டியது. இனி உயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லையென்று எண்ணிக் கீழே சாய்ந்தான். அப்பொழுது ஒரு சந்யாசி பிராமணன் முன் வந்து பிராமணனிடம் ஒரு பாண்டத்தைக் கொடுத்து,

“ஏ பிராமணா! இதை எடுத்துப்போ. உனக்கு தினம் வேண்டிய செலவிற்கு மாத்திரம் போதுமான பணத்தைக் கேட்டால் அது தரும்” என்று சொல்லிவிட்டு மறைந்தார்.



தனக்குக் கடவுள் அனுக்கிரகம் செய்துவிட்டதால், பிராமணன் அதிக சந்தோஷத்துடன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். வீடு போகுமுன் இருட்டிவிட்டதால், வழியிலுள்ள ஒரு கனவான்வீட்டில் தங்கினான். ஸ்நானம் செய்யக் குளத்திற்குப் போகு முன், கனவானிடம் பாண்டத்தைக் கொடுத்து, அதன் விசேஷத்தைச் சொல்லி, அதைப் பத்திரமாக வைத்திருந்து திருப்பிக் கொடுக்கும்படிச் சொன்னான்.

பிராமணன் குளத்திற்குச் சென்றதும் அவன் சொன்னது உண்மை தானாவென்றறியக் கொஞ்சம் பணம் வேண்டுமெனக் கேட்டான். உடனே கேட்ட பணம் கிடைத்தது. வேண்டிய பணத்தை தரக்கூடிய அதை விட்டு விட மனம் வரவில்லை. போஜனம் முடிந்ததும் தான் ஊருக்குப் போகவேண்டுமென்றும், பாண்டத்தைத் திருப்பித் தரவேண்டுமென்றும் பிராமணன் கேட்டான். அதிக ஆசை பிடித்த கனவான் தன்னிடம் யாதொன்றும் கொடுக்கவில்லையென்று சொல்லி, ஊருக்குப் போக விடையளித்தான். பொய் சொல்லுகிறவனென்று அடிக்கவும் அடித்தான்.

இவ்வெதிர்பாராத சம்பவத்தினால் பிராமணன் மனம் உடைந்து, தான் முன் சந்யாசியை எங்கு சந்தித்தானோ அங்கே சென்று படுத்தான். இரவு முழுதும் ஒரு மரத்தடியிலே தங்கினான். பொழுது விடியுமுன் அதே சந்யாசியைக் கண்டான். உடனே சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து நடந்ததைச் சொல்லித் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினான். அச்சந்யாசி அவனிடம் மற்றொரு பாண்டம் கொடுத்து அதே கனவானிடம் போகும்படிக்கும் முதலில் கொடுத்ததைத் திருப்பிப் பெறும் வரை இதைக் கொடுக்க வேண்டாமென்று சொல்லிவிட்டு மறைந்தார்.

பிராமணன் அக்கனவான் வீட்டை நோக்கிச் சென்றான். பிராமணன் கையில் மற்றொரு பாண்டத்தைப் பார்த்ததும் கனவானுக்கு நாக்கில் ஜலம் சொட்ட ஆரம்பித்தது. இதற்கு முன் கொண்டு வந்ததை விடச் சக்தி அதிமென அறிந்ததும், இதை எவ்வாறாவது கைப்பற்ற எண்ணினான். தனக்கு விலைக்குக் கொடுத்துவிடும்படிக்கும் இல்லாவிடில் பலவந்தமாய் பிடுங்கிக்கொள்வதாகவும் பயமுறுத்தினான்.

“எனக்கு விலை ஒன்றும் வேண்டியதில்லை. முன் நான் கொடுத்த பாண்டத்தைக் கொடுத்தால் இதைக் கொடுக்கிறேன்” என்று பிராமணன் சொன்னான்.



முதலில்கொடுத்த பாண்டத்தைத் திருப்பிப் பெற்றுக் கொண்ட பிராமணன் வீட்டை நோக்கிச் சென்றான்.

அதிகப் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று கனவான் மனக்கோட்டை கட்டினான். ஒரு அறையைச் சுத்தம் செய்து அப்பாண்டத்தை வைத்தான். கதவைத் தாளிட்டுக் கொண்டு,

“ஓ பாண்டமே! ஒரு லக்ஷ ரூபாய் வேண்டும்” என்றான்.

உடனே ஒரு கயிறும் சுத்தியும் வெளிக் கிளம்பிற்று. கயிறு நன்றாக அவனை இறுகக் கட்டிற்று. சுத்தி தலையில் அறைய ஆரம்பித்தது. பணம் வேண்டாம் வேண்டாமெனக் கதறுமட்டும் அடி நிற்கவில்லை. தான் பிராமணனை ஏமாற்றப் பார்த்ததற்குத் தானே ஏமாந்ததை எண்ணி விசனித்தான். தன் வினை தன்னையே சுட்டது.

* * * *

அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமச்சார்லுவின்

—ஸித்தகல்ப—

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,

த. பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915 ௵) 289, எஸ்பிளனேட் மதராஸ்.

# அதிசயம் ஆனால் உண்மை




1. ஏ. டி. ஒயிட் என்பவர் அமெரிக்காவில் ஒரு சாராய புட்டி வாய்மேல் 5,400 நெருப்புக் குச்சிகளைக் கொண்டு ஒரு வீடு அமைத்தார். 2. இத்தாலியில் பாஸிஸ்டுகள் கை குலுக்குவது தடை செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் பாஸிஸ்டுகள் முறைப்படி கை தூக்கி வந்தனம் செய்ய வேண்டும். 3. இங்கிலாந்து அரசர் முதலாம் சார்லஸ் மெழுகுவர்த்தி கெடியாரத்தைக் கண்டுபிடித்தார். ஒவ்வொரு வர்த்தியும் 8 மணிநேரம் எரிந்தது. மெழுகுவர்த்தி மீது மணியைக் காட்டக்கோடுகள் போடப்பட்டிருந்தன. 4. ஆஸ்திரேலியாவில் ஒருவர் ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டே நூற்றுக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்தார்.

# தென்னாப்பிரிக்கா தமிழறிஞர்

:[o]:

தென்னாப்பிரிக்கா நெட்டால் டர்பனில் வாழும் ஸ்ரீ ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் இலங்கையில் 1903-ம் வருடத்தில் சி. சங்கரன்பிள்ளை அவர்கட்கும் ஆதிலட்சுமி அம்மாளுக்கும் பிறந்தவர். திரு பிள்ளை அவர்கள் தென்னாப்பிரிகாவில் வாழ நேர்ந்துவிட்டதெனினும், தாய் நாட்டையும் தாய்மொழியையும் மறந்தவரல்லர்.

ஸ்ரீமான் பிள்ளை அவர்கள் தமிழ் மொழியை டர்பனிலுள்ள தமிழரிடையில் பரவச் செய்வதில் இடைவிடாது முயன்று வருபவர். அவர் டர்பனில் தமிழ்க் கழகங்களை ஏற்படுத்தியிருப்பதுடன், தென்னாப்பிரிகா தமிழர் சங்கத்தின் கௌரவக்காரியதரிசியாகவும், கடந்த 14



வருடங்களாக இருந்து தமிழ் வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராகவும் இருந்து வருகிறார்.

இவரிடம் தமிழ்க்கல்வி பயின்ற மாணவர்கள் பலர் நெட்டாலிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளில் உபாத்தியாயர்களாக இருந்து வருகின்றனர். ஸ்ரீ. பிள்ளை அவர்கள் தமது 16-ஆம் பிராயமுதலே உபாத்திமைத் தொழிலை மேற்கொண்டவராவர்.

ஸ்ரீ. பிள்ளை அவர்கள் பல தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் விஷயதானஞ் செய்வதுடனில்லாது இரு ஆண்டுகளாக டர்பனில் நடந்துவரும் "செந்தமிழ்ச்செல்வன்" என்னும் பத்திரிகைக்கும் கல்வி ஆசிரியராக இருந்துவருகிறார்.

அவர் போதகாசிரியராகவும், பத்திரிகாசிரியராகவும் இருப்பதுமன்றி, நாடகாசிரியராகவுமிருக்கிறார். இவரால் எழுதப்பட்டு டர்பனிலும் சுற்றுப்புறங்களிலும் நடிக்கப்பெற்ற, இளங்கோவன்—சந்திரசேகரன்—பல்வைத்திய நிபுணர்—வெனிஸ் தேசத்து வணிகன்—மதிவாணன்—காணமற் போன கணையாழி—துர்ச்செயலின் முடிவு—முதலிய நாடகங்கள் பிரசித்தம்பெற்றவைகளாகும்.

இவர் பொதுவாகத் தமிழகத்துப் பத்திராசிரியர்கள்—அறிஞர்கள் மீது மிகுந்த அன்புடையவர். தேசியகவி பாரதியார் பாடல்களில் இவருக்கு அளவு கடந்த மோகம். பாரதியார் தேசியப் பாடலை உணர்ச்சி ததும்பப் பாடி மகிழ்வார். அவ்வாறே பாடசாலைப் பிள்ளைகட்கும் போதிப்பார். பாரதியார் பாடல்களைத் தென்னாப்பிரிக்காவில் பரவச் செய்தவர் இவரே என்றுஞ் சொல்லலாம். பாரதியார் பாடல்களை பாடசாலை பிள்ளைகள் பாரதி சங்கீத சபையார் மூலம் பல முறையும் ஆப்பிரிக்கா ஒலிபரப்புக் கம்பெனி மூலம் ஒலிபரப்பச் செய்திருக்கிறார். இவரது கல்வித் திறனும் தமிழ்த் தொண்டும் மிகவும் பாராட்டத் தக்கதாகும்.



தென்னிந்திய வர்த்தக சபைத் தொகுதியில் சென்னை ஜனப்பிரதிநிதி சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு டாட்ஜ் அண்டு ஸேமூர் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீமான் மூர்த்தி ஒரு விருந்து நடத்திவைத்தார்.

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வே வித்வான்களுக்குப் பிறப்பிடமாக விருந்துவந்திருப்பதுமாகிய பழமார்னேரி கிராமத்தை அடைந்தார்; இவ்விடத்தில்தான் நம்சாஸ்திரியார் அவர்களின் முன்னோர்கள் பூர்வமீமாம்ஸாசாஸ்திரத்தின் அதிகாரிகளாக விருந்து மிகுந்த பிரக்யாதி அடைந்திருந்தனர்; தவிரவும் அவர்கள் தஞ்சாவூர் சமஸ்தானத்தின் ஆஸ்தான வித்துவான்களாகவும் உன்னத ஸ்தானத்தைப் பண்டித வுலகில் வகித்து வந்தனர்; இப்பெரியாருடைய பிதாவின் பிதாமஹரான ஸ்ரீ சூர்யநாராயண சாஸ்திரிகள் மிகுந்த பிரக்யாதியுடன் தஞ்சை அரசரது ஆஸ்தான வித்வானாகவிருந்தார். அவர் மிகப்பிரசித்த மீமாம்ஸா கிரந்தமான பாட்ட ரகஸ்யத்திற்கு சிந்தாமணி என்ற பெயருடன் ஒரு வியாக்யானம் எழுதியிருக்கிறார் என்பதும் இவ்விடத்தில் அவசியமாகக் கவனிக்கத்தக்கது. இவ்விஷயங்கள் மூலம் இவருடைய வம்சத்தில் மீமாம்ஸா சாஸ்திரம் வளர்ந்துவந்தது என்பது தெளிவாகவிளங்கும். இதற்குஅனுகுணமாக இவருக்கும் மீமாம்ஸா சாஸ்திரத்தில் அவா ஏற்பட்டது. பழமார்னேரியில் பிரசித்த மீமாம்ஸகரும் ராமநாதபுரம்ராஜாவால் மீமாம்ஸாபண்டிதரத்னம் என்ற பெயருடன் தக்க மரியாதைகளை அடைந்து மீமாம்ஸையில் நிகரற்ற பாண்டித்தியத்துடன் விளங்கிய ப்ரும்ஹஸ்ரீ ராமா சாஸ்திரிகளிடம் இவர் கொஞ்ச காலம் மீமாம்ஸா பாடத்தை அப்யஸித்தார். மஹாமஹோபாத்யாய ப்ரும்ஹஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் தமது பிதாமஹரான மஹாமஹோபாத்யாய தியாகராஜாத்வரிகளின் சரித்திரத்தை எழுதும்போது அவரது பிரதம சிஷ்யர்களுள் ஒருவராக விருந்து விளங்கிய ஸ்ரீ ராமா சாஸ்திரிகளைப்பற்றிப் பின் வருமாறு எழுதியுள்ளார்:— "அநேக ராஜஸ்தான ப்ரதித பூர்வ மீமாம்ஸா கதா கௌஸல: ஸிஷ்ட: பாரமேஸ்ச" என்று ஸ்ரீ ராமா சாஸ்திரிகள் சொற்ப காலத்திற்கெல்லாம் அகால மரணமுற்றபடியால் இவர் மஹாமஹோபாத்யாய மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளிடம் சிஷ்யனாக வந்து சேர்ந்து, அம்மஹானிடம் மீமாம்ஸா சாஸ்திரத்தைப் பூரணமாக அப்யஸிப்பதன் பொருட்டு, மன்னார்குடியிலேயே அவருடன் சில காலம் தங்கியிருந்தார்.

### ஸர் சேஷாத்திரி அய்யருக்குப் பாடம் சொல்லிவைத்தார்

பின்பு மீமாம்ஸையை சம்பூரணமாக அதிகரித்துக் கொண்டு, இவர் தமது இருபத்து இரண்டாவது வயதில் நேமம் கிராமத்திற்குத் திரும்பினார். பின்னர் இவர் மீமாம்ஸா பண்டித ரத்னம் ராமா சாஸ்திரிகளின் சகோதரரான மஹாமஹோபாத்யாய சுந்தர சாஸ்திரிகளுடன் சிறிதுகாலம் இவர் பழமார்னேரியில் தங்கியிருந்து அவரிடம் வேதாந்த சாஸ்திரத்தைத் தெரிந்து கொண்டார். மஹாமஹோபாத்யாய சுந்தர சாஸ்திரிகளும் மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளின் பிரதம சிஷ்யராக விருந்தவர்; அவர் மைசூர் சமஸ்தானத்தில் ஆஸ்தான மஹா வித்வானாகவும் தர்மாதிகாரியாகவும் வெகு காலம் இருந்து தமதூருக்குத் திரும்பினவர்; தவிர அவர் மைசூர் சம்ஸ்கிருத கலாசாலையில் அத்வைத போதகாசிரியராகவும் இருந்து பிரசித்தி பெற்றவர். "ந்யாய வேதாந்த சித்தாந்த சிந்து மந்தாமைந்தர: மஹிசுரபுராதீசஸத: பண்டித சேகர:" என்று இவரைப் பற்றி மஹாமஹோபாத்யாய மன்னார்குடி யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் தமது புத்தகத்தில் எழுதியுள்ளார். இந்த மஹாமஹோபாத்யாயருக்கு அங்கு விசேஷ மரியாதை கிட்டியது; மஹாராஜா, திவான் உட்பட யாவரும் இவரைப் பஹுமானித்தனர். ஆகையினால் ஒரு சமயம் திவானான ஸர் கே. சேஷாத்திரி அய்யர், மஹாமஹோபாத்யாய சுந்தர சாஸ்திரிகளிடம், தமக்கு ஓய்வு நேரங்களில் கொஞ்சம் வேதாந்த பாடம் சொல்லத் தகுந்த யோக்யதையுள்ள ஒருவரை அனுப்ப வேண்டும் என்று சிரத்தையுடன் கேட்டுக்கொண்டார்; உடனே அப்பெரியவர் 1901-ம் வருஷம் ஜூலை மாதம் இவரை பெங்களூருக்குஅழைத்துவந்து ஸர் கே. சேஷாத்திரி அய்யரவர்களின் கிருஹத்தில் இருக்கச் செய்தார். பிறகு கொஞ்ச காலம் இவர் திவானுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து தமது காலத்தைப் பிரயோஜனகரமாகக் கழித்துவந்தார்.

இஃது இவ்வாறிருக்கையில் இவருக்கு ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நருஸிம்ஹ பாரதீஸ்வாமிகளிடம் வேதாந்த பாடம் கற்கவேண்டும் என்ற ஆவல் மிகுதியுள்ளவராகி அந்த மஹா சன்னிதானத்தை அடைந்தார்; அங்கு ஸ்வாமிகளிடம் இவர் அத்வைத ஸித்தி, பிரம்மாநந்தீயம் ஆகிய இரு கிரந்தங்களையும் சந்தேகமின்றி படித்ததுமல்லாமல், வேதாந்த சாஸ்திரம் பூராவையும் தெரிந்துகொண்டார். இவர் சாஸ்திராப்யாஸம் செய்துகொண்டிருக்கும்போதே ஸ்ரீ சிருங்கேரி ஜகத் குருக்கள் இவரது குணாதிசயங்களையும், மீமாம்ஸா சாஸ்திரத்தில் இவருக்கு இருந்த பாண்டியத்தையும் கண்டு மகிழ்ந்தவராகி, இவரைத் தமது மடத்தில் மீமாம்ஸா பண்டிதராக வைத்துக்கொண்டார். இவ்வாறு இவர் நான்கு வருஷகாலம் சிருங்கேரியில் மீமாம்ஸா பாடம் சொல்லி வந்தார்.

பின்பு 1906-ம் ஆண்டில் ஸ்ரீசிருங்கேரி ஜகத் குருக்கள், தமது பரிவாரங்களுடன் தென்னிந்தியாவில் சஞ்சாரம் செய்யப் புறப்பட்டார். அப்போது அந்த ஸ்வாமிகள் இவரையும் தம்முடன் விசேஷமான கௌரவங்களுடன்

(32-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான இடம்.
மார்ச் & செமூர்
மார்ஷல் ரோட், எழும்பூர் மதராஸ்.

ரூ. 100 இனாம்
(மாந்திரீக மோதிரம்)
MAGIC RING
காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும். [illegible]யோகம், [illegible] பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.
BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGAL.





பத்ராவதி இரும்பு எஃகுத் தொழிற்சாலையின் தோற்றம்.

# பத்ராவதி இரும்பு எஃகு தொழிற்சாலை

—— :[o]: ——

(ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயம்மாள் எழுதியது)

தற்சமயம் இந்தியா முழுவதிலும் மைசூர் சமஸ்தானம் கைத்தொழில் வியாபார அபிவிருத்தியில் பிரதான ஸ்தானம் வகித்து வருகிறது. இந்தச் சமஸ்தானத்திலுள்ள தங்க வயல்கள் பெயர்போனவை. அதைப்போலவே இரும்புத் தொழிற்சாலையும் வெகுவாக முன்னேற்றமடைந்திருக்கிறது.

1923-ம் வருஷத்தில் மைசூர் சர்க்கார் பத்ராவதி என்னுமிடத்தில் பத்ராவதி இரும்பு எஃகு தொழிற்சாலையை ஆரம்பித்தனர். பத்ராவதி மைசூர் ரெயில்வேயில் பீரூர்-சிவமொக்கா லயனில் சிவமொக்காவிற்கு 20 மைல் தூரத்திலிருக்கிறது; மைசூரிலிருந்து 140 மைல் தூரத்திலிருக்கிறது. ஊருக்கு அருகாமையிலுள்ள பத்ராவதி நதியினாலேயே தொழிற்சாலைக்கும் ஊருக்கும் பெயர் வந்ததாம். தொழிற்சாலை சுமார் 100 எக்கர் நிலத்தை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது.

பத்ராவதியைச் சுற்றி 25 மைல் விஸ்தீர்ணத்திற்கு இரும்பு எஃகு செய்யும் மூலப்பொருளும் தொழிற்சாலைக்கு மிகவும் அத்யாவசியமான விறகும் ஏராளமாகக் கிடைக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலைச் சேர்ந்த கெம்மன்குண்டி குன்றிலிருந்து ஏராளமான விறகு கிடைக்கிறது. மரங்கள் வெட்டப்பட்டுக்கொண்டே வந்தால் பின்னிட்டு விறகு கிடைக்காது போகுமென்று வெட்ட வெட்டப் புதிய மரங்களைப்பயிராக்கக் காட்டு இலாகா அதிகாரிகள் ஏற்பாடுகள் செய்து கொண்டே வருகின்றனர். குன்றிலிருந்து வெட்டப்பட்டுச் சேகரிக்கப்படும் விறகு சுமார் மூன்று மைல் நீளம் போடப் பட்டிருக்கும் 'ஏரியல் ரோப் வே' என்ற சாதனமூலம் தொழிற் சாலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. தொழிற்சாலை உபயோகத்திற்கான மின்சார சக்தி சிவசமுத்திரத்திலிருந்து ஒரு பிரத்யேக லயன் மூலம் கிடைக்கிறது.



ப்ளாஸ்ட் பர்னேஸின் தோற்றம்.

ஒரு இரும்புத் தொழிற்சாலைக்கான யந்திர சாதனங்கள் அனைத்தும் இதில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இரும்பு செய்யப்படும் விதத்தைச் சுருக்கமாக ஆராய்வோம். முதன்முதலில் இரும்பு கலந்த மூலப்பொருளானது சுண்ணாம்புடன் கலக்கப்பட்டு பிளாஸ்ட் பர்னேஸ் (Blast Furnace) என்ற பெரிய அடுப்பில் கொட்டப்படுகின்றது. இங்கு இரும்பு சத்து உருக்கப்படுகிறது. இரும்புடன் கலந்துள்ள அநாவசியமான பதார்த்தங்கள் மேலே வந்து கொண்டே இருக்கையில்,



பத்ராவதி தொழிற்சாலையில் வேலை செய்வோர் வசிக்கும் நியூ டௌன்.

அடுப்பைச் சுற்றியுள்ள ஆட்கள் அவற்றை அகற்றி விடுகின்றனர்.

இவ்விதம் இங்கே உருக்கப்படும் இரும்பானது அடுப்பிலிருந்து திரவ ரூபமாக வெளிப்படுகிறது. வெளிப்படும் இடத்தில் சிறிய பீரங்கிவண்டிகள் போன்ற வண்டிகள் இருக்கின்றன. இவற்றில் திரவ ரூபமான இரும்பு நிரப்பப்படுகிறது. இதிலிருந்து முன்பே ஈரமணலினுல் கட்டப்பட்டிருக்கும் வாய்க்கால்களில் இரும்பு பாய்கிறது. பிறகு இரும்பு ஆறி கடினத் தன்மையை அடைகிறது. இந்த இரும்புக்குத்தான் பிக் அயர்ன் (Pig Iron) என்று பெயர். பத்ராவதி தொழிற்சாலையில் வருஷத்திற்கு இந்த இரும்பு சுமார் 24,000 டன் தயாராகின்றது.



டைப் பௌண்ட்ரி.

தொழிற்சாலையில் இரும்புக் குழாய்களும் தயாரிக்கப்படுகின்றன. இதற்கு வேண்டிய அளவிற்குக் களி மண்ணினுல் அச்சுகளைத் தயார் செய்து கொள்ளுகின்றனர். இந்த அச்சுகளில் உருகிய இரும்பை வார்த்து ஆறவைத்து 'கிரேன்' என்கிற யந்திரத்தின்மூலம் குழாய்களை வெளியே இழுக்கின்றனர். பிறகு இந்தக் குழாய்களின் அளவு பரிசோதிக்கப்பட்டுச் சரியாகவிருந்தால் வெளியே அனுப்பப்படுகின்றன. உபயோகமற்ற குழாய்களை பலமுள்ள காந்தத்தின் உதவியால் மேலே தூக்கி திடீரெனக் கீழே தள்ளி சிறு துண்டுகளாகச் செய்து மறுபடியும் அதை உருக்கி உபயோகிக்கின்றனர்.

பௌண்ட்ரி என்கிற பகுதியில் இரும்புத்தூண்கள் இரும்பு வேலி, கம்பிகள், ஜன்னல்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

இப்பொழுது எஃகுப் பிரிவைப் பற்றிச் சற்று விவரிப்போம். பிக் அயர்ன் என்று முன் கூறப்பட்ட இரும்புடன் சில சாமான்களைக் கலந்து உருக்கி எஃகு செய்து அச்சுகளில் வார்த்து எஃகுத் துண்டுகள் செய்கின்றனர். இத்துண்டுகள் நன்கு காய்ச்சப்பட்டு ரோலிங் மில்ஸ் என்கிற யந்திரத்தின் மூலம் கம்பிகளாக்கிப் பிறகு அவற்றை நயம் செய்து சூடாற்றித் தேவையான அளவுப்படித் துண்டுகளாக்குகின்றனர். இக்கம்பிகள் உருண்டை, சதுரம், ஆறுபட்டை, எட்டு பட்டை முதலிய பலவிதமாகச் செய்யப்படுகின்றன. கம்பிகள் முதற்கொண்டு தண்டவாளங்கள் வரையில் தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன.

நிலக்கரி ஏராளமாகக்கிடைக்குமிடங்களில்தான் இரும்புத் தொழிற்சாலைகள் அபிவிருத்தியடைய முடியும் என்று நினைக்கலாம். தென்னிந்தியாவில் நிலக்கரி கிடைப்பதில்லை. அதனுல் பத்ராவதி தொழிற்சாலையில் விறகையே நிலக்கரிக்குப் பதிலாக உபயோகிக்கின்றனர். ஆனுல் அவசியமானபொழுது விறகையும் கரியாகச் செய்து கொள்ள, தக்க சாதனங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். நிலக்கரி உபயோகிப்பது லாபகரம் என்பது ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஏனெனில், ஒரு டன் நிலக்கரி தயாரிக்க ஐந்து டன் விறகு வேண்டியிருக்கிறதாம். ஒரு டன் இரும்பு தயாரிக்க ஒரு டன் கரி வேண்டியிருக்கிறதாம். விறகைக் கரியாக்கும் முறையில் சில உபபொருள்கள் கிடைக்கின்றன. அவற்றில் முக்கியமானவை அஸிடேட் ஆப் லைம், தார், மெதானல்.

இரும்புச் சுரங்கத்திலும் தொழிற்சாலையிலுமாக 5,000 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கின்றனர். இத்தொழிற்சாலையில் ஒன்றிரண்டு ஜெர்மன் நிபுணர்களைத் தவிர மற்ற உத்தியோகஸ்தர்களனைவரும் இந்தியர்களே. தொழிலாளர்களுக்கென்றே தொழிற்சாலைக் கருகில் ஒரு சிறிய ஊர் நிர்மாணிக்கப்பட்டது. இதுவும் நவீன சாதனங்களுடன் விளங்குகிறது.

* * * *


# க்வேக்கர் ஓட்ஸ் - வீரர்களின் ஆகாரம்

**ஐ. எப். ஏ. கவசத்தை ஜெயித்த கல்கத்தா புட்பால் லீக்கில்சேர்ந்த கீர்த்தி பெற்ற "முகம்மதிய விளையாட்டு" வீரர்கள் க்வேக்கர் ஓட்ஸை பிரதி தினமும் உபயோகிக்கின்றார்கள்.**



பிரசித்தி பெற்ற "முகம்மதிய விளையாட்டு" புட்பால் சங்கத்தின் படத்தை இங்கு பாருங்கள். இவர்கள் லீக் சாம்பியன் ஷிப்பையும் எல்லோரும் பொருமைப்படும்படியாயுமுள்ள ஐ. எப். ஏ. கவசத்தை முதல் தடவை ஒரே வருஷத்தில் ஜெயித்த இந்திய புட்பால் கூட்டத்தினர். அதில் ஒவ்வொரு அங்கத்தினரும் க்வேக்கர் ஓட்ஸின் பானத்தை அருந்தி அனுபவிக்கின்றதைப் பாருங்கள்.

க்வேக்கர் ஓட்ஸை பிரதிதினமும் ஆகாரமாக உபயோகிப்பதினுல் தேகாரோக்கியம் சக்தி, வீரியம் முதலியவைகளை விருத்திப்படுத்தலாமென்பதை ஆண்களும், பெண்களும், சிறியோர்களும் அறிந்திருப்பதைப் போல, விளையாட்டு வீரர்களும் அறிந்திருக்கின்றார்கள்.

க்வேக்கர் ஓட்ஸ் ஜீரண சக்தியையும் எலும்பு தசை முதலியவைகளைப் பலப்படுத்துகிறது—தேகக் கட்டுப்பாட்டு பலத்தையும் அதிகப்படுத்துகிறது. டானிக்குக்கு வேண்டிய விடமின் B இதில் அதிகமாக இருப்பதினுல் நரம்புகளுக்கு சாந்தத்தைடம் பசி அபிவிருத்தியையும் கொடுத்து மலச்சிக்கல் வராமல் தடுக்கிறது.

க்வேக்கர் ஓட்ஸ் இனிமையானது. கூழாகவோ, நீராகாரமாகவோ உபயோகித்து வந்தால் தேக சௌக்கியத்திற்கு உண்மையான உத்தரவாதம் செய்ததாக ஆகும்.

இதில் ஜீரணத்தையும், நரம்புவளர்ச்சியையும், பசியையும் உண்டாக்குவதற்குத் தகுந்த விடமின் B இயற்கையிலேயே அதிகமாக இருக்கின்றது.




Q74

Quaker Oats

## தென்னிந்தியப் பிரமுகர்கள்

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் சென்றார். இவர்கள் திருவனந்தபுரத்தில் தங்கியபோது, திருவாங்கூர் மஹாராஜா, நம் வைத்தியநாத சாஸ்திரியார் அவர்களுக்கு மீமாம்ஸா சாஸ்திரத்தில் இருந்த அபார பாண்டித்தியத்தைக்கண்டு மெச்சி, இவருக்கு ஒரு பண முடிப்பையும் ஒரு ஜோடி சால்வைகளையும் அளித்துக் கௌரவித்தார்.

### ஸ்ரீ சாங்கர கிரந்தாவளியை வெளியிடுவதில் உதவி

இவ்வாறு தேசயாத்ரை செய்துகொண்டிருக்கும் சமயத்திலேயே, ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குருக்களின் சிஷ்ய ரத்னமும் அத்யந்த ப்ரிய சிஷ்யரும், குருபக்தருமானவரும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ் சொந்தக்காரருமான ப்ரும்மஸ்ரீ டி. கே. பால சுப்ரமண்ய அய்யரவர்கள், தமது வாணி விலாஸ அச்சுக்கூடத்தில், ஸ்ரீ சாங்கர கிரந்தாவளியைப் பூராவும் அச்சிட்டு வெளியிட உத்தேசித்திருப்பதாகவும், அதற்குப் பிழைத் திருத்தங்கள் செய்து உதவுவதற்கு பூர்வ மீமாம்ஸை வேதாந்தம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் விசேஷ யோக்யதை அடைந்துள்ள நம் ஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகளை ஸ்ரீரங்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் ஸ்ரீ ஜகத்குருக்களைக் கேட்டுக் கொண்டார். அவ்விதமே 1910-ம் வருஷாரம்பத்தில் இவர் ஸ்ரீ ரங்கத்திற்கு மேற்குறிப்பிக்கப்பட்ட விஷயம் காரணமாக அனுப்பப்பட்டார். அங்கு பிழையின்றி ஸ்ரீ சாங்கர கிரந்தாவளியை அச்சிட்டு வெளியிடுவதில் மிகவும் உபயோககரமாக விருந்து வந்தார்.

அப்புறம் ஸ்ரீ சிருங்கேரி மடாதிபதிகள், பூர்வோத்தர மீமாம்ஸைகளைப் போதிக்கும் பொருட்டு, பெங்களூரில் "சங்கர மடம்" என்ற பெயருடன் ஒரு பெரிய சம்ஸ்கிருத கலாசாலையை ஏற்படுத்தினர். அங்கு மீமாம்ஸையைச் சொல்லிக் கொடுப்பதற்கு நம் சாஸ்திரிகளையே பிரதான அத்யாபகராக நியமித்து 1911-ம் வருஷம் ஜுலைமாதம் ஸ்ரீரங்கத்திலிருந்து இவரைப் பெங்களூருக்கு வரவழைத்து விட்டார். அதுமுதல் இவர் பெங்களூரில் ஸ்ரீ சங்கரமடத்தில் மீமாம்ஸா அத்யாபகராக விருந்து வருகிறார்; இவரிடம் படித்து வெளிக்கிளம்பியவர்கள் அநேகர் இருப்பதால் அவர்களின் ஜாப்தாவை இங்கு சேர்ப்பது கஷ்டகாரியமாகும்.

1915-ம் வருஷம் ஜுன் மாதம், மைசூர் மஹாராஜா இவரது பாண்டியத்தை மெச்சி இவரை அரண்மனை ஆஸ்தான மகா வித்வானாக நியமித்துக் கொண்டார். மஹா வித்வானுக்குரிய வார்ஷிக சம்பாவனைகளும் இவருக்கு வழங்கப்பட்டன. 1915 முதல் 1927 வரையில் பிரதி வருஷமும் மைசூர் அரண்மனையில் இவருக்கு வித்வத் சம்மானம் 144 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. 1927-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் தஸரா தர்பார் விழாவின்போது மைசூர் மஹாராஜா இவருக்கு "மீமாம்ஸா ரத்னம்" என்ற பிருதையும், நவரத்னங்கள் இழைக்கப்பட்ட ஒரு தோடாவையும், விலையுயர்ந்த சால்வைகளையும் பட்டுகளையும் அளித்து மிகவும் கௌரவித்தார். இந்த சமயம் முதற்கொண்டு இவருடைய வித்வத் சம்பாவனையானது பிரதி வருஷம் 180 ரூபாய்களாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

### பல பிருதுகள்

ராஜ சதஸ்ஸில் மாத்திரமல்ல, ஸ்ரீ ஜகத்குருக்களும் இவரைப் பஹுமானித்தனர். ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் 1916-ம் வருஷம் மே மாதத்தில் இவருக்கு "மீமாம்ஸா கண்டீரவர்" என்ற பிருதுவையும் 2 தங்கத் தோடாக்களையும், விலையுயர்ந்த சால்வைகளையும், அளித்துப் பாராட்டினர். மறு வருஷ இறுதியில் காசி பாரத தர்ம மஹாமண்டலத்தார் தர்ப்பங்கா மஹாராஜாவின் அக்ராஸனாதிபத்யத்தின் கீழ் இவருக்கு "மீமாம்ஸா ரத்னம்" என்ற பிருதுவை அளித்தனர்.

இவரது புகழ் வெளியிடமும் பரவி மணத்துடன் வீசியது. 1917-ம் வருஷத்தில் கல்கத்தா யூனிவர்ஸிடி வைஸ்-சான்ஸலர் ஆக விருந்து கல்வியுலகில் சோபித்து வந்த காலஞ்சென்ற ஸர் ஆசுதோஷ முகர்ஜி இவரைத் தமது சர்வகலாசாலையின் மீமாம்ஸா புரொபஸராக வரவேண்டும் என்று அழைத்தார். ஆனால் ஸ்ரீசிருங்கேரி மடத்தினர் இவரை அங்கு அனுப்பிவிடச் சம்மதிக்கவில்லை. அவர்களுக்குஇவரை விட்டுப் பிரிய மனம் வரவில்லை என்பதுதான் காரணம். அவர்கள் உடனே பெங்களூர் சங்கர மடத்திலேயே பிரதி மாஸம் 100 ரூபாய்களாக இவரது சம்பளத்தை உயர்த்தி வைத்தார்கள். 1927-ம் ஆண்டில் இவர் சங்கரமடம் காலேஜின் பிரின்ஸிபாலாகவும் நியமிக்கப்பட்டார்; இது முதற்கொண்டு இவர் இன்றும் இந்த உன்னத பதவியை அலங்கரித்து வருகிறார். மைசூர் அரண்மனை ஆஸ்தான வித்வானாக விருப்பதுடன், இவர் பிரதி வருஷமும் அங்கு பூர்வ உத்தர மீமாம்ஸைகளின் பரீக்ஷகராகவும் இருந்து வருகிறார்.

இவரிடம் மீமாம்ஸா சாஸ்திரத்தை அப்யாஸம் செய்த அநேகர் தகுந்த விடங்களில் வித்வான்களாக விருந்து வருகிறார்கள். இவரிடம் படித்த அநேகருள், தற்போது சிருங்கேரிமடம் ஜகத்குருவாயிருக்கும் ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளும் மீமாம்ஸா சாஸ்திரத்தை அப்யஸித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது சிஷ்யர்களாக விருந்து இப்போது தகுந்த உத்தியோகத்தில் இருப்பவர்கள் பலர்.

இவருக்கு மீமாம்ஸா சாஸ்திரத்தில் உள்ள பாண்டித்தியமும் போதனா சக்தியும் நிகரற்றது. பாட்டதீபிகை, பாட்டரகஸ்யம், கௌஸ்துபம் முதலிய கிரந்தங்களையெல்லாம் எந்த இடத்தையும் புஸ்தகம் இல்லாமலே பாடம் சொல்லும் திறமை இவருக்கு உண்டு. விஷயங்கள் எவ்வளவு கடினமாகவும், சிக்கலாகவும் நுட்பமாகவும் இருந்த போதிலும் அவற்றை மிகவும் சுலபமாகப் பிரயாசையின்றி தெரிந்துகொள்ளும்படியானவிதத்தில் போதிக்கும் சக்தி இவரிடம் விசேஷமாகக் காணப்படுகிறது. மீமாம்ஸையில் யார் எந்த சந்தேகங்களையும் எவ்வளவு முறைகள் கேட்டபோதிலும் இவர் கொஞ்சமும் சலிப்பின்றி அவர்களுக்குத் தெளிவாகும்படியாகப் போதிப்பவர். இவரது சிஷ்யர்கள் இவரது முகத்தில் கோபக்குறியைக் கண்டதில்லையாம்!

மீமாம்ஸாசாஸ்திரத்தில் மிகவும் கடின கிரந்தமான சாபர பாஷ்யத்தின் முதல் பாதமான தர்க்க பாதத்திற்கு, இவர் "பிரபை" என்னுமொரு வியாக்யானத்தை யாவரும் அறிந்து கொள்ளும் ரீதியாக எழுதியிருக்கிறார். இந்த வியாக்யானமானது பூனா ஆனந்தாஸ்ரம அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுப் பிரசுரமாகியிருக்கிறது. இது மீமாம்ஸை படிக்கும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருந்து வருவதாகும்.

### மஹாமஹோபாத்தயாயர் பட்டம்

1936-ம் வருஷம் ஜனவரி மாதம் இவருக்கு இந்தியா கவர்ன்மெண்டார் மிகவுயர்ந்த "மஹாமஹோபாத்யாயர்" பட்டத்தை அளித்தனர். நம் மஹாமஹோபாத்யாய வைத்தியநாத சாஸ்திரிகள் பிரசங்கம் செய்வதில் நிபுணர். சம்ஸ்கிருத பாஷை அறியாதவர்களுக்குக்கூட விஷயங்கள் தெளிவாகத் தெரியும்படி உபந்யாஸம் புரிவார்; இவர் சம்ஸ்கிருதத்திலும், கன்னடத்திலும், தமிழிலும், பேசவல்லவர். அநேகம் பிரபல சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சௌகர்யத்தையும் வேண்டுகோளையும் உத்தேசித்து, இவர் சங்கர மடத்தில் ப்ரும்ம சூத்ர பாஷ்யம், கீதா பாஷ்யம், உபநிஷத் பாஷ்யம் முதலிய அரிய கிரந்தங்களை சுலபமான விதமாகப் பாடம் சொல்லி வருகிறார். இவர் பாடம் சொல்லும் சக்தி காரணமாக, யாவரும் இவரது நாவன்மையையும் நைபுண்யத்தையும் விரும்பி இவரை அண்டுகின்றனர்.

மஹா மஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் இன்றும் சங்கர மடம் காலேஜ் பிரின்ஸிபாலாகவும் மீமாம்ஸ அத்யாபகராகவும் இருந்து வருகிறார். இவர் இன்னும் பல்லாண்டுகள் பரமேஸ்வரன் அனுக்ரஹத்தால் சகல சுகங்களுடனும் வாழ்ந்து வர வேண்டும் என்று பிரார்த்திப்போமாக!


**காங்கிரஸ் மகா சபை சரித்திரம்**

**3—பாகம்**

விலை ரூபாய் 6.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.





**தியாகராஜா தங்க நகைகள்**

அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானது. அநேக கண் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசு பெற்றது. தங்கத்துக்கு கனத்தில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டது.

நாகரீகத்திற்கேற்ற நாநாவித கல் மாலைகளும், வளையல், செயின், ஒட்டியாணம் முதலிய நகைகளும் நயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

**ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஒர்க்ஸ்,**
77, சைனாபஜார் ரோட் மதராஸ்.



வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

**சித்தவைத்திய ஆசான்,**

60 வருட அனுபவ ரகசிய கைம்முறைகள் அடங்கியது. வைத்தியர் உதவியின்றி குழந்தைகள் வியாதி ஆண் பெண் இரகசிய வியாதிகள். இவற்றை நீக்கிக் கொள்ளலாம். 3 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறவும் முருகன் வைத்தியசாலை, 9, பொம்மு செட்டி தெரு, பி. டி. சென்னை.



திண்டிவனம் ஸ்ரீ காமாக்ஷி விலாஸ இலவச பெண் பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டம் சமீபத்தில் நடைபெற்றது. டாக்டர் ஸ்ரீமதி மதுரநாயகம் பரிசுகள் வழங்கினர்.

சரித்திரப்பகுதி

# நரலோக வீரன்

(தி. ந. சுப்பிரமணியன்)

கிருஷ்ணா நதிக்குத் தெற்கே உள்ள நாடுகள் அனைத்தும் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த சோழர்களுடைய ஆதிக்கத்தில் வந்து அதற்குப் பிறகு இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அவர்களுடைய ஆளுகையின்கீழ் இருந்தன. சோழ வேந்தர்கள் வடக்கே கலிங்கம், சக்கரக்கோட்டம் முதலிய நாடுகளையும் கடல் கடந்து சிங்களம், ஜாவா, சுமத்திரா முதலிய தீவுகளையும் தாக்கி வெற்றிகொண்டு சிலகாலம் ஆண்டும் வந்தார்கள். அக்காலத்தில் நாடு சுபிக்ஷமாகவே இருந்தது. தரைப்படை, கடற்படை, அரசாங்க உத்தியோகம் முதலிய பலவற்றிற்கும் தமிழ் மக்களே நியமிக்கப்பட்டு வந்தார்கள். படைத் தலைமை, வெளிநாட்டு ஆதிபத்தியம் முதலியவற்றுக்கு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவார்கள். ஆயினும் பல சமயங்களில் வேறு பலரும் அந்த ஸ்தானங்களை மிக்க திறமையுடன் வகித்திருக்கிறார்கள்.

ஆதிகாலம் தொட்டு ஆங்கிலேயர் ஆளுகைக்கு வரும் வரையில் இந்தியாவின் பல பாகங்களில் பல காலங்களில் பலவேறு வமிசத்தார்கள் ஆண்டுவந்திருக்கிறார்கள். அவர்களின் சரித்திரத்தை அறிவதற்குச் சாஸனங்களே பெரிதும் உபயோகமாக இருக்கின்றன. தமிழ் நாட்டில் ஆண்டு வந்த சோழர்களுடைய ஆட்சியில் வெட்டப்பட்ட சாஸனங்களைப்போல அதிகமாக வேறு எந்த வமிசத்தாருடைய காலத்திலும் இல்லை. தென்னாட்டிற் கிடைக்கும் சாஸனங்களில் நாலில் ஒரு பங்கு சோழ சாஸனங்களாகும். அவற்றினின்றும் சோழ வேந்தர்கள் ஆண்டுவந்த காலத்தில் நாட்டின் ராஜீய, சமூக நிலைமுதலியவற்றை நன்கு அறிந்துகொள்ளலாம். ஆயினும், அரசர்களுக்கு அடுத்தபடியாக இருந்து அரசியலை நடத்திய, மந்திரிகள், படைத் தலைவர்கள் முதலியவர்கள் பலரின் பெயர்கள்மட்டில் தெரிகின்றனவேயன்றி, அவர்களைப்பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை. மிகவும் நுணுக்கமாய் ஆராய்ந்தால் ஒன்றிரண்டு பேர்களைப்பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. அவர்களில் நரலோக வீரனும் ஒருவன்.

நரலோக வீரன் பெயர் முதற் குலோத்துங்கன் ஆட்சியின் பிற்பகுதியிலும், அவன் மகன் விக்கிரமசோழன் ஆட்சியின் முற்பகுதியிலும் அதாவது கி. பி. 1098-ம் ஆண்டிலிருந்து 1124-ம் ஆண்டுவரையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு அதிகமாகச் சோழ சாஸனங்களில் காணப்படுகின்றது. சாஸனங்களில் இவன், கூத்தன், மணவிற் கூத்தன், பொன்னம்பலக் கூத்தன், ஸபா நர்த்தகன், அரும்பாக்கிழான், காலிங்கர்கோன், காலிங்கராயன், தொண்டயர்கோன், தொண்டைமான், அருளாகரன், மானுவதாரன், நரலோகவீரன் என்ற பலவிதமான பெயர்களால் குறிக்கப்படுகிறான். இப்பெயர்களை நன்கு கவனித்தால் இவனுடைய பிள்ளை திருநாமம் கூத்தன் என்பதும், பிரஸித்தமான பட்டப் பெயர் நரலோகவீரன் என்பதும் தெரியவருகின்றன.

இவனைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும் சாஸனங்கள் பல உள. அவற்றுள் முக்கியமானவை வடமொழியிலோ தமிழிலோ அல்லது இரண்டு மொழிகளிலுமோ செய்யுட்களாக உள்ளன. சிதம்பரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று 31 வடமொழி சுலோகங்களையும், 37 தமிழ் வெண்பாக்களையும் கொண்டுள்ளது. அதேபோல திருவதிகையில் உள்ள கல்வெட்டு 25 தமிழ்ப் பாட்டுக்களால் ஆனது. ஆயினும் அக்கல்வெட்டுக்களினின்றும், சரித்திர நிகழ்ச்சிகள் அதிகம் தெரியவில்லை.

இவன் "வேளாண்குடி முதலான்" என்று சிறப்பிக்கப்படுவதால் வேளாள குலத்தில் பிறந்தவன் என்பது தெரிகிறது. இவனுடைய பிறப்பு வளர்ப்பைப்பற்றிய செய்திகளும், இவன் எப்படி சேனாதிபதிப் பதவியை அடைந்தான் என்பதும் தெரியவில்லை.

இவன் தொண்டைமண்டலத்தில் உள்ள அரும்பாக்கம் என்னும் ஊரில் பிறந்தவன் என்பதும், பிறகு அரசனிடமிருந்து மணவில் என்னும் ஊரைப் பரிசாகப் பெற்றான் என்பதும் தெரியவருகின்றன. மணவில் என்பது இப்பொழுது மணப்பாக்கம் என்று வழங்கப்படும். இவ்வூர்கள் இப்பொழுது வடாற்காடு ஜில்லாவில், செய்யாறு தாலூகாவில் உள்ள அரும்பாக்கம், மணப்பாக்கம் என்ற கிராமங்களே போலும்.

இவனுடைய போர்ச்செயல்களை,

"வேங்கையினுங்
கூடார் விழிஞத்துங்
கொல்லத்துங் கொங்கத்து
மோடா யிரட்டத்து
மொட்டத்து நாடா
தடியெடுத்து வெவ்வேற
ரசறிய வீரக்
கொடியெடுத்த கலிங்கர்
கோன்."

என்று வரும் 'விக்கிரம சோழனுலா'வின் அடிகள் நன்கு விளக்குகின்றன.

வேங்கி நாடு, ஒட்டரதேசம் எனப்படும் கலிங்கம், இரட்டம் எனப்படும் இரட்டப்பாடி ஆகிய நாடுகளில் சோழ அரசர்களுக்காக இவன் போர் நடத்தியதைப் பற்றிய விவரங்களை இவனுடைய சாஸனங்கள் விளக்கிக் கூறவில்லை. அவை "ஒல்லைவட வேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்கும்;" "தென்னர் மலை மன்னர் எனை வடமன்னர் மற்ற, குலமன்னர் செல்வமெலாம் கொண்டு" என்று பொதுவாகவே கூறிச் செல்கின்றன. ஆனால், இவனுக்கு உள்ள காலிங்கர்கோன், காலிங்கராயன் என்னும் விருதுகளைக் கவனித்தால், இவன் கலிங்கப்போரில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்று நிச்சயமாகிறது. முதற்குலோத்துங்கன் சுமார் கி. பி. 1090-1095 ஆண்டுகளுக்கிடையில் கலிங்கத்தின் மேல் படையெடுத்துச் சென்று வெற்றிகொண்டது பிரஸித்தமானது. அந்த வெற்றியைக் குறித்துத்தான் ஜயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியைப் பாடியது. அப்போரை நடத்திய கருணாகரத்தொண்டைமானுக்கு உதவியாக நரலோக வீரனும் சென்றான்போலும்.

குலோத்துங்கன் பட்டத்துக்கு வந்த காலத்தில் பாண்டியர்களும் சேரர்களும் சோழ ஆதிக்கத்துக்கு அடங்கியவர்களாக இருந்தார்கள். ஆயினும் சமயம் வாய்த்தபொழுதெல்லாம், பேரரசை மதிக்காமல் நடந்து வந்தார்கள். அதனால் குலோத்துங்கன் தென்திசையை நோக்கித் தன் படையை நடத்திப் பாண்டியர்களை வென்று கோட்டாறு என்னும்

கோட்டையைப் பிடித்துக் கொண்டதாக அவன் சாஸனங்கள் தெரிவிக்கின்றன. அச்சண்டைகளில் நரலோகவீரன் ஒரு படைத் தலைவனாகச் சென்று வெற்றிகொண்டான்.

இவன் சாஸனத்தில்,

"சொல்லம் அழிவு
கண்டான்,"
"தெனனர் குடமலை
நாடெறிந்து"
"பூசல்
விளைவித்தவேணுடும்
வெற் னைத்துஞ் செந்தீ
விளைவித்தான்
தொண்டையார் மன்"
"தெனவர்தம
பூவேறு வார்குழலாரொடும்
பொருட்டேற மாவேறு
தொண்டையர் கோன்"

என்று வரும் பகுதிகள் இச்செய்திகளைத் தெரிவிக்கின்றன. மற்றொரு இடத்தில்,

"தென்னுடன் சாவேற்றின் திண் செருக்கை யன்றமைத்தான் தொண்டையர்கோன் ஆங்கு" என்று காணப்படுவதால், இவன் பாண்டிய நாட்டில் 'சாவேறு' எனப்படுபவரைப போரில் வென்றான் என்பது பெறப்படும். சாவேறு எனபார், பகையரசரைச் சூழ்ந்து காக்கும்படையை ஒரு முகமாய்ப் பாய்ந்து ஊடறுத்துச் செல்ல முயன்று அந்நிலையிலே உயிர்துறத்தலையே விரதமாகக்கொண்ட வீரர் தொகுதியாவர். இப்படிப்பட்ட வீரசாதியினர் மலை நாட்டில் மட்டும்தான் இருந்தனர் என்று கூறுவார்கள். இச்சாஸனப் பகுதியால் அவர்கள்பாண்டிய நாட்டிலும் இருந்தார்கள் என்பது தெரிய வரும்.

"தொல்லை நீர்
மண்மகளைத் தங்கோன்
மதிக்குடைக்கீழ் வீற்றிருத்தி
உண்மகிழுந் தொண்டையர்
கோனை"

என்று இவன் சிறப்பிக்கப்படுவது இவன் வடநாட்டிலும், தென்னாட்டிலும், போர் புரிந்து அரசாங்கத்தை நிலைநிறுத்தியதை நன்கு விளக்குகின்றது.

இவன்போர்ச்செயலில்மட்டுமின்றி, நாட்டுமக்களுக்குப் பல நன்மைகள் புரிந்தும் நற்பெயர் பெற்றிருக்கிறான். அக்காலத்தில் கோயில்கள் தெய்வ வழிபாட்டுக்கு மட்டில் அன்றிக் கலை வளர்ச்சிக்கும் பெரிதும் உபயோகமாக இருந்தது என்பதை யாவரும் அறிவர். கோயில்கள் பலவற்றுக்கு இவன் திருப்பணிகள் செய்திருக்கிறான்.

தென்னாற்காடு ஜில்லாவில், சித்தலிங்கமடத்தில், விமானம் பிராகாரம், மண்டபம் முதலியவற்றுடன் கல்லால் ஒரு கோயில் சமைத்தான். காஞ்சிபுரத்தில், அருளாளப் பெருமாள் கோயிலில் திருமடைப்பள்ளி, திருச்சுற்று, சுவர்ண கலசம் முதலியன அமைத்து மூல விக்கிரகத்தையும் ஸ்தாபனம் செய்தான். திருவதிகையில் ஒரு கோயில் சமைத்தான்.

சிதம்பரம் சபா நாயகர் கோயிலுக்குப் பல தருமங்கள் செய்துள்ளான். அக்கோயிலுக்கு வான் அளாவ ஒரு மதிலும், இரு கோபுரங்களும் கட்டிக் குளத்துக்கும் படிக்கட்டுகள் அமைத்தான். பேரம்பலத்துக்குச் செப்புத் தகடு வேய்ந்தான். பிக்ஷாடன மூர்த்திக்கு விருஷபவாகனம் ஒன்று செய்துவைத்தான். ஒரு மண்டபம் கட்டி அதில் தினம் ஞானசம்பந்தப் பெருமான் தேவாரத்தை ஓதுவதற்கு ஏற்பாடு செய்தான். கடற்கரையோரத்தில் மாசி மகத்துக்கு சுவாமி போய்த் தங்குவதற்கு ஒரு மண்டபம் கட்டி அதற்குப் போகச் சாலையும் போட்டுவித்தான். கோயிலுக்கு ஒரு நந்தவனம் ஏற்படுத்தியதுடன் கோயிலில் தினம் பல விளக்குகள் போடுவதற்கு நிபந்தங்கள் கொடுத்தான். அன்றி, வீதிகளிலும் விளக்குகள் பேட்டுத் தினம் அவற்றை எரிக்கவும், தினம் வீதிகளில் தண்ணீர் தெளிக்கவும் நிர்ணயித்தான்.

இங்ஙனம் "தன் குலநாயக"னுக்குப் பல திருப்பணிகள் செய்ததன்றி, வேறு பல கோயில்களுக்கு நிபந்தங்கள் கொடுத்தும், பல கால்வாய்கள் வெட்டியும், சிதம்பரத்துக்குப் பக்கத்தில் உள்ள ஏரி ஒன்றுக்குக் கலிங்கல் கட்டியும், தன் வாழ்நாளைக் கழித்து வந்தான்.

இவை யாவற்றையும் எந்தப் பணத்தைக் கொண்டு செய்தான்? இதற்கு விடை சிதம்பரம் கல்வெட்டுக்களினின்றும் கிடைக்கின்றது.

சிதம்பரம் கோயிலுக்கு இவன் செய்தனவாகக் கூறப்படும் திருப்பணிகள் அக்காலத்தில் நாட்டை ஆண்டு வந்த விக்கிரமசோழன் செய்தனவாகத் தெரிவிக்கும் சாஸனங்கள் அக்கோயிலிலேயே உள. விக்கிரமசோழன் சாஸனத்தில் அவன் 'செம்பொன்னம்பலம் சூழ் திருமாளிகை' கட்டியதாகக் கூறப்படுவது போலவே, அக்கோயில் மதில்களில் ஒன்று "விக்கிரம சோழன் திருமாளிகை" என்று வழங்கப்படுகின்றது. ஒரே சமயத்தில் ஒரேவிதமான திருப்பணிகளை இருவர் செய்தார்கள் என்று கூறுவது சாத்தியமா? அன்றி, அவ்விருவர்களில் ஒருவன் அரசன், மற்றொருவன் அவன் கீழ் அதிகாரி. இவற்றை நாம் நன்கு கவனித்தால், அரசன் சார்பாக, நரலோகவீரன், அரசாங்கப் பணத்தினின்றும், இத்தருமங்களைச் செய்தான் என்றே கூறவேண்டும்.

இளம் வயதில் போர்த்தொழில் வெளிநாட்டு ராஜீய விவகாரங்கள் முதலியவற்றில் ஈடுபட்டு உழைத்த ஒருவன், அந்திய காலத்தில், குடிகளுக்குப் பணிவிடை செய்தல், தெய்வ வழிபாடு முதலியவற்றில் தன் காலத்தைக் கழிக்க விரும்புவது இயற்கை. நரலோகவீரனும், அரசாங்கத்தில் தனக்கு இருந்த நன்மதிப்பை நல்வழியில் உபயோகித்து அத்தகைய பணியையே செய்து தமிழ் மக்கள் என்றைக்கும் போற்றும் பதவியைப் பெற்றான்.




உபத்திரவிக்கும்
மூலச்சூடு
அற்புத நிவாரணி

ஜாம்-பெக்
அற்புத நிவாரணி
அளிக்கிறது.

மூலச்சூடு-மிகக் கொடிய வியாதி: குடல்கோளாறால் ஏற்படுகிறது. இதன் வலியினின்று விடுபடுங்கள். தவறாமல் ஜாம்பெக் மெழுகு தடவுங்கள். ஆச்சரியமான நிவாரணம் ஏற்படும். நமைச்சல, சொறி, சிரங்கு புண், கத்தி வெட்டுகள், ரணம் முதலியவற்றுக்கு ஜாம-பெக் இணையற்றது. பெட்டி 1 க்கு ரூ. 1 அல்லது ரூ. 2—4 வீதம் எல்லா மருந்து விய பாரிகளிடமும் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

கிருமிக் கொழுப்பற்றது.



ஜாம்பெக்
Zam-Buk



கொசுக்களைக்
கொல்ல உபயோகமற்ற
"கிருமி நாசினிகளை"
நம்பாதீர்கள்
பிளிட் தெளியுங்கள்
FLIT

"பிளிட்" என்ற பெயருடன் விளங்கும் போலிச் சரக்குகளை நம்பாதீர்கள், கறுப்புப் பட்டையுடன் கூடிய சோல்ஜர்கொண்ட மஞ்சள் டின்னிலேயே "பிளிட்" விற்கப்படுகிறது. இடுக்குகளில் "பிளிட்" தெளியுங்கள். ஊர்வன அதைத் தொட்டு மடிகின்றன



சோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபூட்டர்கள்:—
... கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

# ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போர்வையால் தன் யௌவன முகத்தை மூடிக்கொண்டவள் போலவும்—மெதுவாய் வந்து, நாயனர் பாதங்களில் வீழ்ந்து—தான் அவர்க்கே—தனக்கு அவரே அடைக்கலமென்று சரணாகதியடைந்தாற்போல்—அன்பாய் நமஸ்கரித்து, ஏழு வருஷங்களுக்குமுன் தரிசித்த அவர் திருக்கரத்தாலளிக்கப்பட்ட பிரஸாதத்தை—தேடித் தவமிருந்தழைத்த தெய்வமே பிரஸன்னமாய்த் தந்தருளிய வரப்பிரஸாதமென மதித்தவள்போல்—ஆவலாய்ப் பெற்று, அறைக்குட்சென்று அன்றோடு, தன்னைப் பிடித்த ஆயிரம் துன்பப் பேய்களும் அடியோடகன்றுவிட்டாற்போல் — ஆனந்தமாய்த் தன் நெற்றியிற் பூசிக்கொண்டு தன் தம்பி மாதவன் நெற்றியிலும் பூசினாள். இவ்வனைத்தும் முடிந்தபின், அன்றிரவு நந்தகோபர் ஆசிரமத்தின் முகட்டுவரை முட்டி நிறைந்து நின்ற பரமானந்தமென்னும் அரிய பரிமளப் புகையின் மிகுதியினால் மூச்சு முட்டித் திகைப்பவர்கள்போல், பட்டகசாலையிலும் பக்கத்தறைகளிலும் உட்கார்ந்தும் நின்றுகொண்டுமிருந்த நாயனர் முதலிய எட்டுப் பேர்களும் சுமார் பத்து நிமிஷ நேரம் ஒன்றும் பேசமுடியாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே 'கம்' என்று பேசாதிருந்தார்கள்.

டாக்டர் அமரேச நாயனரை இமை கொட்டாது பார்த்தவண்ணமே உட்கார்ந்துகொண்டிருந்த கார்த்திகேயர் கற்பகம் இருவர் கண்களும், "ஆகா! இவன் நமது குழந்தையா? ராஜகுமாரன் போன்ற முகவசீகரமும், முனீசுரர்களும் அஞ்சி மதிக்கக்கூடியவித்யா கம்பீரமும், கல்லையுங் கரைக்கும் கருணைப் பார்வையும் பொருந்தி விளங்கும் இந்தச் செல்வக் குமாரன் எங்கள் வயிற்றிற் ஜனித்தவனு! நாங்கள் பெற்ற பிள்ளையா! விற்றாலும் அரைக்காசுகூடப் பெறாத சாமான்யமான—அதி கேவலமான—மகா தரித்திரர்களாகிய—யாருமற்ற ஏழைப் பரதேசிகளான—எங்கள் வயிற்றிலா நீ பிறந்தாய்?" என்று வாய்திறந்து பேசுவதுபோல் விழித்தன. அவ்விருவரும் இடையிடையே விட்டுக்கொண்டிருந்த பாரமான நீண்ட பெருமூச்சுகள், "ஐயோ! மகா பாபிகளாகிய எங்கள்வயிற்றிலுதிக்கும் துர்ப்பாக்கியத்தைப் பெற்ற செல்வப் புதல்வனே! நீ உன்னைப் பெற்ற எங்களை நினைத்தாயோ! எங்களை எங்கெங்கே தேடியலைந்தாயோ! எங்களைக் காணுமல் எப்படி வருந்தினையோ! யாரரரிடம் என்னென்ன அருமைக் குறைகளையடைந்தாயோ! உன்னை இவ்வாறு தனியே நின்று தவிக்கவிட்டுப் போன எங்களிருவர் குற்றத்தையும் மன்னிக்கவேண்டும்', என்று பழமையை நினைந்து பச்சாத்தாபத்துடன் அழுவதுபோல் தோன்றின. இதன் மத்தியில், சற்றே பெற்றோர் முகத்தை உற்று நோக்குவதும், அதன்பின் சற்றே குனிந்தவண்ணமே பூமியை நோக்குவதுமாயிருந்த நாயனருடைய மேனோக்கிய பார்வையும், கீழ் நோக்கிய பார்வையும் முறையே, "என் பெற்றோரே! இத்தனை நாட் கழித்தாவது உங்கள் முகங்களையெனக்குக் காட்டினீர்களே! உங்கட்கு நமஸ்காரம்!" என்று சந்தோஷிப்பதுபோலவும், "ஐயோ! என்னைப் பெற்றோரே! நீங்கள், உங்கள் உண்மை நிலைமையைப்பற்றி, எனக்கு அணுவளவேனும் அறிவியாமல், என் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டுவிட்டுப் போய்விட்டீர்களே! இது உங்கட்கு முறையோ!" என்று வருந்துவதுபோலும் தோன்றின. மாதாபிதா மகன் மூவரும் தலைவாயிலிற் பேசிக்கொண்ட முறைப் பேச்சுகளைக் கேட்டுப் பாதி ரகஸ்யத்தை ஊகித்தறிந்து கொண்ட ராதா, நந்தகோபர், பாட்டிமார் நால்வரும், பட்டகசாலைக்கு வந்தபின், "நீயும் மாதவனும் உங்கள் அத்தானை நமஸ்காரம் செய்யுங்கள்" என்று ராதாவை நோக்கிக் கார்த்திகேயர் கூறிய வசனத்தைக் கேட்ட


# முத்துக்குளியல்

சில வருஷங்களுக்கு ஒரு முறை தென் சமுத்திரத்தில் முத்துக்குளித்து, சிப்பிகளை சிறு பொட்டணங்களாக்கி, ஒரே சராசரி விலையில் விற்பதுண்டு. அவற்றை வாங்கும் அதிர்ஷ்டமுள்ள சிலருக்கு மாத்திரமே முத்துக்கள் கிடைக்கின்றன.

அவ்வண்ணமே, காப்பிக்கொட்டைக்கு பச்சைச் சாயமேற்றி விற்கும் இக்காலத்தில், நீங்கள் கடையில் காப்பி வாங்கும் சமயத்தில் உங்கள் விதிப்படி நல்ல காப்பியோ அல்லது வெளிப்பகட்டான காசுக்கு உதவாத மட்டச் சரக்கோ கிடைக்கலாம். ஆனால் **ஸ்டேன்ஸ் கம்பெனி**யில் 3, 5, 7 பவுன் துணிப்பைகளில் பிடிக்கப்பட்டு முகவாயில் ஈய முத்திரை தரிக்கப்பட்ட அசல் நீலகிரிக் காப்பியை வாங்குவீர்களேயானால், உங்கள் பணத்துக்குத்தக்க பொருள் பெறுவீர்கள். துர் அதிர்ஷ்டம் என்பதே கிடையாது; போட்டி சரக்குகளும் துணிப்பைகளில் விற்பனை செய்யப்படுவதால்,

**ஸ்டேன்ஸ்**

என்று கேட்கவும்.





ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை

"பாலகஸ்"பேதி மாத்திரை "யூனிகான்" டானிக்

14, ஸச. அவுஸ், மாடுங்கா, பம்பாய்



ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

**கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்**

நகை வியாபாரிகள்

175, சைனுபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.





## மாதுளை மணிகளொத்த பற்கள்

நீங்கள் வெற்றிலை போட்டுமென்ற பிறகு பார்த்தால் உங்கள் பற்கள் மாதுளை விதைகளைப் போல இருக்கும்; "நீம் டூத் பேஸ்ட்" உங்கள் பற்களை அவ்வளவு அழகாகச் சுத்தம் செய்யும். "நீம் டூத் பேஸ்ட்" உபயோகித்தால் உங்களுக்குப் பல் வலியே ஏற்படாது, ஈறுகளினின்றும் இரத்தம் பெருகும் தொந்தரவும் இருக்காது; பயாரியாவின் ஆரம்பக் குறிகளாகிய இவைகளினின்றும் நீங்கள் விடுபடுவீர்கள். இன்றே "நீம் டூத் பேஸ்ட்" உபயோகிக்கத் தொடங்குங்கள்; எவ்விதமான பல் உபத்திரவமுமின்றி வாழ்வீர்கள்.



'Neem' TOOTH-PASTE

NTP 2

அசல் புஞ ஜார்

வைரங்கள்

இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப்சந்த்
175, சைஞ பஜார் மதராஸ்

மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

187, மவுண்ட்ரோட் மதராஸ்

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ... பகுதியால் ... ணடியபாயமூர்த்தி,
செக்ரிடரி

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

| நீளம் | அகலம் | உயரம் | சாதா | உயர்ந்தது | ஸ்பெஷல் |
|---|---|---|---|---|---|
| அடி | அடி | அடி | ரூ. | ரூ. | ரூ. |
| 6 | 3½ | 3½ | 1-4 | 1-8 | 2-4 |
| 6 | 4 | 4 | 1-8 | 1-12 | 2-[illegible] |
| 6½ | 4½ | 4½ | 1-12 | 2-4 | 2-12 |
| 7 | 5 | 5 | 2-4 | 2-12 | 3-4 |
| 7½ | 6 | 6 | 2-12 | 3-4 | 4-4 |

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.




ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம
125,6600. ஜனங்கள் போற்றுவது
பரீஷை வெற்றி, ஜீவன விருத்தி. சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபிஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

...வுடன், மற்றப் பாதி ரகஸ்யத்தையும் தெளிவாயறிந்துகொண்டு, முதலில் வாய்திறந்துபேச மனோவலியற்றவர்களாய், "வரவரக் கண்டறிவோம்" என்று வாயைத் திறவாதிருந்தார்கள். இவ்வாறாக நெடுநேரம்வரை அனைவரும் பேசாதிருக்கவே, அந்த நேரமெல்லாம் நந்தகோபர் பட்டசாலை முழுவதையும் மௌனமென்னும் ஒரு மாயப் பெண்ணை அரசுபுரிந்ததுபோலிருந்தது. எல்லாரும் மௌனமயமாயும், அனைத்தும் ஆச்சர்ய மயமாயும், சகலமும் ஆனந்த மயமாயும் இருக்கும் இந்தத் தருணத்தில், முதன் முதல், அங்கே நிறைந்திருந்த மௌனத்தை உலைத்து, மெல்ல வாய்திறந்து,

கார்த்திகேயர்:—அப்பா, நந்தகோபா, கடிதம் யாரிடமிருக்கிறது? (என)

நந்த:—கடிதமா? அது (நாயனரைக் காட்டிக்கொண்டு) அங்கேதானிருக்கிறது.

கார்த்:—அதை வாங்கி எல்லாரும் கேட்கும்படி வாசி. நந்தகோபா, இது உன் மருமகன்தான்; அத்தை, இது உங்கள் பேரன்தான்.

பூசை:—ஐயா! என் பேரனு! உன் மகனு! கற்பகம் பெற்ற பிள்ளையா!

நந்த:— (நாயனரிடமிருந்து கடிதத்தை வாங்கி) எல்லாரும் கேளுங்கள் (என்று முதல் பாராவை வாசிக்கவும்)

... பூனாளக கழி ...

பூல ... விந்தாச:—ஐயா, உன்னை யாரோ எவரோ என்று நினைத்தேனே! நீ என் பேரனு! உன் பெயர் அமரேசனு! (என்று நாயனரை நெருங்கினள்) நேற்று மாலை, நானும் உன்னை யறியவில்லை; நீயும் என்னை யறியவில்லை (என்று நாயனர் பக்கத்திலுட்கார்ந்தாள்) நீ உன் மாமன் வீட்டில், மகேந்திரத்தில் உன் கொழுந்தி ராதாவுக்குப் படிப்பித்தாயாமே? ஐயோ! அந்தக் காலத்தில், உன் மாமனிடம் ஆண் குழந்தையில்லாதிருந்ததற்கும், ஒரே பெண்ணை வைத்துக்கொண்டு இத்தனை சம்பாத்தியம் செய்ததற்கும், நீ இன்னுரென்பதை மட்டும் உன் மாமன் அறிந்திருந்தால்—உனக்கு என்னவெல்லாம் செய்வான்! எத்தனை அருமையெல்லாம் செய்வான்! சும்மா, அருமை மட்டுமா! அதையெல்லாம் இனிப் பேசி ஆவதென்ன! (என்று நாயனர் முதுகைத் தடவினள்) உன் மாமன்—அவசரப்பட்ட மாமன்— அவசரம் அவசரமென்று நின்றுன்—எல்லாம் அவசரமாய்விட்டதே! (என்று கண்ணீர் வடித்தாள்)

நந்த:—அத்தான், எனது மாப்பிள்ளையவர்கள் பின்னும் இரண்டு வருஷம் ராதாவுக்குப் படிப்பிப்பதையுங்கூட அந்தப் பாவி நச்சுமுதலிதான் கெடுத்துவிட்டான்.

கார்த்:—அவன் சொன்னுனென்று, நீயும் உன் புத்தியையேன் கடன் கொடுத்தாய்? என் தங்கை அநந்தகல்யாணிக்கிருந்த யோசனை உனக்கில்லாமல் போயிற்றே?

நாய:—(இதுவரை மௌனமாயிருந்தவர்) அம்மா, அந்த அம்மா—எனது அத்தை அநந்தக்ல்யாணி அம்மாளுக்குச் சமானமான உத்தமிகளை நான் இதுவரை சுற்றிவந்த ஒரு தேசத்திலும் கண்டிருப்பதில்லை. ஈகை, நியாயம், அன்பு, யுக்திபுத்தி சகல விஷயங்களிலும் சிறந்த புண்யவதி. உங்களெல்லாரையும் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தும் அத்தையவர்களை மட்டும் கண்ணுற்காண நான் தவம் செய்யவில்லை (என்று வருந்தினர்)

நந்த:—அவள் உத்தமியென்ற பெயருடன் காலம் செல்லவும், நான் மடையன், பெற்ற பிள்ளைக்கே பொல்லாதவனென்ற பெயருடன் உயிர் வைத்து வாழவும் ஈசன் என் தலையிலெழுதினன்.

கற்ப:—நந்தகோபா, சென்றதை நினைந்து வருந்தாதே; சும்மா இரு—என்றிவ்வாறு தொடங்கிய சம்பாஷணை, ஒன்றைத் தொட்டொன்றாய், ராதாவின் விவாகத்தைப்பற்றியும் பண்ணை வீட்டு விசேஷங்களைப் பற்றியும் ... யாதவனிகுப பாஷாணம் கொடுத்த மோசத்தைப்பற்றியும் நிகழ்ந்துகொண்டிருக்கையில்,

நாய:—நேற்று மாலையில் அல்லது இன்று காலையிலாவது சப்இன்ஸ்பெக்டர் சாயபு பாற்கடலுக்குப் புறப்படுவதாய் என்னிடம் சொன்னர். எல்லாம் நாளை இந்நேரத்திற்குள் வெளியாய்விடும். (இந்த சமயம் வந்த)

சந்த:—(முற்றத்தில் நின்றுகொண்டு) அம்மா, பெரியம்மா, பெரியம்மோ!

பூசை:—அது யார்? சந்தாணமா? என்ன வேணுமப்பா?

சந்த:—பால், பால், நல்ல பாலாய் அரைப்படி பால் கொண்டு வாருங்கம்மா. அவாளுக்கென்ன! கிழப்பாளயத்தில் படுத்துத் தூங்குவார்கள். நான் அலைகிறேன். எட்டு வீடாய் அலைகிறேன். காப்பிக்கிளப்பில், "உப்புமா இல்லை; இட்டிலியில்லை; ரவாதோசையில்லை; முறுக்குவேணுமா தேங்குழல் வேணுமா?" என்கிருன். பத்து மணிக்குமேல் எங்கே போகிறது? என்ன செய்கிறது? பெரியம்மா, நம்ம வீட்டில் ஏதாவது பலகாரமுண்டோ?

நந்த:— (வீட்டிற்குள்ளிருந்துகொண்டே) அடே சந்தனம், பால் யாருக்கு?

சந்த:—(ஐயோவென்று கையை நெறித்துக்கொண்டு) எஜமான் இருக்கிறீர்களா? அடியேனுக்குத் தெரியாது.

நரைமயிரை
அகற்றுங்கள்



உங்களது தலைமயிர் வெளுக்காவலாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறியபாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.
சயண்டிபிக் பப்ளிஷிங் கம்பெனி
(மெடிகல் டிபார்ட்மெண்டு S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா
மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி,
260, சைனபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்.

G. கன்னையா கம்பெனி
இரும்புப்பெட்டி வியாபாரம்.



137. பிராட்வே மதராஸ்

பிரபல ஜோதிஷம்



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்: 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

வெணகுஷ்டம்
பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும நாலே வாரத்தில் குணம். சுவர்த்தக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக.
KAMALA WORKS (S M.)
Panchpota—Bengal, India.

இவ்வளவு நேரமாய் சாவடியில் கூட்டம் போட்டுக்கொண்டு பெண்பிள்ளைகளைப் பற்றி என்னமெல்லாமோ பேசினாரே, அந்தய்யா பட்டணத்தய்யாவுக்குத்தான் கேட்கிறேன்.

நந்த:—(நகைத்து) அவர்கள் இராத்திரிக்கு இங்கே சாப்பிடப் போகிறார்கள். நீ போ.

சந்த:—அந்தப் பட்டணத்து எஜமான் இங்கே வந்திருக்கிறார்களா? அவாள் வேலைக்காரன் தெற்குப் பங்களாவிலிருந்துகொண்டு தேடிக்கொண்டிருக்கிறானே?

நந்த:—அப்படியா? அவனை இங்கே அனுப்பிவிட்டு நீ போய்ப் படுத்துக்கொள்.

சந்த:—எஜமான்; உத்தரவு (தனக்குள்) நமக்கு அலுப்பு விட்டது (என்று வாய்க்குள் முணங்கிக்கொண்டே போய் விட்டான்)

நந்த:—அம்மா, சமையலாய்விட்டதா? அத்தான் அநுஷ்டானமாய்விட்டதா? மாப்பிள்ளாய், கால்- கை சுத்தி செய்யுங்கள்.

பூசை:—அம்மா, ராதா, இலை நறுக்கி வைத்திருக்கிறாயா? எங்கேயிருக்கிறது?

கார்த்:—கற்பகம், நீ இன்றைக்கு உன் மகன்கூட ஒன்றாயிருந்து சாப்பிடு.

நந்த:—அம்மா, அக்காளுக்குத் துணையாய் நீயும் ஒரு இலையில் உட்கார்ந்துகொள். மாதவனெங்கே? தாயே ராதா! தம்பி தூங்கிவிட்டானா?

பூசை:—எல்லாரும் உட்கார்ந்துகொண்டால் சாதம் படைக்கிறது யார்?

கார்த்:—அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். அத்தை, நீங்கள் உட்காருங்கள்.

நந்த:—அடே, மாதவா, ஓடிவா, தூக்கமா? கண்ணைத் துடை. நீ மத்தியானம்போல் மாமாகூடச் சாப்பிடுகிறாயா? இதோ உன் அத்தான்—உனக்கு மருந்து கொடுத்த அத்தான்—இருக்கிறார்களே அவர்களோடு சாப்பிடுகிறாயா?

மாதவன்:—இது நம்ம அத்தானா? (நாயனார் தாடியைப் பார்த்துத் திகைத்து விழிக்கிறான்) அத்தானென்று நீங்களொருவரும் நேற்று என்னிடம் சொல்லவில்லையே?

கார்த்:—நந்தகோபா, எல்லாரும் இலை முன் உட்கார்ந்துகொண்டோம். சாதம் எங்கே? வரட்டும்.

நந்த:—தாயே ராதா, சாதத்தைக் கொண்டு வா; அங்கே என்ன தர்க்கம் நடக்கிறது? அத்தானுக்கு நாணிக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறாயோ? உனக்குப் பழைய வாத்தியார்மாமா தானே? சும்மா படையம்மா.

நாய:—இன்னொருபாட்டி—ஆந்துறைப்பாட்டியுண்டே, அவளெங்கே காணவில்லை?

கார்த்:—அவள் மருமகன் கண்ணில் விழிக்கமாட்டாள்; அதாவது நந்தகோபன் அவ்வளவு பாபாத்மாவென்று அவன் கண்ணில் விழிப்பதில்லை. ஏதோ கர்னாடகம்.

நாய:—அப்படியானால், பூசைப்பாட்டி மட்டும் உங்கள் முன்புக்குத் திருத்தமாய் வட்டச் சம்மணம்போட்டு உட்கார்ந்துகொண்டாளே?

நந்த:—(நகைத்து) மாப்பிள்ளாய், உங்கள் பிதா நல்ல புண்ணியம் செய்தவர்கள்; என்னைப்போல் பாபாத்மாவல்ல.

பூசை:—அமரேசா, உன் பிதா கார்த்திகேயன் நான் எடுத்து வளர்த்த குழந்தைதான். அவனையும் என் பிள்ளைபோல் நினைத்து, நாணல் கோணல் ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. நேற்று உன்னிடம் சொல்லவில்லையா?

கார்த்:—அமரேசா, நான் பணமில்லாத மருமகன்; உன் மாமா பணக்கார மருமகன். இந்தக்காலத்தில் பணத்தின் பேரில்தானே மரியாதை? (என்று நகைத்தார்)

நந்த:—அத்தான், பணப்பேச்சு ஏன் பேசுகிறீர்கள்? என் பணத்தினால் நான் என்ன மேன்மையடைந்தேன்? உங்களுக்கென்ன குறையாய்ப் போய்விட்டது? பணமிருந்தாலும் விவேகமும், தீர்க்காலோசனையும் வேண்டாமா? ராதா என்ன தாமஸம்? தாயே, சாதம்கொண்டுவா; சும்மாவா.

ராதா:—(சமையலறைக்குள் அன்னபூரணியிடம் ரகஸ்யமாய்) என்ன பாட்டி? எல்லாரும் இப்படிச் சொல்லுகிறார்களே? நான் படைக்கலாமா?

அன்னபூரணி:—அதற்கென்ன? சும்மா படை. அயல் மனுஷனல்லவே! உன் அத்தான்தானே?

நந்த:—தாயே ராதா, உன் அத்தானுக்கு அன்னம் படைக்க என்ன நாணம்?

ராதா:—அப்பா, இதோ வந்து விட்டேன் (என்று வந்து எல்லார்க்கும் படைத்தாள்)

நாய:—அம்மா, இன்றிரவுதான் நான் அன்னத்தைத் தொடப்போகிறேன்.

கற்ப:—ஏன் அப்படி? பிறகு நீ இரவில் என்ன சாப்பிடுவாய்?

நாய:—வெறும் பால்தான். கிடைத்தால், ஏதாவது பலகாரமும் சாப்பிடுவேன்.

ராதா:—(எல்லாரும்குழம்பு விட்டுச் சாப்பிட்டு முடியவும்) அப்பா, காய்ச்சின பால் இருக்கிறது. உங்களுக்காவது மாமாவுக்காவது வேண்டுமானால்......

நந்த:—நான் பால்விட்டுச் சாப்பிடுகிறதில்லையென்று உனக்குத் தெரியாதா? வேண்டுமானால், உன் மாமாவுக்காவது உன் அத்தானுக்காவது கொடு.

கார்த்—பால் எனக்கா? ஆகா! நான் அண்டமானில் பாலும் பழமும் பாயஸமும் தானே தினந்தோறும் சாப்பிடுகிற வழக்கம்! வயிற்றுக்குச் சாதம் கிடைத்தால் அதுவே போதும்.


பயனற்றவை வேண்டாம்

இந்த ஆயிலை உபயோகித்தால் தலைநரை ஏற்படாது. வெள்ளை மயிர் கறுமை பெறும். 60 வயது வரையில் அப்படியே இருக்கும். தவறினால் இரட்டிப்பு விலையைத் திருப்பிக் கொடுக்க உத்தரவாதம். சொற்ப நரைக்கு ஆயில் ரூ. 3; பாதி நரைக்கு ரூ. 5; அதிக நரைக்கு ரூ. 9.

BALA KALA STORES,
P. O. Kansisimri, (Darbhanga.)






டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

# லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பிங்னட் வீதி—ரங்கூன்.

ராதா:—(மெல்ல) வேண்டியவர்கள் விட்டுக் கொள்ளுங்கள் (என்று பாற்செம்பை நாயனர் இலைமுன் வைத்தாள்)

நாய:—நானும் சாதத்தில் பால் விட்டுக்கொள்ளுகிற வழக்கமில்லை. (என்று சொல்லி, எல்லாரும் போஜன முடித்துக் கையலம்பி விட்டுப் பங்களாவின் முன் வராந்தாவில் காற்றுட உட்கார்ந்தார்கள்)

ராதா:—(வீட்டிற்குள் நின்றுகொண்டு, சிறிது ரகஸ்யமாய்) அத்தை, இதோ பாலும் இந்த டப்பாவில் ஜீனியுமிருக்கிறது; கொடுங்கள். பட்டணத்து வேலைக்காரனைச் சாப்பிட வரச் சொல்லுங்கள். (என்று சொல்லி உள்ளே போய்விட்டாள்)

கற்ப:—அமரேசா, இந்தப் பாலை சாப்பிடு.

நந்த:—மாப்பிள்ளாய், நீங்கள் ஏன் இரவில் சாதம் சாப்பிடுகிறதில்லை?

நாய:-மகேந்திரத்தில், ஒரு நாள் நரபதி என்னை மோசம் செய்யப் போகிறனென்று, மாணக்கர்கள் என்னைத் தேடித் தங்கள் வீட்டிற்கு வரவில்லையா? அன்றிரவு பலகாரந்தான் சாப்பிட்டேன். அதுமுதல் நேற்றிரவுவரை பால்மட்டும்தான் சாப்பிடுகிறது வழக்கம்.

நந்த:—(நாயனர் கருத்தை யறியாமல்) அப்படியா? இந்த வயஸில் உடம்பை நன்றாய்ப் போஷிக்கவேண்டாமோ? (என்று சொல்லிக்கொண்டே ஒரு மெத்தை, அதற்குமேல் ஒரு ஜமக்காளம், அதன்மேல் ஒரு வஸ்திரம் ... தட்டுத் ... தட்டாய் விரித்து, ஒரு வண்டிப்பாரம் காணும் திண்டு, தலையணை, வட்டக் குட்டை இவைகளைத் தட்டிக் கொட்டி உதறி உதறிக்கொண்டு மிகவும் அருமையாய்த் தன் மருமகன் நாயனருக்குப் படுக்கை தயார் செய்துகொண்டிருந்தார்.)

நாய:—மாமா, நீங்கள் ஏன் சிரமப்படுகிறீர்கள்? வேலைக்காரன் சாப்பிட்டுவிட்டு வரட்டும். தங்கள் வீட்டிலிருந்த ராஜு எங்கேயிருக்கிறன்?

நந்த:—அவனு? பாற்கடவில் நமக்கு வரவேண்டிய பாக்கிகளை வசூல்செய்யப் போயிருக்கிறன். ஒருக்கால் நாளை வந்து சேர்வான். மாப்பிள்ளாய், மணி பன்னிரண்டாய் விட்டது. படுத்துக்கொள்ளுங்கள் (என) எல்லாரும் படுத்துக்கொண்டார்கள். ஆனல், கற்பகம் மட்டும் இரவு நெடுநேரம் வரை நாயனர் பக்கத்திலுட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள். அப்பொழுது நாயனர் தான் மகேந்திரம் விட்டுப் புறப்பட்ட பின், ஸ்வாமி ஞானனந்தர் என்னும் குருவையடுத்து, அவரிடம் தமிழும் வைத்தியமும் கற்றுக்கொண்டே இரண்டு வருஷ காலம் ஸ்வாமிகளோடு இந்தியாவில் தேசயாத்திரை செய்துகொண்டிருந்ததாயும், பின், ஸ்வாமிகள் அமெரிக்காவுக்குப் புறப்பட்டபொழுது தன்னையும் அழைத்துக்கொண்டு போனதாயும்; போன இடத்தில், ஸ்வாமிகளுடைய அமெரிக்க நண்பர்களின் ஆதரவைப் பெற்று, அங்கே நான்கு வருஷம் தத்துவ சாஸ்திரம் கற்றுக்கொண்டிருந்ததாயும்; அதில் தேர்ச்சி பெற்று அமெரிக்காவைவிட்டுப் புறப்பட்ட சமயம், சிகாகோ நகரத்து வித்யா ஸபையார் தனக்கு எல். எல். டி. என்ற கௌரவ வித்திய பட்டம் கொடுத்தனுப்பியதாயும்; அது முதல் தன் பெயரோடு "டாக்டர்" என்ற பட்டம் சேர்ந்துவிட்டதாயும், அதன் பின், ஐரோப்பிய தேசாசாரங்களைக் கற்பதற்காக இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஒரு வருஷகாலம் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, முடிவில் ஐந்தாறு மாதங்களுக்கு முன் நேரே சென்னைக்கு வந்தபொழுது, ஞானனந்த ஸ்வாமிகளின், நண்பரும் "சைனுபஜார்" பத்திரிகையின் முதலாளியுமாகிய தீனதயாளு பந்துலு, மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளமும், வருமானத்தில் மூன்றிலொன்றுமென்று பேசி, தன்னை அதற்குப் பத்திராதிபராயிருக்கும்படி வேண்டிக்கொண்டதாயும், அத்துடன் சென்னைத் திராவிட கலாசாலையில் பிரதமாசிரியர் ஸ்தானமும் கிடைத்ததாயும்; தேக சௌக்கியத்திற்காக ஒரு மாத காலம் திரிகூடக்கி... பா... ...லி வசிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தெற்கே புறப்பட்டு வந்த மார்க்கத்தில் தன் பெற்றோரையும், மாமனர் குடும்பத்தாரையும் திடீரென்று காணும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததாயும் சொல்லிக்கொண்டிருந்தார். இத்தனை ஆனந்தமான சமாசாரங்களையும், கற்பகம் மட்டுமல்ல, நாயனர் பக்கத்தில் படுத்திருந்த கார்த்திகேயர், நந்தகோபர் ஆகிய இருவரும், வீட்டிற்குட் பட்டகசாலையில், விழித்த கண்ணேடு அயர்ந்து தூங்கிய ராதாவும் பாட்டிமாரும் ஆவலாய்க் கேட்டுக்கொண்டே படுத்திருந்தார்கள். இவ்வாறு நாயனருடைய பால்ய வாழ்க்கையைப்பற்றிக் கேட்கக் கேட்க ஆசை தீராதவளாய் அவர் தாய் கற்பகம்—தன் கையிலிருந்து கால் அணக்கூடப் பள்ளிச் சம்பளத்துக்கென்று தன் செல்வக் குமாரனுக்குக் கொடாதிருந்தும், அவர் இவ்வளவு லோகப் பிரஸித்திபெற்ற மகா பண்டிதராய்ப் பிரகாசிக்கும்படித் திருவருள் செய்த ஈசன்கருணையை நினைந்து, தன் பழய துக்கங்களையெல்லாம் மறந்து, தனக்கிணையில்லை யென்ற பூரண திருப்தியுடன், அன்றிரவு முழுதும் ஆனந்த நித்திரை செய்தாள். (தொடரும்)


# அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

## டில்பஹார்ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

**ஒரு ரூபாய்தான்**

(தபால்செலவு தனி)



**டில்பஹார் ஸோப்பு** சிறந்தசுத்திகரிப்பைத் தரும் கிருமிநாசனி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.



**உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !**

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும், **காமினியா ஸ்னோவின்** சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பில் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

**The Anglo Indian Drug & Chemical Co**

**285, Jumma Musjid, BOMBAY 2.**

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

உலகப் பிரசித்தி பெற்ற

**ஆர். மூகம் அண்டு கம்பெனியாரின்**

**நெ. 1. மணிமார்க் பட்டணம்**

**மூக்குத் தூளை**

உபயோகியுங்கள்.

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம் : ஆர். மூகம் அண்டு கம்பெனி, நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரியின் மற்றும் சில மருந்துகள்—

எவ்வித ஜுரங்களுக்கும் ஜ்வரேக ஓர் அரிய ஔஷதம்

ஊக்கம் உற்சாகம் ஊட்ட ஊர்ச்சப் அஜீர்ண, பித்தசமனி

குழந்தைகளுக்கு பாலக்ஸ் சுகபேதியாக

சோல் ஏஜண்ட்ஸ்: யுனிபெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்

திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், ஈரோடு, திருப்பூர் டிப்போக்களிலிருந்து பெற்றுக்கொள்க.

**ஆராய்ச்சி பூர்வமான**

**நவீன மருந்துகள்**

**மேத்தாஸ் காப் மிக்சர் :** எல்லாவகையான இருமல் நோய்களுக்கும், க்ஷயரோகத்திற்கும் கைகண்ட ஔஷதம்.

**விலை புட்டி 1-க்கு ரூ. 2.**

**கே. எஸ். மேத்தா & கம்பெனி,**

பிரபல மருந்து வியாபாரிகள்.

234, சைனு பஜார் — மதராஸ்.

ஹாஸ்யப்பகுதி



"போலீஸாரா..............எந்தப் போலீஸாரிடமிருந்து?

# சட்ட ஆலோசனை

"உமேதவாரி"

"சீனு, இன்று மத்தியானம் முதல் எனக்கு ஒரே கலவரமாக யிருக்கிறது. எதிர்பாராத விபத்து ஒன்று நேரிட்டுவிட்டது. என்னுடைய மோட்டாரை ஒரு ஆஸாமியின்மீது ஓட்டிவிட்டேன்" என்று அச்சத்தோடு ஆரம்பித்தேன்.

சீனு அப்பொழுதுதான் மிகவும் ஊக்கத்துடன் படித்துக் கொண்டிருந்த "முல்லாவின்" கிரிமினல் சட்ட புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு நான் சொன்னதைக் கவனத்துடன் கேட்கலானான்.

"ஆஸாமிக்கு உயிர் போய் விட்டதா?"

"இல்லை, சற்று பலமாக அதிர்ச்சி யடைந்திருப்பான், அவ்வளவுதான்"

"பலத்த காயங்கள் ஏதாகிலும்......"

"சிராய்ப்பு காயங்கள் இரண்டொன்று இருக்குமோ, என்னவோ?"

"அச்சமயம் நீ நிதானந் தவறி யிருந்தாயா?"

"ஏண்டா, சீனு, என்னைப் பார்த்தால் குடிப்பழக்கமுள்ளவனாக உனக்குத் தோன்றுகிறதா?"

"அதற்காகவல்ல, மயக்கந் தரும் பான வகைகள் எதையாகிலும் அருந்தி உன் புத்தி சுவாதீனமிராத சமயத்தில்..."

"ஹோட்டலில் வழக்கமாகச் சாப்பிடும் காப்பியையும் டிபனையும் தவிர வேறொரு பானமும் நான் அறியேன்."

"அப்படியானால் அதுகொலை செய்ய யத்தனித்த குற்றத்திலல்லவோ வந்து முடியும்." யாதொரு சித்த சுவாதீனமுள்ள நபர் அரசர் பிரானின் பாதுகாப்புக் குட்பட்ட தன்னைப்போன்ற மற்றொரு பிரஜையின் உயிருக்கு ஹானியுண்டாக்கக்கூடிய விதமாக-தெரிந்தோ அல்லது-தெரியாமலோ, செயல்புரிந்து, அதன்மூலம் மரணமேற்படுமாயின், அது கொலைக்குற்றத்தின்கீழ்வரும்" என்று சட்டம் சொல்லுகிறது. நீ சொல்லுகிறபடி அவனுக்கு ஏற்பட்ட ஊமைக் காயங்களால் மரணம் சம்பவிக்காது என்பது என்ன நிச்சயம்?" என்று சற்றுக் கவலையுடன் சீனு கேட்கும்போது எனக்கும் வாஸ்தவத்திலேயே பயமுண்டாய்விட்டது.

எனது நண்பன் சீனு அல்லது ஸ்ரீனிவாஸன் (எம். ஏ. பி. எல்) சட்டப் பரீக்ஷை கொடுத்துவிட்டு சர் கில்லேடி சாமிகிருஷ்ணனிடம் அப்ரெண்டிஸாகத் தொழில் கற்றுக் கொண்டிருக்கிறான். இதற்குள்ளாகவே அவன் தன்னுடைய அபாரமானசட்ட ஞானத்தைப் பிறரறியுமாறு வெளிப்படுத்திக்கொள்வதில் எந்தப் பெரிய வக்கீலுக்கும் குறைந்தவனாகக் காட்டிக்கொள்ளவில்லை. எடுத்ததெற்கெல்லாம் ஒரே சட்டம்தான். ஆனால் எனக்குமட்டும் அவனுடைய வித்பத்தியில் பூர்ண நம்பிக்கை இன்னும் ஏற்படவில்லை.

"அப்படித்தான் இருந்தபோதிலும் அது எப்படி கொலைபுரிய முயன்ற குற்றத்தைச் சார்ந்ததாகும். அது மோட்டார் சட்டத்தின் கீழல்லவோ வழக்காக எடுத்துக்கொள்ளப்படும்?" என்று என்னுடைய சந்தேகத்தைத் தெரிவித்துக் கொண்டேன்.

"இதோபார், யாதொரு நபர் போதையினால் நிதானந் தவறி யிருக்கும்போது யந்திரங்களினால் செலுத்தப்படும் வாகனமொன்றை ஓட்டுவானாயின் அதன் பொருட்டு அவனுக்கு 6 மாதம் தண்டனை விதிக்கப்படலாம் என்பது சட்டம். அத்தகைய அஜாக்கிரதையினால் பிறருக்கு மரணமேற்பட்டால் அது கொலை புரிந்த குற்றத்தின்கீழ்தான் நிச்சயமாகப் பதிவுசெய்யப்படும்"

"எப்படி யிருந்தபோதிலும் அவன் சாகவில்லை. உயிரோடுதானிருக்கிறான். என் கதையைப் பூராவும் கேட்டுவிட்டு அப்புறம் உன் சட்ட ஆராய்ச்சிகளையெல்லாம் சொல்லியழேன்" என்றேன் நான் சற்று கோபத்துடன்.

சீனு அதைக் கேட்டதும் மேஜை டிராயரைத் திறந்து ஒரு நோட்டையும், பென்ஸிலையும் எடுத்துக்கொண்டு எனக்கெதிரே உட்கார்ந்துகொண்டான். அதைப் பார்த்ததும் ஸர் ஜான் ஸைமன்தான் எனக்கு சட்ட ஆலோசனைகூறப் போகிறாரோ என்று தோன்றிற்று.

"உன்னுடைய குறிப்புகளையெல்லாம் உடைப்பில் போடு, உன்னுடைய சட்ட ஞானம் ஒன்றும் எனக்கு இப்பொழுது உதவப்போவதில்லை."

சீனு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "உனக்குத் தெரியாது. ஒவ்வொரு 'சின்ன பாயிண்டும்' கூட சமயத்தில் எவ்வளவோ உதவியாகயிருக்கும். சரி, இப்பொழுது வாஸ்தவத்தில் நடந்ததை நடந்தவாறாக ஒன்று விடாமல் ஞாபகமாய்ச் சொல்லு பார்ப்போம்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டு என்னுடைய பதிலை எதிர் பார்க்கத் தொடங்கி விட்டான்.

அதற்குமேல் அவனிடம் எதிர் வாதம் செய்வது வீணென்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்கு வேண்டுமானால் சீனுவைத் தெரியாது. அவனுடைய சுபாவம், ஒரு விஷயத்தைப் பூராவும்


செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாகவிருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக்கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7அணா.

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P. O. Box 2186 Bombay.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி, 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

தெரிந்து கொண்டேயாக வேண்டுமென்று. அவன் மனம் வைத்து விட்டால், அதனின்றும் அவனைத் திருப்புவதென்பது சாமானியமானதல்ல; அவனிடமிருந்து தப்புவதற்கு ஒரு வழிதானுண்டு. அதாவது விஷயத்தையப்படியே ஒப்புவித்து விடுவதுதான்.

"ஸரி, முதலில் அது என்னுடைய தப்பிதமேயன்றி, நான் காரை எவ்வளவோ மெதுவாகத்தான் ஓட்டிக் கொண்டு போனேன். அச்சமயம்..."

"நடுவில் ஒரு வார்த்தை, அந்தக் கார் யாருடையது?"

"என்டா, நீ என்ன ஆகாயத்திலிருந்து குதித்து விட்டவன் மாதிரி என்னைக் கேட்கிறாயே? எனக்குக்'கார்'ஏதுடா, இந்த லக்ஷணம் உனக்குத் தெரியாததுபோல் கேட்டுக் கொண்டே ப்போனால்...எந்தக் காரிலா...ராஜாவின் காரில் தான்."

"ஆமாம், ராஜா தன்னுடைய காரை உபயோகித்துக் கொள்வதற்கு உனக்கு அனுமதி கொடுத்திருந்தானா?"

"அவன் வீட்டிலில்லை. ஆதலால் ஷெட்டிலிருந்து நானாகக் காரை எடுத்துக்கொண்டு கிளம்பினேன். நான்தான் எத்தனையோ தடவை அவனுடைய காரை ஓட்டிக்கொண்டு போயிருக்கிறேனே! அவன் சாதாரணமாய் இந்த அற்பத்திற்கெல்லாம் ஆக்ஷேபிக்கக் கூடிய பேர்வழியல்லவென்பது உனக்குத் தெரியாதா?

"விஷயம் அதுவல்ல, என்னுடைய கேள்வி... பதில் ...மூர்த்தி, ...விக்கு நேரடியான ...வேண்டும். ராஜாவின் முன் அநுமதியின்றி நீ அவனுடைய காரை ஓட்டியிருக்கிறாய் அல்லவா?"

நான் அரை மனதுடன் "அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்" என்றேன்.

சீனுவின் முகத்தில் தோன்றிய பிரகாசத்தைப் பார்க்க வேண்டுமே!

"எந்தக் காரையும் அதனுடைய சொந்தக்காரரின் முன் அநுமதியின்றி பிறர் ஓட்டிச் செல்வது புதிய மோட்டார் சட்டத்தின்கீழ் குற்றமாகும். இந்த ஒரு குற்றத்திற்காகவே உன்னை ஜயிலுக்கு அனுப்பிவிடலாமே"

"அது குற்றமோ இல்லையோ, எனக்குத் தெரியாது. நான் காரை மெதுவாகத்தான் ஓட்டிக்கொண்டு போனேன்"

"எத்தனை மைல் வேகத்தில்?"

"சுமார் 20 மைல் வேகத்திற்கு மேலிராது"

"நீ அதைக் குறித்து பிரமாணமாய்க் கூற முடியுமா?"

"அல்லது 25 மைலுக்கு மேலாக ஒரு பொழுதுமிருக்க முடியாது"

"சரி, எந்த இடத்தில்"

"பீச்சு ரோட்டில்"

"சரி, 20 மைலுக்கதிகமான வேகத்தில் ஓட்டியிருந்தால் உனக்கு 25 ரூபாய் அபராதமாவது கிடைக்குமென்பது நிச்சயம்! நோட்டு புக்கில் அவன் எதையோ குறித்துக் கொண்டு "அப்புறம் என்ன நடந்தது?" என்று ஆவலுடன் வினவினான்.

"அப்புறமா, அந்த மனிதன் நேராக அம்புபோல் என் காருக்கெதிரே ஓடிவந்தான். நான் என்னாலானமட்டும் "பிரேக்குகளை"ப் போட்டுப் பார்த்தேன். ஆனால் சனியன் மாதிரி அவை ஒன்றாவது சரியாக வேலை செய்யவில்லை".

"என்ன, சரியாக வேலை செய்யாத பிரேக்குகளுடன் கூடிய மோட்டாரை ஓட்டிப் பொதுஜன நடமாட்டத்துக்கு ஆபத்துண்டாக்குவது...... போகப்போக ரஸமாகத்தானிருக்கிறது...அதற்குமேல்..."

"அவன் முதுகில் கார் உராய்ந்தது. ரேடியேட்டர் அவனை இரண்டு கஜ தூரத்திற்குத் தாங்கிக் கொண்டே போயிற்று. அவ்வளவுதான்."

"அவனுடைய எலும்புகள் ஏதாவது முறிந்து......"

"அதெல்லாம் ஒன்றுமில்லை"

"அவனுக்குப் பிரக்ஞை யாவது இருந்ததா?"

"பிரக்ஞையா, அதற்கு மாறாக அவனுக்கு இரண்டொரு நல்ல வார்த்தை சொல்லி என் காரிலேயே ஏற்றிக்கொள்ளும் எண்ணத்துடன் நான் அவன் அருகில் போனபோது அவன் என்னை திட்டிய திட்டை நீ கேட்டிருந்தால்... ஐயா, உன்னை ... யாரோ எவரோ ... கடைசியில் நானே பொறுமையையிழந்து வேண்டுமென்றே அவன் என் காரை வழி மறித்துக் குறுக்கிட்டதற்காகத் திருப்பித் திட்டவேண்டியல்லவோ ஆய்விட்டது..."

"அவனை யவ்வாறு பயமுறுத்தியது மற்றொரு குற்றம்"

"அதற்கப்புறம் எங்கள் இரண்டுபேருக்கும் ஒருவாறு கோபந் தணிந்தது. நான் அருகிலுள்ள காப்பி ஹோட்டலுக்கு வரும்படியாக அவனை அழைத்தேன். சற்று சூடான காப்பி தேகத்தில் ஏறினால் அவன் ஆத்திரம் சற்று அடங்கும் என்பது என் எண்ணம்.

"இதன்மூலம் நேர்மையான நியாயம் வழங்குவதை ஒழுங்கீனமான முறைகளில் தடுக்க முயன்றிருக்கிறாய்."

"நாங்களிருவரும் ஹோட்டலுக்குப் போனோம். அதன் பிறகு நான் அவனை வீட்டில் கொண்டுவிட்டேன்."

"இருந்தாலும் அவன் உன் மீது சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் அல்லவா?"

"அதுதான் இல்லை. விபத்து நேர்ந்தது தன்னுடைய தவறினாலேயொழிய என்னாலல்ல என்று அவனே ஒப்புக் கொண்டுவிட்ட பிறகு நடவடிக்கையாவது நடவடிக்கை? நாங்கள் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிய மனமிராமலல்லவோ பிரிந்தோம்." இதைக் கேட்டதும் சீனுவின் உற்சாகமெல்லாம் அடியோடு பறந்து போய்விட்டது. இருந்தாலும் ஒரு நிமஷத்திற்குப் பிறகு அவன் "அப்படியானால் போலீஸாரிடமிருந்து ஏதாவது உபத்திரவம் நேருமென்று எதிர்பார்க்கிறாயாக்கும்" என்றான்.

"போலீஸாரா...எந்தப் போலீஸாரிடமிருந்து?"

"இந்த சம்பவத்தைக் குறித்துக்கொண்ட போலீஸ்காரனிடமிருந்துதான்"

"அதுவுமில்லை. அங்கே போலீஸ்காரனுமில்லை. ஏழுவுமில்லை. எங்கள் இரண்டு பேரையும் தவிர ஒரு ஈ காக்கை கூட அப்பொழுது அங்கில்லை."

"ஒரு சாட்சி கூடவா இல்லை."

"ஊ ஹூம்..."

சீனு நாற்காலியைவிட்டு எழுந்திருந்து உதட்டைப் பிதுக்கிக்கொண்டே தன்னுடைய குறிப்புகளையெல்லாம் சுக்கு நூறாகக் கிழித்து ஜன்னல் வழியாகக் காற்றில் பறக்கவிட்டான்.

"அப்படியானால்'கேசு' தான் கிடையாதே! பின் நீ எதற்காகத்தான் கலவரமடைந்திருக்கிறாயோ, எனக்குத் தெரியவில்லையே"!

"அதுவா, அதைச்சொல்லத்தான் இவ்வளவுநாழியாயிற்று. ராஜா தன்னுடைய மோட்டாரின் மட்கார்டுக்கு ஏற்பட்ட அலங்கோலத்தைப் பார்த்தால் மறுபடியும் அதை உபயோகிப்பதற்கு என்னை அனுமதிக்க மாட்டானே. அதற்கென்ன செய்வது என்று உன்னை ஆலோசனை கேட்கத் தான் வந்தேன்."


THIS IS NOT A HAIR-DYE




உங்கள் கூந்தல் ஒளியிழந்திருக்கிறதா?—அதனால் உங்களுக்கு வயது அதிகமாகிவிட்டாற்போல் தெரிபடுகிறதா?—அப்படியாயின உங்கள் மருந்து வியாபாரியிடம் ஓடி ஏதாவதொரு சாயத்தை வாங்கித் தடவிக்கொள்ளாதீர்கள். கேஷ்கலாவை உபயோகியுங்கள். அற்புதமான கூந்தல் லோஷன்.

Obtainable from:—

அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ் வி. ஜே. சேத், பந்தர் தெரு, மதராஸ் டி. ஷேகுஸ்தான் & கம்பெனி, பெங்களூர் சிடி & கண்டோன்மெண்டு. ஸ்ரீ கணேஷ் மார்ட், ராஜா தெரு, கோயமுத்தூர். எக்ஸ்-ட-பேல்வா, பிரின்ஸ் தெரு, கொழும்பு.

Further Inquiries to:—
KESHKALA CHEMICAL CO., P.O. Box No.(M)5506. Bombay 14.



# இந்திய தேயிலை பானத்தால்



# நிலையான திடத்தைப் பெறு

இந்திய தேயிலைப் பானம் கோடையில் களைப்பை நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கிறது. குளிர் காலத்திலோ வேண்டுமளவு உஷ்ணத்தைக் கொடுத்து சந்தோஷத்தையும் தருகிறது. அதிகாலையில் சாப்பிட்டால் சோம்பலை நீக்கும். அந்தியில் அருந்தினால் சுகத்தைக் கொடுக்கும். வழக்கமாய் இந்திய தேயிலைப் பானம்செய்து எப்பொழுதும் ஒரே நிலைமையில் இருக்கக் கூடிய ஆரோக்கியத்தையும் சந்தோஷத்தையு மடையுங்கள்.

இன்றையி லிருந்தே டீ அருந்தும் பழக்கத்தை கைக்கொண்டு அதன் பலன்களை அனுபவியுங்கள்.



## தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்திய தேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

**இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் - இந்திய தேயிலை**

# வயது வந்ததும் உங்கள் குழந்தை சட்ட சபையில் வாதாடலாம்...

நம் தேசத்தின் நிலைமை நாளுக்கு நாள் மாறிவருகிறது; முன்னைவிட இப்பொழுது சட்ட சபைகள் அதிக பொறுப்பு வாய்ந்த சபைகளாக மாறிவருகின்றன; திறமையும், தியாக உணர்வும் மிகுந்தவர்களே இப்பொழுது சட்ட சபைகளில் அங்கம் வகிக்கத் தகுதியானவர்கள் என தேசம் முடிவு கூறுகின்றது.

இன்னும் சில வருஷங்களுக்குப் பிறகு சட்ட சபைகளே தேசத்தின் கதியை நிர்ணயிப்பவையாக இருக்கும்; அப்பொழுது உயர்குணமும், மனோ தைர்யமும், தீவிர நோக்கமுடையவர்களே சட்ட சபைகளில் அமருவார்கள். மனோ திடத்திற்குத் தேக திடம் தான் ஆதாரம்.

யார் கண்டு வைத்தார்கள்? உங்கள் குழந்தையே அக்காலத்தில் சட்ட சபைக்கு ஒரு அபேட்சகராக நிற்கலாம்; ஓட்டர்களின் நம்பிக்கைக்கு அவர் பாத்திரமாக விருக்க வேண்டாமா? ஜனங்களுக்காக அவர் நன்றாக வாதாடவேண்டாமா? அவரிடம் செல்வம் நிறைந்திருக்கலாம்; மகா மேதவியாகவிருக்கலாம்; கல்வி கேள்விகளில் கரைகண்டவராக விருக்கலாம்; ஆனால் என்ன இருந்து என்ன பயன்? திட ஆரோக்கியம் தான் யாவற்றிலும் முக்கியமானது.

ஆகவே உங்கள் குழந்தைக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பதுடன் நின்றுவிடாதீர்கள்; அவன் தேக விஷயத்தில் கவனம் செலுத்துங்கள்; தேகத்திற்குப் புஷ்டியும், ஆரோக்கியமும் அளியுங்கள். இவற்றைத் தருபவை A & D விட்டமின்கள்.

● விட்டமின்கள் பூரணமாகவிருப்பதால் மாலர்ஸ் ஸூபர் ஸ்ட்ரெங்த் காட்லிவர் ஆயில் (Moller's Super Strength Cod Liver Oil) மற்ற மட்டமான சரக்குகளைவிடச் செலவு குறைந்தது; எப்படியெனில், இதில் கொஞ்சம் கொடுத்தாலும் போதுமானது; 15 நாட்களுக்கொருதரம் சரக்கு வந்துகொண்டிருப்பதால் ஆயில் சுத்தமாகவே இருக்கிறது.

விட்டமின்கள் A & D பூரணமாக நிறைந்தது காட்லிவர் ஆயில்; ஆனால் எல்லா காட்லிவர் ஆயில்களிலும் ஒரே ரீதியான விட்டமின்களிருப்பதில்லை; காட்லிவர் ஆயில்களில் சிறந்தது **மாலர்ஸ் ஸூபர் ஸ்ட்ரெங்த் காட்லிவர் ஆயில்** (Moller's Super Streng[illegible]) இது நார்வே தேசத்தில் தயாராகும் உயர்ந்த காட்லிவர் ஆயில்; பிரத்யேக முறைப்படி எடுக்கப்படுகிறது; சுத்தமானது; ருசியானது; விட்டமின்கள் நிறைந்தது.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்




# MOLLER'S
## Super Strength COD LIVER OIL

மொத்த ஏஜண்டுகள்:

சவுத் இண்டியன் மர்க்கண்டைல் கம்பெனி,

12, மன்ரூ தெரு :: பார்க் டவுன் :: மதராஸ்.



Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road Madras—*Editor* C. R. Srinivasan, B.A.